

நீயில்லாமல்
நானும்
நானல்ல...
நீயில்லாமல் நானும் நானல்ல

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : நீயில்லாமல் நானும் நானல்ல... |
| ஆசிரியர் | : ஆர்.மகேஸ்வரி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : டிசம்பர், 2007 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 Kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 128 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : இராமு நிலையம் 23, காசிம் தெரு, இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.40.00**

| | |
|---|---|
| [illegible] அச்சு | : [illegible] சென்னை-18, ☎ 98441-01753 |
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட் [illegible] |


# நீயில்லாமல் நானும் நானல்ல...

# நீயில்லாமல் நானும் நானல்ல...

## 1



மாலை நேரத்தென்றலின் தாலாட்டில் மயங்கி... இரவுத்தாயின் மடியில் சொகுசாய் தலை சாய்ந்து உறங்க, உற்சாகமே வடிவாய்... துள்ளலோடும், துடிப்போடும் புறப்பட்டுக் கொண்டிருந்தாள் சூரியக்குழந்தை!

கல்யாண மண்டபம்!

நகரில் உள்ள அத்தனை பணக்காரர்களும் உள்ளே நிரம்பி வழிந்தனர். பட்டும்... தங்கமும் ஜொலித்தன. வைரங்கள் டாலடித்தன. அத்தனை பேரும் தங்களுடைய வசதிகளை ஆடைகளாலும், ஆபரணங்களாலும் போட்டி போட்டுக் காட்டிக் கொண்டிருந்தனர்.

'அரவிந்தன் - கவுசல்யா.'

இந்த இருவரின் நிச்சயதார்த்த விழாவினைத் தான் அந்த இரண்டு குடும்பங்களும் பெரிய கல்யாண வைபோகம் போல தடபுடலாக செய்கின்றனர்.

நாதஸ்வர இசையின் ஓசையும், சலங்கை ஒலிபோல பெண்களின் சிரிப்பு சத்தமும், மானைப்போல துள்ளி விளையாடும் குழந்தைகளின் மழலை கூச்சலும், கலர் பார்த்து ஏக்கப்பெருமூச்சு விடும் இளைஞர்களின் பட்டாளமும்... இளைஞர்களின் தூண்டில் பார்வைக்கு சிக்காமல் தங்களின் அழகில் கர்வம் கொண்டு கிறக்கத் தோடும் பந்தாவோடும் வளைய வரும் இளைஞிகளுமாய்... என்று இது ஒரு புறமிருக்க,

தங்களின் நேரத்தை வீணடிக்காமல் வியாபார ஒப்பந்தம் பேசும் பெரிசுகளின் ஜோட்டியுமாய் மண்டபமே ஒரே அமளி துமளியாய் காணப்பட்டது.

இந்த விசேஷத்திற்கும், இத்தனை கலகலப்பிற்கும் தனக்கு துளிகூட எதுவும் சம்மந்தம் இல்லாதது போல, மண்டபத்தின் பின்புறம் சற்று தள்ளி மரத்தடியில் இருந்த பெஞ்சில் சோகமே உருவாய்... (முகமெல்லாம்



'அரவிந்தன்!'

வர்த்தக உலகில் கொடி கட்டிப் பறக்கும் பெரிய பிசினஸ்மேன். நிரம்ப கற்றவன். சாமர்த்தியமானவன். இந்த மூன்றாண்டுகளில் தந்தையின் தொழில்களை அமோகமாய் முன்னேற்றிய தந்திரசாலி.

ஆறடிக்குக் குறையாத உயரமும், சந்தன மேனியும்... பரந்து விரிந்த தோளும் அழகிய முகத்தில் இன்னும் அழகுக்கு அழகு சேர்க்கும் அந்த அடர்ந்த கரிய மீசையும், சிரிக்காமலேயே சிரிப்பது போல தோற்றமளிக்கும் உதடுகளும், காஷ்மீர் கண்களுமாய் இருக்கும் அவனைப் பார்க்கும் எந்த பெண்களும் ஏக்கப் பெருமூச்சு விட்டு திரும்பத் திரும்ப பாராமல் போக மாட்டார்கள்.

அப்படி இருக்கும் அழகு தேவன், இன்று கூனி குறுகி ஒளியிழந்த முகத்துடன் தனது இயலாமையை மறைக்க ரத்தமென சிவந்த கண்களுமாய் அவன் அசோக வனத்தில் சீதைக்கு பதில்... ராமன் இருந்திருந்தால் எப்படியிருக்குமோ அதைப்போல அமர்ந்திருந்தான்.

தன்னுடைய எண்ணம், கொள்கை அத்தனையும் பறிக்கப்பட்டது போல உணர்ந்தான். அவனுடைய உணர்ச்சிகளை - ஆசைகளை - ஏக்கங்களை அம்மா புரிந்து கொள்ளாமல் 'தற்கொலை, அது இது என்று வாதிட்டு மிரட்டி அடி பணிய வைத்து, பிடிக்காத ஒருத்தியுடன் இன்று நிச்சயதார்த்த விழாவினையும் ஏற்பாடு செய்து மகிழ்ச்சியாய் வளைய வரும் அம்மாவின்

யில் தட்டிக் கொடுத்தும் அவன் மகிழ்ச்சியே தன் வாழ்க்கையாய் கருதிய... அன்பே உருவான என் ஆருயிர் அம்மாவா? இப்படியெல்லாம் மாறி விட்டாள்.

தன் வருங்கால மனைவியைப் பற்றிய அவனுடைய கற்பனைகள் அனைத்தும் தீயில் இட்ட கவிதையாய் பொசுங்கிப் போயிற்று.

கவுசல்யாவைப் பார்த்த மறுவினாடியே மிரண்டு விட்டான்.

'பால் போன்ற பளிங்கு முகம்... செயற்கை சாயம் பூசாமலே சிவந்த உதடுகள்... பனியைப் போன்று குளிர்ச்சி தரும் கண்கள்... கை தேர்ந்த சிற்பி ஒருவனால் செதுக்கியது போன்ற அளவான உடம்பு, உயரம் என மனதிற்குள் கற்பனையாய் ஒரு உருவத்தை மனனம் செய்திருந்தவன் துடித்து விட்டான்.

அப்போது அவன் மனக்கண்ணில் கற்பனைத் தேவதை தோன்றி கேலிப்புன்னகை வீசி விட்டு மறைந்தே போனாள்.

பொம்மையை தொலைத்த குழந்தை போல் அவன் மனம் ஓலமிட்டது.

மருந்துக்குக் கூட அவனுடைய தேவதையின் சாயல் அவளிடம் இல்லை. கவுசல்யாவைப் பார்த்த முதல் பார்வையிலேயே இதயத்தில் பூகம்பம் வெடித்தது. மனசெல்லாம் பற்றி எரிய, முகம் சுளித்து அருவெறுத் தான். அம்மாவிடம் அங்கேயும் மற்ற பெண்களைப் பார்த்து பாடிய பழைய புராணம் 'பிடிக்கவில்லை' என்பது தான்.

கவுசல்யா விடுவாளா? எங்கே தட்டினால் காரியம் கை கூடும் என யோசித்து... பெண் பார்க்க வந்தபோது,



அம்மாவின் மேல் வைத்திருந்த அன்பு, பாசம், மரியாதை, தாயின் சொல்லிற்கு கட்டுப்பட்டு மதிப்பளித்தது. கண்டவள், அரவிந்தனின் தாய் சாரதாவைப் போனில் நச்சரிக்கத் தொடங்கினாள். அடுத்த அதிரடியாக... அவன் இல்லாத சமயம் பார்த்து, வீட்டிற்கே சென்று பாசமுள்ளவள் போல... அன்பு மழை பொழிந்து உலகிலேயே தன்னைப் போல் நல்ல பெண் இருக்க மாட்டாள் என்பது போல நடந்து சாரதாவைப் பிடித்து மயக்கி சாதித்து விட்டாள்.

அவள் ஆசைப்பட்டு இதுவரை கிடைக்காதது எதுவுமே இல்லையெனலாம். கோடீஸ்வரனின் செல்வ சீமாட்டி தவமிருந்து பெற்ற ஒரே மகள்.

தாயின் பிடிவாதத்தின் முன் அவன் பிடிவாதம் காணாமல் போய்விட்டது. அம்மாவை கொஞ்சியும், கெஞ்சியும் பலனில்லை. மனசேயில்லாமல் விட்டேற்றியாய் சம்மதித்து வைத்தான்.

அப்போது தான் பிறந்த வீட்டிற்கு உறவாட வந்திருந்த அரவிந்தனின் அத்தை பெரிய கல்லாய் பார்த்து அவன் தலையில் போட்டாள்.

"அரவிந்த் திரும்ப மாறமாட்டான் என்று எவ்வாறு நம்புவது? உங்கள் தற்கொலை அது இது என்ற பயமுறுத்தலால் தலையாட்டியிருக்கான். வேதாளம் திரும்பவும் முருங்கை மரம் ஏறினால்... என்ன செய்வீர்கள்?"

சாரதாவின் நாத்தனார் தூக்கிப்போட்ட வெடிகுண்டினால் திகைத்து விட்டனர், அவனுடைய பெற்றோர்கள்.

"அரவிந்த் மாறாமல் இருக்க வேண்டுமென்றால்...

ஆடம்பரமாய் நிச்சயம் செய்து விடுவது நல்லது. மான அவமானத்திற்கு பயந்து... நம் அரவிந்தனால் ஒன்றுமே செய்ய முடியாது அண்ணி! எல்லாம் உங்கள் நன்மைக்குத் தான் அண்ணி சொல்கிறேன். நான் சொல்வதை... நன்கு ஆராய்ந்து பார்த்து... பிடித்திருந்தால் செய்யுங்கள்!"

அங்கு யதேச்சையாய் வந்த அரவிந்தன் அத்தையின் சொற்களால் அதிர்ந்து போனான். ஏதாவது செய்து. அல்லது கடவுள் அருளால்... எக்காரணம் கொண்டாவது திருமணம் நிற்காதா? எனக் காத்திருந்தவன்... தலையில் அத்தையின் சொற்கள் ஒரு கூடை நெருப்பை அள்ளிக் கொட்டியதுபோல இருந்தது. அத்தையின் கழுத்தை... நெரித்துக் கொல்ல வேண்டும் போல எழுந்த சீற்றத்தை படாத பாடுபட்டு அடக்கிக் கொண்டான்.

## 2



வானம் இருட்டத் தொடங்கியது.

காலடி ஓசை கேட்டு... தன்னை இயல்பு நிலைக்கு மாற்றிக் கொண்டு திரும்பிப் பார்த்தான். கணேஷ், ராஜா, திலீப்... எனத் தனது நண்பர்கள் பட்டாளம். அவர்கள் தன்னை வம்புக்கு இழுத்து எவ்வாறு கதறடிக்கப் போகின்றனரோ எனப் பயந்தான்.

"டேய் அரவிந்தா... படிக்கறே காலத்தில் பெண்கள் பக்கமே திரும்பக்கூட மாட்டே! சாமியாராச்சே..." ராஜா முடிப்பதற்குள்



"சாமியார்தான்! இப்போ சம்சாரியாகப் போறார்!"

திலீப் அபிநயித்துச் சொல்ல... அத்தனை பேரும் கைத்தட்டிச் சிரித்தனர். தன் கவலையை மறந்து அரவிந்தனும் சிரித்து விட்டான்.

"பெண்களைப் பற்றி பேசினாலே முகம் சுளிப்பே! காதைப் பொத்திக்குவே... ம்ம்... இப்போது என்னடா வென்றால் எங்களுக்கு முன்னாடியே மேரேஜா?" சொல்லி விட்டு நக்கலாய் தலையசைத்தான் கணேஷ்.

"சரி அதெல்லாம் போகட்டும் விடுங்கடா. ஆமாம் அரவிந்த்... எத்தனை குழந்தைகள் பெத்துக்குவிங்க?" திலீப் சிரிக்காமல்... சீரியசாய் கேட்க... அரவிந்தனுக்கு இருந்த மனநிலையில் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"ஒன்றா...? இரண்டா...?" மேலும் அவனை வம்புக்கு இழுக்க.

"டஜன் தான். கேக்கறான் பாரு கேள்வி!" அரவிந்தன் சீறினான்.

"என்னடா மச்சி... சில்ரன்ஸ் பார்க் வைக்கப் போறீயா?"

"ஆச்சர்யமா இருக்கே! அமுல் பேபி அரவிந்தனா இப்படியெல்லாம் பேசுவது!"

"விரல் சூப்பி பையனா இருந்தவன் எப்போடா மாறினே? ம்ம்... எங்களுக்கெல்லாம் பொறாமையா இருக்கே!"

"அண்ணியோட அழகுல விழுந்தவன் இன்னும்

"நீ சொல்வது நூறு சதவீதம் சரிதான் மாமா" இப்படி ஆளாளுக்கு கிண்டலடிக்க...

அரவிந்தன் நொந்து போய் விட்டான்.

"ச்சே! என்னடா இது? என் நிலைமை புரியாம... உங்க திருவாயை மூடுங்கடா!" அரவிந்தன் கையெடுத்துக் கும்பிட்டான்.

திலீப் கேட்டான். "முக்கியமா ஒண்ணை மறந்து விட்டோம். ஆமா லவ்வா...?"

"டேய்... டேய்... போதும்டா சாமிகளா! இதுக்கும் மேலே என்னால் தாங்க முடியாது... போங்கடா... அங்கே போய் நம்ம பிரண்ட்ஸை என் சார்பா இன்வைட் பண்ணுங்க... என்னை கொஞ்சம் தனியே விடுங்கடா... ப்ளீஸ்..." அப்பாவியாய் அவன் கெஞ்ச...

அப்போது அங்கே கௌசல்யா வேகமாய் வந்தாள். அரவிந்தனைப் பார்த்து தலையசைத்து அருகே அழைத்தாள். மகா மட்டமாய் கண்ணை சிமிட்டி வேறு கவர்ச்சியாய் சிரித்தாள்.

பதறிப்போனான். அவள் செய்கையால் வெட்கிப் போனான். 'என்ன மாதிரிப் பெண் இவள்!

நாலு பேர் இருக்கிறார்களே... அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று துளிகூட இல்லையா! இந்த லட்சணத்தில் அவளோடு எப்படித்தான் குடும்பம் நடத்துவதோ!' இப்படி அரவிந்தன் நினைக்கும்போதே நெஞ்சில் நெருஞ்சியை வைத்து தேய்த்தது போல இருந்தது.

"ஒன்மினிட் ப்ரண்ட்ஸ்" என்று அவன் அவளின் அருகில் ஓட... "கல்யாணத்துக்கு முன்பே ஒரு கண்ணை [illegible]



என்ன கூத்தெல்லாம் செய்வாளோ!" என்று நண்பர்கள் நக்கலடித்துக் கொண்டு சென்றது அரவிந்தனின் காதில் விழுந்தது.

கௌசல்யாவின் அதீத அலங்காரமும்... கண்ணைப் பறிக்கும் லிப்டிக்கும் ஏனோ அவனுக்கு அசிங்கமாய் தெரிந்தது.

கல்லூரி நாட்களில் நண்பர்களிடம் பெண்களைப் பற்றி வாதிட்டது ஞாபகத்தில் மின்னியது.

பெண்கள் எப்பொழுதும் இயற்கையாய் இருக்க வேண்டும்... நிலவு போன்ற களங்கமில்லாத முகமும்...

மைத்தீட்டிய மான் விழிகளும்... ரோஜா இதழும்... நீண்ட தலைமுடியும்... அடர்த்தியாக கட்டிய மல்லிகைச் சரம் சூடிய நீண்ட பின்னலுடன் அழகாய் நடந்து வரும் பெண்களுக்கும்...

மிடியும், ஜீன்ஸும், டாப்ஸும், பாப் தலையுமாய் 'ஐ லவ் யூ! கிஸ் மீ!' என்ற வாசகங்கள் தாங்கிய பனியனுமாய் வரும் பெண்களுக்கும் வித்தியாசம் காண்பவன்.

'முன்னது பரத நாட்டியம் போல மனதிற்கு இதத்தையும்... இன்பத்தையும் ஏற்படுத்தும்.'

'பின்னது டிஸ்கோ... பிரேக் டான்ஸ் போல உணர்ச்சியைத் தூண்டி மனதிற்குள் ஒரு பெரும் பூகத்தை ஏற்படுத்தும்.' என அரவிந்தன் முடிக்க...

'சரியான முட்டாள்டா நீ! சொல்ற லட்சணத்துல ஒரு பொண்ணை கொண்டு போய் நிறுத்தினா கிராமத்தான் கூட கட்டிக்க மாட்டான். நீ சொல்ற லட்சணத்துல எந்த ராஜகுமாரி வந்து மாலையிட்டு... மன்னவா... நாதா... என்று அழைக்கப் போறாளோ!' திலீப் சொல்ல அனைவரும் கலகலவெனச் சிரித்தது ஞாபகத்திற்கு வந்தது.

"ப்ச்... ஒண்ணுமில்லே!"

"நோ... ஏதோ சம்திங் ராங்..."

"இல்ல... வந்து..." இழுத்தான். தன் எண்ணத்தை சொல்ல விருப்பமில்லை. 'போயும்... போயும்... இந்த பொல்லாத ராட்சஷியிடமா சொல்ல வேண்டும்!'

"ம்... கமான்யா..."

அரவிந்தன் தயங்கியபடியே கூறினான்.

"வந்து... வந்து... எனக்கு இந்த செயற்கையே பிடிக்காது. அதுவும் இவ்ளோ மேக்கப்... இவ்ளோ நகைகள்... பாப் செய்யப்பட்ட தலை... பளிச்சின்னு முத்தமிடத் தூண்டும் உதடுகள்..." முகம் சுளித்து சொல்லிக் கொண்டு வந்தவனை இடைமறித்தாள்.

"எனக்கு ஓ.கே... கமான்யா..." அவள் கூற... புரியாமல் விழித்தவனிடம் சொன்னாள்.

"கிஸ் மீ..." உதடுகள் குவித்தாள்.

அரவிந்தனுக்கு எங்கிருந்துதான் இவ்வளவு கோபம் பொங்கியதோ... பட்டென்று அறைந்து விட்டான்.

கௌசல்யா கன்னத்தைப் பிடித்துக் கொண்டாள்.

3



அரவிந்தன் தன்னுடைய செயலை எண்ணி வேதனை...



அவள் பூவாய் மலர்ந்தாள்.

"இதான்... இதான்... இந்தக் கோபம்தான் உங்க கிட்ட ரொம்ப ரொம்பப் பிடிச்சது கண்ணா! அந்தி வானமா சிவக்கும் இந்த முகம்... ம்மா." என்று அவன் கன்னத்தை கிள்ளி முத்தமிட்டாள்.

தீயை மிதித்தவன் போல் அலறினான்.

"ஏய்... ஏய்... நீ ஓவரா போறே...

உன்னை எனக்குப் பிடிக்கலே... பிடிக்கலேன்னு எத்தனை வாட்டி சொல்வது? அறிவு கெட்ட முண்டம்! நிச்சயமும் வேண்டாம்... ஒரு மண்ணும் வேண்டாம்னு போயிடுவேன்... என் கண் முன்னாடி நிற்காதே! ராட்சஸி... பாதகி... பிசாசே..." கண்களைப் பொத்திக் கொண்டான்.

"சரியான சாமியாரா வந்து வாச்சீங்களே!"

"ஏய்... போடி... போயிடு... நான் மிருகமா மாறுவதற்குள் போடி... நீ போகாட்டி... நான் உன் கழுத்தைப் பிடித்து கொன்னாலும் கொன்னுடுவேன்.. என்னை கொலைகாரனா பார்க்க விருப்பமா?"

"ம்... ஓ.கே... ஓ.கே.. கூல் டவுன்... எது பிடிக்கும்? எது பிடிக்காது? எல்லாத்தையும் பட்டியல் போட்டு கல்யாணத்துக்கு முன்னாடியே கொடுங்க... நான் மாற ட்ரை பண்றேன்... இப்ப திருப்தியா...? சிரிக்கக் கூடாதா?"

தன் இயலாமையை எண்ணி நொந்து... நூலாகி... எந்த உணர்ச்சியையும் காட்டாமல் சிலையென நின்றிருந்தான்.

சொன்னால்... உங்களுக்கு பிடிச்ச மாதிரி போயிடு வேன்!"

"அது உனக்குத் தேவையில்லாத விஷயம்!"

"தேவையா... இல்லையா...? என்பதை நான் முடிவெடுத்துக்கிறேன்."

"சனியனே! குழந்தை பெத்துக்கிறதைப் பற்றி டீடைல் செப்பறானுங்க... விபரம் போதுமா... இல்ல இன்னும் வேணுமா? இங்கே இருந்து போய்த் தொலையேன்" அவன் வெடித்துச் சீறினான்.

"வெரி இன்ட்ரஸ்டிங்... பைன்... அரவிந்த் நானே சொல்லணும்னு நினைச்சேன். எனக்குக் குழந்தைங்கன்னா ரொம்பப் பிடிக்கும்... குண்டு கன்னமு... திராட்சை கண்களும்... செப்பு உதடுகளும்... பிஞ்சி பிஞ்சியாய் கைகளும்... கால்களும்... புசுபுசுன்னு முடியை வச்சிகிட்டு... எனக்கு பிடிக்கும்பா... ரொம்ப ரொம்ப... ஆனா எப்படின்னு சொல்லத் தெரியலை. உங்களைப் போல குட்டி அரவிந்த்... என்னைப் போல குட்டி கௌசல்யான்னு வருசத்துக்கு ஒண்ணா... எனக்கு திகட்டற வரை... எனக்கு அலுக்கறவரை... நீங்க வேணாம்... வேணாம்னு சொல்லச் சொல்ல பெத்துட்டே இருப்பேன். ஆமாம்...!" அவள் கண்கள் பளபளக்க சொல்லிக் கொண்டே போக...

"ஸ்டாப்! இட் ஐ சே!" நெருப்புத் துண்டை கக்கும் விழிகளால் முறைத்துக் கொண்டே... அரவிந்தன் அங்கிருந்து அகன்றான்.

"கௌசல்யா நீ என்னம்மா சொன்னே? அவன் அப்படி கோபிச்சுட்டு போறான்?" அரவிந்தனின் தாய் சாரதா,



கௌசல்யாவின் அம்மா வித்யா, அப்பா ராஜதுரை அங்கு வந்து சேர்ந்தனர்.

"குழந்தைப் பெத்துக்கிறதைப் பற்றி அத்தை!" கௌசல்யா சொல்லிவிட்டு முகம் சிவந்தாள்.

"சம்மந்தியம்மா பார்த்தீங்களா... இந்த காலத்துப் பிள்ளைகளை! நம்ம காலத்துல அவுங்க முகத்தையே எரிட்டுப் பார்க்காம கழுத்தை நீட்டினோம். ஆனால், இப்போது காலம் எவ்வளவு முன்னேறிகிட்டு வருது பார்த்தீங்களா? குழந்தைகள் எத்தனை பெத்துக்கிறது? என்ற கணக்குகளை எல்லாம் இப்பவே போட்டுக் கிறாங்க..." பேச்சை நிறுத்திய அரவிந்தனின் தாய் கௌசல்யாவைப் பார்த்துக் கண்டிப்புடன் கூறினாள்.

"கௌசல்யா... நீ என்ன செய்வியோம்மா... எனக்குத் தெரியாது! மேரேஜ் முடிஞ்ச பத்தாம் மாதம் என் கையில் பேரன் தவழணும்."

கௌசல்யாவின் அம்மா வித்யா குறுக்கே புகுந்தாள்.

"அதுயென்ன பேரன்? முதல் குழந்தை பெண்ணாத் தான் இருக்கணும். மகாலட்சுமி வந்து பொறந்தாத்தான் குடும்பத்திற்கு நல்லது." வித்யா வாதிட்டாள்.

"இல்ல... எனக்கு பேரன் தான் வேணும்!"

"எனக்கு பேத்தி தான் வேண்டும்."

இவர்களின் சண்டையை வெகுவாய் ரசித்து விட்டுக் கூறினார்.

"அம்மா... அத்தை... நீங்க ஏன் வீணா சண்டை போட்டுக்கிறீங்க...? அத்தை உங்களுக்கு பேரன்! அம்மா

டக்களுக்குப் பேத்தின்று ரெட்டையா பெத்துத் தர நானாச்சு! சொல்லிவிட்டு அவள் நிலம் நோக்க... அங்கே குபீரென சிரிப்பலைகள் பரவியது.

'கல்யாண தேதி மட்டும் தங்கை ப்ரியா லண்டனில் இருந்து வந்த பிறகு தான்' என்று அரவிந்தன் ஒரேயடியாய் சொல்லி விட... பின்னர் நிச்சயப்பத்திரிகை, எழுத வாசிக்கப்பட்டது. இந்த இடைப்பட்ட நாட்களில் ஏதாவது காரணத்தால் திருமணம் நடைப்படாதா என்ற பேராசை அரவிந்தனுக்கு. கௌசல்யாவிற்கு கொஞ்சம் வருத்தம் தான். 'கிணற்று நீரை ஆற்று வெள்ளமா கொண்டு போகப் போகிறது?' என்று தன் மனதை சமாதானப்படுத்தி அரவிந்தனைப் பார்த்து கண் சிமிட்டினாள்.

ஆனால் இனிமேல் தான் தன் வாழ்க்கையில் விதி கண் சிமிட்டி... கண்ணாமூச்சி ஆடப் போவது தெரியாமல்!

## 4



மஞ்சள் பூசிய முகத்தில் நாணம் மேலிட... தலை கவிழ்ந்து... கால் கட்டை விரலைப் பார்த்து நடக்கும்... அழகிய இளம் மணப் பெண்ணாய்... காலை நேரம் ...ந்து கொண்டிருந்தது.



சாலையின் நடைபாதையில் வேகமாய் நடந்து கொண்டிருந்தாள்.

'அவள் அருணா.'

அந்த அழகு பெட்டகம்... தேவதை கணக்காய் நடந்து போவது ஒரு பூந்தோட்டமே நளினமாய் நடை பயில்வது போலக் காட்சியளித்தது.

பி.ஏ., தமிழ் முடித்து... பி.எட். படிக்க முடியாமல் அப்பா இறந்த பின்பு... தங்களுக்கு பாரமாய் வந்து விடுவார்களோ என்ற சொந்த பந்தங்களின் ஒதுக்கம் கண்டு... கிராமத்தை விட்டு சென்னைக்குத் தாயும், மகளும் கையில் இருந்த சொற்ப காசோடு வந்தார்கள்.

அருணா அலைந்து திரிந்து, ஒரு கான்வென்டில் தமிழ் மிஸ்ஸாக சேர்ந்து விட்டாள். வெறும் பி.ஏ.விற்கு சொற்ப சம்பளம் தான் தந்தார்கள். இருவரும் வாடகைக்கு வீடு எடுத்து தங்கி குடும்பம் நடத்த முடியாமல் திண்டாடினர். அருணாவின் கஷ்டத்தைப் பார்த்து அவளுடைய தாய் லட்சுமியும் நான்கு வீடுகளுக்கு பாத்திரம் தேய்க்கப் போனாள்.

அம்மாவை வேலைக்கு அனுப்ப அருணா லேசில் சம்மதிக்கவில்லை. லட்சுமிதான் மகளிடம் சண்டை போட்டு... தன்னுடைய வருமானமும் வந்தால் கொஞ்சம் கஷ்டம் இராது என்று விளக்கிப் புரிய வைத்தாள்.

அதனால் வீட்டில் ஒரு வேலையும் செய்யவே விட மாட்டாள் அருணா. அத்தனையும் இழுத்துப் போட்டு விடியும் முன்னரே செய்து விடுவாள். பின்னர் இருவரும் கிளம்பி போவார்கள்.

அருணாவிற்கு பஸ்ஸின் கூட்ட நெரிசல்... காலிப் பயல்களின் ஒட்டல்... உரசல் எல்லாம் கம்பளிப் பூச்சியைத் தொட்ட வேதனையாய் இருந்தது. மற்ற பெண்கள் எல்லோரும் சவ சாதாரணமாய் போவது அவளுக்கு அதிசயமாய்ப்பட்டது.

கிராமத்தில் கட்டுப் பெட்டியாய்.. குனிந்த தலை நிமிராமல்... தானுண்டு, தன் வேலையுண்டு என்று ஓட்டுக்குள் சுருளும் நத்தையாய் இருந்தவளுக்கு நகர வாழ்க்கை கொஞ்சம் கஷ்டமாய் இருந்தது.

தினந்தோறும் காலை, மாலை என மூன்று கி.மீ. தூரமுள்ள பள்ளிக்கு நடந்தே போனாள். பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ்ப்பாடம் எடுக்கச் சொன்னார்கள்.

அருணாவின் பாடம் நடத்தும் முறை... மாணவர்களின் புரிந்து கொள்ளும் திறன்... செய்யுளை ராகத்தோடு சொல்லிக் கொடுக்கும் பாங்கு... இலக்கணத்தை ரசித்துச் சொல்லும் அழகு... அதற்கெல்லாம் சற்று மேலாக தமிழின் மேல் அவள் வைத்திருந்த பற்று என்று அனைத்தையும் அறிந்த பள்ளி முதல்வர்... அவளை அழைத்து ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை பாடம் நடத்தச் சொன்னார்.

பள்ளி ஆண்டு விழாவின் போது இவள் வகுப்பு மாணவர்களே பாட்டுப் போட்டியில் அதிக பரிசை பெறுவார்கள். அதே போல மேடையில் இவள் பாடல் ஒன்றும் இடம் பெறும்.

பாடி முடித்தவுடன் மேடையில் எழும் பலத்த கைத்தட்டலால்... அவளுக்கு ஆனந்த கண்ணீரே வந்துவிடும். அவ்வளவு அருமையாக பாடுவாள்.



இப்படிப்பட்டவளுக்கு சற்று நாட்களாகவே மனதிற்குள் சதா ஒரு பயம்... வேதனை காரணம் அம்மா! சில இரவுகளில் தூங்காமல் எழுந்து உட்கார்ந்து நெஞ்சைப் பிடித்துக் கொள்வாள். அந்த முகத்தில் வலியின் வேதனை தெரியும்.

பதறிப்போய் ''என்னம்மா?'' என்று கேட்டாள். ''ஒன்றும் இல்லடா அருணா'' என்று முகத்தை இயல்பாய் வைத்துக்கொள்ள பெரும் சிரமம் எடுத்துக் கொள்வாள்.

மீண்டும் ''என்னம்மா... என்ன செய்கிறது? நாளைக்கு டாக்டர்கிட்ட போயிட்டு வாம்மா. உன்னை விட்டா எனக்கு யாரம்மா இருக்கா? அலட்சியப்படுத்தாதம்மா...! ப்ளீஸ்...'' கெஞ்சுவாள். தைலம் எடுத்து வந்து... நெஞ்சில் இதமாய் தடவி விட்டு... அம்மா உறங்கும் வரை வேதனையாய் முழித்திருப்பாள்.

'இந்த உலகில் அம்மாவைத் தவிர, தனக்கு சொந்தம் என்று சொல்லிக் கொள்ள வேறு யாருமே இருக்கவில்லையே! நாளை அம்மாவை கையோடு நாமே அழைத்துப் போக வேண்டும்.

இல்லையென்றால் அம்மா போகிறேன் என்று மாற்றிக் கொண்டிருப்பாள். என் ஆசையம்மா... அன்பு அம்மாவிற்கு எதுவும் நேரக்கூடாது... தெய்வமே...! என்று பலவாறு சிந்தித்துக் கொண்டு சென்றவள்... காரில் மோதி தூக்கியெறியப்பட்டிருப்பாள். கார்காரன் சட்டென்று பிரேக் போடாமல் இருந்திருந்தால்...!



# 5

அரவிந்தன் தொழிற்சாலை முன்பு காரை நிறுத்தி விட்டு... வழியில் கிடைத்த காலை வணக்கத்திற்கு... பதில் வணக்கம் சொல்லிக் கொண்டே வந்து... தனது இருக்கையில் அமர்ந்தான். மேசையின் மேல் நிறைய பைல்கள் குவிந்து கிடந்தன.

கௌசல்யாவை என்று பார்த்தானோ... அன்றிலிருந்து வேலையில் முழுமையாய் ஈடுபட முடியாமல் திண்டாடி னான். மனதை எதுவோ நன்கு அழுத்தி பிசைவது போல உணர்ந்தான். 'இது போலவே இருந்தால் அதல பாதாளத்தில் விழ நேரிடும்... எழவே முடியாத பள்ளத்தில்! இத்தனை நாளாய் கஷ்டப்பட்டு தன்னுடைய வியா பாரத்தை முதலில் கொண்டு வந்தது அனைத்தும் பாழாய்ப் போய்விடும். கௌசல்யா என்ற மோகினிக்கு மனைவியாட பிறந்து விட்டு... கற்பனை... அது இது என்று மனதை உழப்பிக் கொள்வதில் அர்த்தமே இல்லை... விதியை யாரால் மாற்ற முடியும்? விதி விடும் வழியே செல்வது தவிர... வேறு பாதை உண்டோ!' அரவிந்தன் மனம் குழம்பிய குளமாய் தவிக்க... அதையெல்லாம் மூட்டை கட்டி ஒருபுறம் வைத்துவிட்டு... பிரகாஷிற்கு போன் செய்தான்.

பிரகாஷ் அரவிந்தனின் பர்சனல் செகரட்டரி... அவனோடு கல்லூரியில் படித்த உயிர்த்தோழனும் கூட!



''ஏய் பிரகாஷ்! என்னைப் பார்க்க யார் வந்தாலும் ஒரு மணி நேரத்திற்கு உள்ளே விடாதே! என்னுடைய போன் கால்ஸையும் நீயே அட்டன் பண்ணிடு'' நான் பைல்ஸ் பார்க்கணும். என்னடா புரியுதா?''

''ஏய் அரவிந்தா... உன் கௌசல்யா வந்தாகூடவா... உன்னிடம் அனுப்ப வேண்டாம்! ம்ம்...'' நக்கலாய் கேட்க... அவ்வளவுதான் எரியும் தீயில் எண்ணெய் ஊற்றியது போல உணர்ந்தான்... கோபமானான்.

''வாட்... வாட்... நான்சென்ஸ் யுவர் டாக்கிங்...? யூ ஆர் ஸ்பீகிங் ஓவர்லி! யூ... யூ... கில் மீ...''

''டேய் அரவிந்தா... என்னடா சொல்லிட்டேன்? இப்படி கோபிச்சிட்டறே! என்ன இருந்தாலும் நாளைக்கு அவங்க என் முதலாளியம்மா...!'' பிரகாஷ் இன்னும் சீண்ட... போனை பட்டென வைத்து விட்டான்.

'இந்த பிரகாஷுக்கு எவ்வளவு திமிர்! முதலாளியம்மா வாமே? அவனால அவளை அப்படி கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லை. நினைக்கவே நெஞ்சம் நெருப் பாய் எரிந்தது. எவ்வளவுதான் தலைவிதி... என்று மனதை சமாதானப்படுத்தினாலும் திரும்பவும்... பைல் பார்க்கும் எண்ணமில்லை. கையில் இருந்ததை தூக்கி தூரே எறிந்தான். எழுந்து சன்னலோரம் சென்று நின்றான். பழைய நினைவுகள் அவன் மனவீட்டின் கதவைத் தட்டிக் கொண்டு... கண் முன்னே கண்ணாமூச்சி ஆடியது.

அவன் மனசே இல்லாமல்... பெற்றோர்களின் வற்புறுத்த லுக்கு... மறுக்க முடியாமல்... கசாப்புக் கடைக்காரன் பின்னே செல்லும் ஆடாய் கௌசல்யா வீட்டிற்குச் சென்றான்.

அவள் வந்தாள். அவன் கண்களுக்கு முதலில் தட்டுப்பட்டது... அசிங்கமான வாசகம் எழுதிய பனியனும்... டைட் ஜீன்ஸும்தான். அந்த ஆடையைக் கண்டு அரவிந்தன் அலறாதக் குறை தான். அவளை முழுமையாய் பார்த்தவன் வானத்திலிருந்து பூமிக்கு தூக்கி எறியப்பட்டதைப் போல உணர்ந்தான். மொத்தத்தில் அவளைப் பார்த்து விட்டு பேயறைந்ததுபோல உட்கார்ந்து விட்டான்.

கௌசல்யா நீட்டிய குளிர்பானத்தை வாங்காமல் அவன் இருக்க... அம்மா சீண்டவே பெற்றுக் கொண்டான். அவளது பெற்றோர்களும் குறிப்பறிந்து உள்ளே சென்று விட... அரவிந்தனின் தாய் சாரதா கேட்டாள்.

"அரவிந்த்... கண்ணா... என்னடாம்மா...? பிடிச்சிருக்கா?"

"......"

"பிடிக்கலையா?"

"போலம்மா...!" குழந்தையாய் கெஞ்சினான்.

"என்ன அரவிந்த்? இதுவா மரியாதை! படித்தவன் போல நடந்துக்கோ!"

"எம்மா... நாம இன்னைக்கி வருவது தெரியுமா?"

"ம்... தெரியுமே!"

"அப்புறம் ஏன் சேலை கட்டாம... இப்படி அசிங்கமா... வந்து நிக்கறா?"

"இது ஒரு குறையா?"

"இல்லேம்மா... நிறைய சொல்லலாம்... எனக்கு மொத்தத்துல பிடிக்கலே... போதுமா?"



"வெளிநாட்டுல படிக்கிறாளே உன் தங்கை ப்ரியா... அவளைப் போல ஆறு முழம் சேலை கட்டி இழுத்து போர்த்திண்டு வந்து நிப்பான்னு எதிர்பார்த்தியா?"

"ப்ரியாவை எம்மா வம்புக்கு இழுக்கிறே?"

"ஐயோ... இந்த காலத்திலும் இப்படி ஒரு பையனா? ஆமாம்... தெரியாமத்தான் கேட்கிறேன்... இவளுக்கு என்னடா குறைச்சல்? இவளை பிடிக்கலைன்னு சொல்றவன் ஒண்ணு குருடனாய் இருக்கணும்! அல்லது பைத்தியமாய் இருக்கணும்! நீதான் ரெண்டுமே இல்லையே!"

"அவனுக்குப் பிடிக்கலேன்னா விடேன் சாரதா..." அப்பா வாசன்... அவனுக்குப் பரிந்து பேச... சாரதாவிற்கு கோபம் வந்துவிட்டது.

"நீங்க கொஞ்சம் சும்மா இருங்க. அவன்தான் கிறுக்குத்தனமா கற்பனை... கிற்பனைன்னு உளறுகிறான். உங்களுக்கு எங்கே அறிவு போயிடுச்சி? வயசு இருபத்தேழு ஆகுது..."

"இருபத்தேழு ஒரு வயசா?"

"இந்த வயசுல நீங்க இருக்கும்போது அரவிந்தனுக்கு வயசு ஆறு. ஞாபகம் இருக்கில்லே!"

"அது அந்த காலம்..."

"நீங்க பேசாதீங்க... என்ன சொல்றே அரவிந்தா?"

"எனக்குப் பிடிக்கலேன்னா... பிடிக்கலேதான்."

இவர்களின் காரசாரமான உரையாடல் அவர்களின் வரவால் தடைப்பட்டது.

"ஆன்ட்டி... நான் இவரோட தனியா பேசணும்" கௌசல்யா கோரிக்கை வைத்தாள்.

'சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழுவதுமேல்...' கௌசல்யாவிடம் கெஞ்சி... கூத்தாடி... 'என்னைப் பிடிக்கவில்லை' என்று அம்மாவிடம் கூறச் சொல்ல வேண்டும் என்று அரவிந்தன் நினைத்தான்.

அம்மா சம்மதமாய் தலையசைக்க... அவள் பின்னே சென்றான்.

"நிக்கறீங்களே... உட்காருங்க!" இரு கையையும் அவன் தோள்மேல் போட்டு... அழுத்தி... உட்கார வைக்க... சீறினான்.

"என்ன அரவிந்த்... இதுக்கே இப்படி கோவிச்சிட்டா...! கல்யாணத்துக்குப் பின்னாடி... இன்னும் எவ்வளவோ இருக்கே! அப்போ கொஞ்சம் வேணும். கோபத்தை மீதி கொஞ்சம் வையுங்க."

"நீ... நீ ஓவரா போறே!" சுட்டு விரல் நீட்டி எச்சரித்தான்.

"என்ன அர்வி இது? கௌசல்யான்னு அழகான பேர் இருக்க... அசிங்கமா இப்படி எல்... ஒய்ன்னுட்டு உங்க பேரு எனக்கு எவ்வளவு பிடிக்கும் தெரியுமா? சியலி ஸ்வீட் நேம்... ஐ லைக் யூ! இந்த கௌசியை உங்களுக்கு பிடிச்சிருக்கா...? நான் அந்த பார்ட்டியில உங்களை முதல் முதலா பார்த்ததுமே... என் இதயம் என்கிட்டமே இல்லை! அது உங்ககிட்ட இருக்கா?"

"இந்த வசனமெல்லாம் வேறு யாரிடமாவது விடு" பட்டென்று சொன்னான்.



"கல்யாணம்ன்னு நடந்தா அது உங்களோடத்தான்னு அப்பாட்ட சொல்லிட்டேன். என் பிடிவாதம் அவருக்குத் தெரியும். நான் நினைச்சி... எனக்குக் கிடைக்காம போனது எதுவுமே இல்லை. அப்புறம் தான் இந்த பெண் பார்க்கும் படலம். உங்களுக்கு சந்தோசம் தானே? ப்ரியா... எப்படி இருக்கா? அவனோட கிளாஸ்மேட்தான்... மேலே படிக்கப் பிடிக்கல. அதான் இன்னும் படிக்கல..." அவள் கூற தீயைத் தொட்டவன் போல அதிர்ந்தான்.

"ப்ரியா அடிக்கடி புலம்பின பொம்பள ரவுடி நீதானா?"

"சாட்சாத் நானே தான்...! ஆனால் நான் ஒன்றை மிஸ் பண்ணிட்டேன். உங்களை துரத்தித் துரத்தி அலற வச்சி... ...விட்டு... பின்னாடி கல்யாணம் செய்துக்கணும்னு நினைச்சேன். ப்ச்... நடக்கலே!" கைவிரித்து சோகம் காட்டினாள்.

அர்விந்த்... எனக்கு உங்க உதடும்... மீசையும் ரொம்ப பிடிச்சிருக்கு... ஐ லக் யூப்பா! தொட்டுப் பார்க்கட்டுமா? அவன் அனுமதியில்லாமல் தொட வேறு செய்து... அவன் எதிர்பாராத தருணத்தில் கன்னத்தில் வேறு முத்தமிட்டு விட்டாள். எழுந்து வெளியே வந்து விட்டான்.

அவள் தொட்ட இடமும்... முத்தமிட்ட இடமும்... தீயாய் எரிந்தது. எத்தனை முறை கன்னத்தில் சோப்பு போட்டு கழுவியும் அருவெறுப்பு போகவில்லை.

வீட்டில் ஒரு பூகம்பமே வெடித்தது. அம்மா குதித்தாள்.

"நான் வாக்கு கொடுத்துட்டேன்... அவளை உனக்குப் பிடிச்சாலே மாற்றுவது என் பொறுப்பு. அவளுக்கு

எவ்வளவு போட்டி தெரியுமா? சொந்தத்தில் பகைச்சிட்டு நமக்கு தர்றேன்னார். காரணம் உன் குணம்... பண்பாடு பற்றி அவரும் கேள்விப்பட்டிருக்கார்."

"ப்ரியா வந்து புலம்பிய ராட்சசி..."

அரைவேக்காடு இது தானாம். அதுவே சொல்லிச்சி... தங்கையின் பொறாமை கண்டு புலம்பும்... விரிவுரையாளரிடம் இல்லாததையும்... பொல்லாததையும் சொல்லும் பொம்பளை ரவுடி இவதானாம். நான் வேற ஏதோ கௌசல்யான்னுல்ல வந்தேன். இவதான்னு தெரிஞ்சிருந்தா வந்தே இருக்க மாட்டேன்."

"நான் இவ்வளவு சொல்லியும் கேட்கலேன்னா... நான் என் வழியைத் தேடிக்கிறேன்... ஒரு முழம் கயிறுக்கா பஞ்சம்?"

"ஐயோ... இப்படியெல்லாம் பேசாதேம்மா... என்னை நீ புரிஞ்சிக்கவே மாட்டேங்கிறையே...!

ப்ரியாவைக் கேளு! அவ சம்மதிச்சா எனக்கும் சம்மதம்... நீ எதுவும் தப்பான முடிவுக்கு போயிடாதே!" அவன் வெளியேறினான்.

அம்மாவின் மிரட்டலுக்குப் பயந்து... "அண்ணா நீ கௌசல்யாவை மேரேஜ் பண்ணிக்கோ...!" என்ற தங்கையின் குரல் பேரிடியாய் கேட்டது. போன் கையிலிருந்து கீழே நழுவியது.



# 6



மாலை 5.00 மணி.

நாள் முழுவதும் முதுகு தண்டு ஒடிய வேலைப் பார்த்த அலுப்பில்... சேரிலேயே தலை சாய்ந்து கண்களை மூடிக் கொண்டு அமைதியாய் இருக்க... சின்னக் குழந்தையின் வீறிடலாய் போன் மணி ஒலிக்க... ரிசீவரை எடுத்து காதில் வைக்க... யாரை எட்டிக்காயாய் நினைக்கிறேனோ அவள்!

"ஹலோ... ஹலோ... ரொம்ப நேரமா ரிங் ஆயிட்டு இருக்கே! என்ன... என் நினைப்பா? டன் டன்னா ஜொள்ளு வழியுது! துடைச்சிக்குங்க. இங்க மட்டும் என்ன வாழுதாம்! தூங்கினா கனவுல... கண்ணை மூடினா எதிர்லன்னு... ஒரே இம்சையா இருக்கு. ஆனால், அதிலும் ஒரு சுகம் இருக்குப்பா! ப்ரியா இன்னும் பத்து நாளிலே வரலாமே! அவ இல்லேன்னா என்ன? என் கழுத்தில் தாலி ஏறாதா? என்னை காக்க வைத்து கழுத்தை அறுக்கிறானே! பாவி..."

"ஏய்... நாக்கை அடக்கிப் பேசு! மரியாதையா போனை வையடி!" அரவிந்தன் சொன்னதோடு மட்டுமில்லாமல் பட்டென்று போனை வைத்தான்.

திருமணத்திற்கு முன்பே உயிரை எடுப்பவள்... பின்னர் என்னவெல்லாம்... எப்படியெல்லாம் இருப்பாளோ! மலைப்பாய் இருந்தது அரவிந்துக்கு.

மீண்டும் போன் மணி ஒலிக்க... ''ஏய்... ஒரு வாட்டி சொன்னாப் புரியாதா? ஏன் மீண்டும் மீண்டும் கழுத்தறுக்கிறே!...'' பேசிக்கொண்டே போக அம்மாவின் குரல் கேட்டது.

''அரவிந்தா... நான் அம்மா பேசறேண்டா! கௌசல்யா வருவா... அவளை அழைச்சிட்டு... பீச், ஓட்டல்னு சுத்திட்டு மெதுவா வா... அப்போதானே அவளைப் பத்தி நீயும்... உன்னைப் பத்தி அவளும் புரிந்து கொள்ள முடியும்...! என் கண்ணில்லே! என் செல்லமில்லே! மறுக்கமாட்டேதானே!''

அம்மா கூறியது, கொஞ்சியது... பச்சைப் பாகற்காயைக் கடித்தது போல இதயத்தில் கசந்தது.

பெண்களுக்கென்றே பிரத்யேகமான வாகனமான ஸ்கூட்டி, ஸ்கூட்டர் இருக்கு. இவள் என்னடாவென்றால் சூப்பர் ஸ்ப்லெண்டரில் வந்து இறங்கினாள். அவன் காரின் அருகில் செல்ல...

''ம்கூம்... என் வண்டியில போகலாம்... நான் அதிலெல்லாம் வரமாட்டேன்...'' அவள் அடம்பிடிக்க... ஆபீஸ் விட்டு செல்லும் ஊழியர் ஒரு மாதிரி பார்க்க... வேறு வழியில்லாமல் அவள் வண்டியை ஓட்டினான்.

கடற்கரை மணலில் அரவிந்த் ஏதோ கிறுக்க...

''அரவிந்த்... நாம் இங்கே எதுக்கு வந்தோம்? நீங்க பொண்ணாட்டம் தலை குனிஞ்சி... கோலம் போடவும்... நான் அதை விதியேன்னு பார்த்துட்டு இருக்கவா? என்ன நீங்க? வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியாம! ம்... அவ்ளோ இடைவெளி தேவையா?'' அருகில் வந்து



ஒட்டி... உரசி... அமர்ந்து... அவன் தோள் மீது சாய்ந்தவளைத் தள்ளி விட்டான்.

''ஓகே... ஓ.கே.... நான் தள்ளிக்கிறேன்... உங்களுக்குப் பிடிக்காத எதையும் செய்ய மாட்டேன். பேசுங்க அர்விந்த்! உங்களுக்கு எது பிடிக்கும்? எது பிடிக்காது?'' என்று.

'உன்னையே பிடிக்கல!',சொல்ல துடித்த நாக்கை அடக்கிக் கொண்டான். இனிமேல் சொல்லி என்ன செய்ய முடியும்?

''எனக்கு எது பிடிக்கும்! எது பிடிக்காதுன்னு! நீ தெரிஞ்சுக்கணும்னு அவசியமில்லே!''

''என்ன அர்விந்த்... நாளைக்கு நான் உங்க பொண்டாட்டி... அவனவன் அலையறான்... எப்ப சந்தர்ப்பம் கிடைக்கும்... கிஸ் பண்ணலாம்... தொடலாம்னு...'' அவள் அலுத்துக்கொள்ள...

''ஆண்கள்... அத்தனை பேரையும்... அப்படி எடை போடாதே! நீ சொல்ற புத்தியுள்ளவன் நூத்துல பத்து பேர் கூட இருக்கமாட்டாங்க... அதுக்காக மொத்த எல்லா ஆம்பளையும் மட்டமா எடை போடாதே!'' சீறினான்.

''அது போகட்டும்... விடுங்க. நீங்க சிரிச்சா... கன்னத்துல குழிவிழுமே... அதை நான் பார்க்கணும். சிரிக்கக் கூடாதா? அன்னைக்குப் பார்ட்டியில யாரிடமோ... சிரிச்சுப் பேசிட்டு இருந்தீங்களே... அப்போ... அந்த நொடி... இந்த கன்னக் குழியில விழுந்தவதான்! இன்னும் இன்னும் எந்திரிக்க முடியல!'' கைவிரித்துச் சிரித்தாள்.

அரவிந்தன் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான்.

அவள் ஏதேதோ உளறிக் கொண்டே போகச் சட்டென்று கோபமுற்றான்... எழுந்தான்... விறுவிறுவென நடந்தான். அவள்... அவன் பின்னே ஓடிவந்து... அவன் கைப்பிடித்து தடுத்து...

"கோபமா அர்விந்த்..." சொல்லிக் கொண்டே எம்பி கண்ணிமைக்கும் நேரத்தில் முத்தமிட்டு விட்டாள்.

துடித்து விட்டான்... ஒரு சிலர் இதை வேடிக்கை பார்க்க... அவமானமாய் உணர்ந்தான். சாக்கடையில் நெளியும் புழுவைப் பார்ப்பது போல... அற்பமாய் பார்த்து விட்டு... ஓடி வந்து வண்டியைக் கிளப்ப... அவளும் வந்து பின்புறம் இரண்டு கால்களையும் போட்டு உட்கார்ந்து கொண்டாள்.

அரவிந்தன் மேல்... ஒட்டி... உரசி இடுப்பை இறுக்கிக் கொண்டாள். வரும்போது நல்ல பிள்ளையாய் வந்தவள் "ஏய் தள்ளிக்கோ!" என்று அவன் கத்துவதை காதில் போட்டுக் கொள்ளவில்லை. இதுபோல் சந்தர்ப்பம் இனிமேல் கிடைக்குமா...? என்று மேலும் மேலும் தன் உடல் முழுக்க அவன் மேல் படும்படி இறுக்கிக் கட்டிக் கொண்டாள். நரகத்தில் தள்ளி... ஓங்கி மிதித்தது போல ஒரு வேதனையாய் இருந்தது அரவிந்தனுக்கு.

'இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண் டும்... அம்மாவின் கால்களைப் பிடித்தாவது' அவன் மனம் கறுவியது.

"வேகமாய் போங்களேன்... கட்டை வண்டில போறாப்ல இருக்கு. ப்ளீஸ் அர்வி..." அவள் கூற...

வண்டியை வேகப்படுத்தினான்.



"நோ... நோ... இன்னும்... இன்னும் வேகம். எனக்கு ரொம்பப் பிடிக்கும்! அதுலதான் ஒரு த்ரில்லிங்கே இருக்கு! ஜில்லுன்னு வயத்துல ஒரு பயம் வருமே... அது ரொம்ப நல்லாயிருக்கும்" சின்னப்பிள்ளையாய் கொஞ்சி னாள்.

அவள் கொஞ்சலும்... அணைப்பும் பிடிக்காமல் முடுக்கினான் பின்னால் வரும் விபரீதம் தெரியாமல்...

எதிர்க்க வரும் லாரியை சைடு வாங்க இவன் நினைக்க... லாரிக்காரனை முந்திக் கொண்டு போக... லாரிக்கு பின்னால் வந்த பஸ்காரன் நினைக்க... விபரீதம் உணர்ந்து... வளைக்க... அருகில் உள்ள மரத்தில் வண்டி மோதி கண்ணிமைக்கும் நேரத்தில் தூக்கி எறியப்பட் டனர்.

கௌசல்யா அருகில் உள்ள மணலில் விழ... அரவிந்தனோ தூக்கி தூரே எறியப்பட்டான். மண்டை யிலும்... வயிற்றிலும் நல்ல அடி... இரத்தம் ஆறாய் ஓடியது.

## 7



'சூர்யா நர்ஸிங் ஹோம்.'

வராண்டாவில் கண்ணாடிக் கதவுக்கு வெளியே அனைத்து சக்திகளையும் இழந்து... சக்கையாய் பிழியப்

பட்டதுபோல... அரவிந்தனின் பெற்றோர்கள்... கௌசல்யாவின் பெற்றோர்கள்... பிரகாஷ்... கௌசல்யா என ஒரு உறவுப் பட்டாளமே கண்ணீரோடு காத்திருந்தனர்.

கௌசல்யாவிற்கு அந்த இடத்திலேயே தண்ணீர் தெளித்ததும் மயக்கம் தெளிந்து விட்டது. அங்கு கூடியிருந்தவர்களின் உதவியால் ஹாஸ்பிடலில் சேர்க்கப்பட்டான்.

அத்தனை பேரும் நம்பிக்கை இழந்து என்ன செய்வது? எனப் புரியாமல் தவித்தபோது உடனடியாய் செயல்பட்டவன் பிரகாஷ் மட்டுமே!

அவனுக்குத் தேவையான ரத்தத்திற்கும்... மருந்திற்கும் இரவு பகல் பாராது இயங்கினான்.

டாக்டர் சூர்யாவிற்கே இந்த கேஸ் சவாலாய் அமைந்து விட்டது. அவனுடைய தொழிலில் இத்தனை மோசமாய் அவனை பாதித்த... சோதித்த கேஸ் இதுவரை எதுவுமில்லை. இளைஞன்... துடிப்பானவன்... படித்து முடித்ததுமே க்ளினிக் வைத்து நகரில் பிரபலமாய் பேசப்பட்டவன். இன்று நகரின் தலை சிறந்த டாக்டர் என்று மக்கள் குவியும் இடம்.

தன் டாக்டர் தொழிலுக்கு ஏற்பட்ட சோதனையாய் எடுத்துக் கொண்டு சிகிச்சை அளித்தான். அரவிந்தன் ஆபத்து கட்டத்தைத் தாண்டி விட்டான். தலை, கை, கால் என வெள்ளைத் துணிகளால் கட்டப்பட்டு... வேரறுந்த மரமாய் கிடக்கும் அரவிந்தனைப் பார்க்கப்... பார்க்க கௌசல்யாவிற்கு உயிரே போய்விடும் போல் இருந்தது.



அவளுக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. 'எதிலும் வேகம்... வேகம் என்று, என் அரவிந்தனை பறிகொடுக்கப் பார்த்தேனே! 'அரவிந்தா... அரவிந்தா... நீ கண் விழிக்கமாட்டாயா? என்னிடம் கோபம் கொள்ள மாட்டாயா? உன் சிரிப்பும்... பேச்சும் பிடிக்கலேன்னு... அழகு முகம் சுளிக்கமாட்டாயா? என் உயிரே... என் அன்பே... எழுந்து விடு... என்னை எரித்து விடுவது போல் பார்ப்பாயே! அந்த ஒரு பார்வைக்காகக் காத்திருக்கிறேன். என் இதயத்தின் புலம்பல்கள் உன் செவியினைத் தாக்கவில்லையா? என் வேதனைப் புரியவில்லையா?' மனதிற்குள் புலம்பினாள்.

பின் தலையிலடித்துக் கொண்டு கதறினாள்.

"எல்லாம் என்னால் தான். எதிலும் வேகம் வேகம்ன்னு அரவிந்தை கொல்லப் பார்த்துட்டேனே! இவ்வளவு ரணமும் என்னால் தான், அரவிந்த் உயிருக்குப் போராட நானேதான் காரணம். என்னை எல்லோரும் கொல்லுங்க... அடியுங்க..."

"சண்டாளி! செய்வதையும் செய்து விட்டு நடிக்க வேற செய்யறியா? உன் அகம்பாவம்... திமிர்... ஆணவம் எல்லாத்துக்கும் எம்பிள்ளைதான் கிடைச்சானா? போடி... போ! எனக்கு வரும் கோபத்திற்கு பத்ரகாளியா மாறிடுவேன்! பெத்த வயிறு பத்தி எரியுதடி! இப்படியெல்லாம் பார்க்கவா என் புள்ளையை தவமா தவமிருந்து பெத்தேன்! ப்ரியா வந்தா என்ன பதில் சொல்லுவேன்..." வயிற்றில் அடித்துக் கொண்டு சாரதா கதற... வாசன் வாயில் கர்ச்சீப்பை வைத்து அழுகையை அடக்க பெரும்பாடு பட்டார்.

''வேணாம்மா... வேணாம்! இப்படி நடக்கும்ன்னு கண்டானா? நொந்துகிடப்பவனை இன்னும் நோகடிக்கா தீங்க...'' கௌசல்யா அப்பா ராஜதுரை கெஞ்சினார்.

''வெய்யா சின்னப்பிள்ளை! வயது இருபத்தி ஒன்று ஆயிடுச்சு! அறிவிருக்க வேண்டாம்... அவளைச் சொல்லி குற்றமில்லை! உங்க வளர்ப்பு அப்படி!''

''அம்மா...'' வித்யா கூற

''என் புள்ளையை பாரும்மா! எவ்வளவு சம்பாதிக்கிறான்... எவ்வளவு பணத்தைப் பார்க்கிறான்! ஆனாலும் ஒரு சின்ன கெட்ட பழக்கம் உண்டா? எவ்வளவு கெஞ்சினான்... இந்த கொடுமைக்காரிதான். அவன் மறுக்க மறுக்க... தற்கொலைன்னு நாடக வசனமெல்லாம் பேசி ஒரு வழியா சம்மதிக்க வைத்தேன். இப்படி பார்க்கத் தான்னு அப்போ தெரியலையே தெய்வமே! என் பிடிவாதத்திற்கு கட்டுப்பட்டு... என் வார்த்தைக்கு மறு பேச்சி பேசி பழக்கமில்லாத அர்விந்த் உன்னை மேரேஜ் பண்ணிக்க ஒத்துக்கிட்டான்...''

''என்ன ராசியோ? என்ன இழவோ? இவ துரதிர்ஷ்டத்திற்கு என் பிள்ளைதான் கிடைத்தானா? என் பிள்ளை மட்டும் கண் விழிக்கல கொன்னுடுவேன்'' சுட்டு விரல் நீட்டி வாசன் மிரட்டினார்.

''உங்க பொண்ணும் வேண்டாம்... சம்பந்தமும் வேண்டாம்... கடவுள் புண்ணியத்தால பிழைச்சி வந்தா இவ கழுத்துல மட்டும் தாலி கட்டுவான்னு நினைக்கா தீங்க.''

''என்ன... என்ன இங்கே சத்தம்? டாக்டர் சூர்யா கேட்டுக் கொண்டே அருகில் வர...



''அர்விந்தை பிழைக்க வையுங்க டாக்டர்'' அவன் கையைப் பிடித்துக் கொண்டு விசிட்டாள்.

டாக்டர் சூர்யகுமாருக்கு... அரவிந்தன் மேல் கௌசல்யா கொண்ட அன்பைப் பார்க்கும்போது... ஆச்சரியமா...? ஏக்கமா...? வன்மமா...? பொறாமையா? என்னவென்றே தெரியாமல் இனம் புரியாத உணர்ச்சி எட்டிப் பார்த்தது.

# 8



மறுநாள் மாலை நேரம்...

அங்குள்ள அனைவரின் தவமும் வீணாகாமல் அரவிந்தனுக்கு விழிப்பு வந்தது.

மெல்ல... மெல்ல... சுய நினைவு வந்தது.

வண்டி மரத்தில் மோதி தூக்கியெறியப்பட்டது கனவு போலத் தோன்றியது.

'அப்போ... அப்போ... கௌசல்யா என்ன ஆனாள்?'

''அர்விந்த்...''

''மகனே...''

''மாப்ளே...'' என்று அம்மா, அப்பா, பிரகாஷ் என ஆளாளுக்கு தவிப்பாய் அழைத்தனர்.

"அர்விந்த்... இப்படி எங்களைத் தவிக்க விட்டுட்டியே! இப்போ எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா? நீ பிழைச்சி... எழுந்தா... திருப்பதி உண்டியல்ல என் தாலியைக் கழற்றிப் போடறேன்னு வேண்டிட்டேன். அந்த ஏழுமலையான் என்னைக் கைவிடல... என் தவம் வீண்போகல... என் தங்கம் கண் முழிச்சிடிச்சி... என் வயிறு குளிர்ந்துடிச்சி..." அம்மாதான் புலம்பினாள்.

"அரவிந்தா... பார்த்து வரக்கூடாதா? எங்களை இப்படி பயங்கொள்ள வச்சிட்டியே! கண்ணா... எப்படியப்பா இருக்கு?" அப்பா வாசன் கேட்டார்.

"என்ன காரியம் பண்ணிட்டே அரவிந்தா? முழுசா இருபத்தி நான்கு மணி நேரம் எங்களை எல்லாம் கதி கலங்க வச்சிட்டியே! எங்களையெல்லாம் அழ வச்சிட்டியே! பாவி..." பிரகாஷின் கண்கள் கலங்கின. குரலில் கூட தடுமாற்றம் தெரிந்தது.

அரவிந்தனின் விழிகள் கௌசல்யாவை தேடின. அங்கு அவள் இல்லாதது கண்டு அவளுக்கு ஏதோ நேர்ந்திருக்கிறதாய் எண்ணி பதறினான்...

"அம்மா... கௌசல்யா எங்கே? அவளுக்கு என்ன வாச்சி? என்னம்மா... நான் கேட்டுட்டு இருக்கேன். பதில் சொல்ல மாட்டேங்கிற! என்னம்மா... என்ன?" பதற்றத்தோடு கேட்டான்.

"அவளுக்கென்ன குத்துக்கல்லாட்டம்... ஒரு அடியும் படாம இருக்கா... இப்போ பதிச்ச மஞ்ச கிழங்காட்டம்...!"



"ஆன்ட்டி... சும்மா இருங்க... அரவிந்த்... கௌல்சயா நல்லாயிருக்கா... நீ பயப்படாதே...!" வெளியே எட்டிப் பார்த்து கௌசல்யாவை அழைத்தான்.

சாரதாவிற்கு பயந்து கொண்டு வெளியே இருந்தவள்... புயலாய் உள்ளே ஓடி வந்தாள்.

"அர்விந்த்... அர்விந்த்..." சுடிதாரின் துப்பட்டாவால் வாய் பொத்தி குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

அரவிந்தன் கௌசல்யாவை கண்டான். அவளுக்கு எதுவும் நேராதது கண்டு மனம் இலேசானான். அவனும் மனிதன் தானே! இதயம் என்ன இரும்பா...?

"என்னால் தானே! என்னால் தானே! ஸாரி... ஸாரிப்பா... மன்னிச்சிருங்க!" கையெடுத்துக் கும்பிட்டாள்.

"கௌசல்யா... அழறதைக் கொஞ்சம் நிறுத்து! நீதான் வேகமாப்போன்னு சொன்னா... எனக்கு எங்கே அறிவு போயிடிச்சி...? இந்த விபத்துக்கு நானும் காரணம்... உனக்கு ஏதாவது ஆகியிருந்தால்...!" நிஜமாகவே வருத்தப்பட்டான்.

"அவகிட்ட என்ன பேசிட்டு? உன்னை இங்கே இருக்கக்கூடாதுன்னு சொன்னேன் இல்ல! போடி... போ..." கௌசல்யாவை சாரதா வெளியே தள்ள...

"ஐய்யோ... என்ன... என்ன இங்கே கூச்சல்? தள்ளுங்கம்மா..." என்று நர்ஸ் கூற பின்னாடி டாக்டர் சூர்யா.

"என்ன பாடுபடுத்திட்டீங்க அர்விந்த்!

நான் இதுபோல... எனக்கே சவால்விட்ட கேஸ் பார்த்ததில்லே. நான் ஜெயிச்சிட்டேன்... நான் இப்போ ரொம்ப

சந்தோசமா இருக்கேன். உங்க நண்பருக்கு நன்றி சொல்லுங்க... நீங்க உயிர் பிழைச்செழ அவரும் முக்கிய காரணம்... இவர் இல்லேன்னா நான் ரொம்ப கஷ்டப்பட்டு இருப்பேன். ஒவ்வொரு மருந்தையும் எவ்வளவு சீக்கிரமா வரவழைத்துத் தந்தார் தெரியுமா? ரியலி... ரொம்ப நல்ல மனிதன்..!"

"பிரகாஷ்... பிரகாஷ்..." அவன் கையைப் பிடித்து கண்ணில் ஒற்றிக் கொண்டாள். "தேங்க்ஸ்டா... ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்டா... உன்னை என் நண்பனா அடைய ரொம்ப கொடுத்து வச்சிருக்கேன்..."

"ஏய் அழுல் பேபி... சும்மாயிருக்க மாட்டே! உதை வேணுமா? என்ன பேச்சு பேசறே...! இது என் கடமைடா... நீ என் நண்பன்... என் உயிர் நண்பன்..."

கௌசல்யாவை அம்மா முறைத்துக் கொண்டு நிற்பது கண்டு... அவளைப் பார்க்கவே பாவமாய் இருந்தது.

"அம்மா... அவளை ஏன் முறைக்கறே! இப்படியெல்லாம் நடக்கணும்ன்னு இருக்கு விதி...! இதை யாரால் மாற்ற முடியும். அவள் என்ன செய்வா? இப்படி நீ முறைப்பதாலோ... திட்டுவதாலோ என்ன கிடைக்கப் போவுது! இதுவே அவளுக்கு ஏதாவது ஆகியிருந்தால் நம்ம நிலையை நினைச்சிப்பாருங்க... இந்த மட்டும் நடந்ததேன்னு சந்தோசப்படமா!..."

அரவிந்தன் சொல்லி முடிக்க அம்மா முகத்தில் கொஞ்சம் சாந்தம் குடி கொண்டது. ஏதோ யோசனையாய் முகத்தை வைத்துக் கொண்டாள்.



கொஞ்சம் கொஞ்சமாய் உடல் தேறியது... அம்மா... அப்பா... கௌசல்யா... அவளைப் பெற்றவர்கள் என மாறி மாறிப் பார்க்க வந்தனர். தொழிற்சாலையின் தொழிலாளிகள் என ஆஸ்பத்திரியே அல்லோகலப்பட்டது.

# 9



அருணா சென்னைக்கு வந்து ஒரு கல்வியாண்டு முடிந்து விட்டது. கோடை விடுமுறைக்குப் பின் இன்று தான் பள்ளி திறக்கப்படுகிறது. இரவெல்லாம் நல்ல தூக்கம் வராமல் புரண்டுப் புரண்டு படுத்தாள். விடியும் முன்னரே முழிப்பு வந்து வேலைகளை முடித்துக் கொண்டு... சீக்கிரமே புறப்பட்டு விட்டாள்.

காரணம்?

ஒன்றரை மாதங்களாக மாணவர்களின் அன்பு... பாசம்... குரல் எனக் கேட்காமல் அவளால் சும்மாவே சோம்பேறியாக இருக்கப் பிடிக்கவில்லை.

மாணவர்களைக் காணப்போகும் ஏக்கத்தில்... மகிழ்ச்சியில்... அவள் முகத்தில் புன்னகை அரும்பியது.

"மிஸ்... மிஸ்..." என சூழ்ந்து கொண்டனர்.

"உங்களைப் பார்க்காம இருக்கவே முடியலை மிஸ்..."

"நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க!"

"ஏன் லீவு விட்டாங்களோன்னு இருந்துச்சி மிஸ்! படு போர் மிஸ்!"

"நாங்க ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடுன்னு டூர் போனோம் மிஸ்! உங்களுக்கு ஸ்டிக்கர் பொட்டு, வளையல், ஹேர்பாண்ட் எல்லாம் வாங்கிட்டு வந்திருக்கேன் மிஸ்!"

"நீங்க எங்கேயெல்லாம் போனீங்க? சொல்லுங்க மிஸ்... சொல்லுங்க மிஸ்?"

"நீங்க சொன்னாப்புலேயே தமிழ் மனப்பாடம் அத்தனையும் படிச்சுட்டேன் மேடம்!"

"நீங்க எங்களுக்கெல்லாம் ஒரு பாட்டு பாடுங்க மிஸ்!"

ஆறு, ஏழு, எட்டு அவளிடம் படித்த மாணவர்கள், மாணவிகள்... அவளிடம் கூடி நின்று ஆளாளுக்கு கேள்வி கேட்க...

அவள் பதில் சொல்ல முடியாமல் திணறி விட்டாள்.

ஒரு மாணவனின் தாய் அருகில் வந்து கூறினாள்.

"தமிழ் என்றால் அவனுக்கு தகராறு... படிக்கவே மாட்டான். எடுத்துப் படியப்பா... என்று எவ்வளவு சொன்னாலும் கேட்கவே மாட்டான். ஆனால், இப்போ என்னடா வென்றால் லீவிலே தமிழ் புத்தகம் வாங்கித்தரச் சொல்லி... எல்லா மனப்பாடப் பகுதியையும் படிச்சுட்டான்...! எப்போ பாருங்க உங்களைப் பத்தியே நாள் முழுக்க பேசுவான். எங்க தமிழ் மிஸ் இப்படி சொல்லித்



தருவாங்க! என்னைத் திட்டவே மாட்டாங்க, அடிக்கவே மாட்டாங்க... எப்பவுமே அன்பா இருப்பாங்க... எத்தனை முறை டவுட் வந்தாலும் க்ளியர் பண்ணுவாங்க...ன்னு சொல்வான். இவனைக் கொஞ்சம் பார்த்துக்கோங்க மிஸ்!" சொல்லிவிட்டு சென்று விட்டாள்.

அருணாவிற்கு இந்த மாதிரி பாராட்டுதல் எல்லாம் மேலும்... மேலும் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு தோன்றியது.

இறை வணக்கம் முடிந்து, முதல் பாடவேளை தொடங்கியது. ஆறாம் வகுப்பு தமிழ். அனைவரும் புதிய மாணவர்கள். அவர்களைப் பற்றிய அறிமுகம் முடிந்து இன்று நல்ல நாளாய் இருப்பதால் வாழ்த்துப் பகுதியை நடத்தினாள்.

"நான் தொழும் தெய்வம்

கண்ணுள் நின்ற ஒளியைக் கருத்தினை

விண்ணுள் நின்று விளங்கிய மெய்யினை

எண்ணி எண்ணி இரவும் பகலுமே

நண்ணு கின்றவர் நான் தொழுந் தெய்வமே!"

- தாயுமானவர்.

அவள் இனிமையாய்... ராகமாய்... தெளிவாய் சொல்லிக் கொடுக்க, மாணவர்களுக்கு எளிதாய் புரிந்தது. அதற்கான விளக்கவுரையையும் மிகச் சரியாக... தெளிவாக புரிய வைக்கவும்... முதல் பீரியட் முடிந்தது.

இரண்டாவது பாட வேளை அவளுக்கு ஓய்வு. ஓய்வறையில் சென்று அமைதியாய் உட்கார்ந்து விட்

டாள். அவள் உடல் மட்டுமே ஓய்வு எடுத்துக் கொண் டிருக்க, உள்ளம் கொல்லன் பட்டறை தீக்கனமாய் எரிந்தது.

'தனியார் கல்வி நிறுவனம் என்ற பெயரில் இப் போதெல்லாம் கத்தி எடுக்காமல்... துப்பாக்கி ஏந்தாமல்... அநியாயமாய் கொள்ளையடிக்க ஆரம்பித்து விட்டனரே... ஏழையென்றும் பணக்காரனென்றும் பாராமல் இப்படி அநியாயக் கட்டணம் வசூலித்து பகல் கொள்ளை அடிக் கின்றனரே... ஏழைகளுக்கு கான்வென்ட் படிப்பு எட்டாக் கனியாகத்தானே இருக்கிறது...! தனியார் நிறுவனம் ஏற்படுத்த அனுமதியளிக்கும் அரசாங்கமே முறையான கட்டண நிர்ணயம் செய்யக்கூடாதா? பாவிகள் இப்படி அநியாயமாய் சம்பாதித்து குவிக்க அரசாங்கமும் ஒரு காரணம் தானே!

'ஆனால், இவர்களின் கல்வி நிறுவனத்திற்கு தொண்டைத் தண்ணீர் வற்ற... முதுகு ஒடிய... நாள் முழுவதும் கஷ்டப்படும் ஆசிரியைகளுக்கு மட்டும் சரியான சம்பளம் தரத் தெரியாது!

அருணாவின் எதிர்கால லட்சியமே இது போன்ற ஒரு கல்வி நிறுவனம் ஏற்படுத்தி... அதில் ஏழைகளும்... ஊனமுற்றோரும்... அதிக மதிப்பெண்கள் பெறுபவரும் இலவசமாய் படிக்க வேண்டும். நியாயமான கட்டணம் வசூலிக்க வேண்டும். நிறுவனத்திற்காக பாடுபடும் ஆசிரியர்களுக்கு அள்ளி... அள்ளிக் கொடுக்க வேண்டும்.

என் கனவு நிறைவேறுமா? அல்லது ஊமை கண்ட கனவுதானா? அவளின் கண்களில் கனவுகளின் ஏக்கம் தெரிந்தது.



## 10



பிரகாஷ் ஏர்போர்ட்டில் காத்திருந்தான்.

ப்ரியா வந்தாள்.

பிரகாஷின் அருகே சுற்று முற்றும் பார்த்தாள். அவள் கண்கள் அரவிந்தனைத் தேடுவதைக் கண்டான்.

"அவன் வர்ல. உன் லக்கேஜை என்னிடம் கொடு." என்று வாங்கிக் கொண்டு காரிற்கு வந்தான்.

"ஏன் வர்லே?"

"......"

"என்னைவிட அவருக்கு வேலைதான் முக்கியமா? இருக்கட்டும் போய் கவனிச்சிடுறேன்."

கார் புறப்பட்டது.

"பிரகாஷ் நீங்க நல்லாயிருக்கீங்களா? டாடி... மம்மி எப்படியிருக்காங்க? அண்ணா எப்படியிருக்கார்? பிசினஸ் எப்படி போகுது...?"

"மெல்ல மெல்ல என் ப்ரியா... ஒவ்வொரு கேள்வியா கேட்கக் கூடாதா? இவ்வளவு கேள்வி கேட்டா, எதுக் குன்னு பதில் சொல்வேன்... ம்..."

அவள் அவனைப் 'பார்த்துப் பூவாய் மலர்ந்தாள்.

"ஸாரி... ஸாரி பிரகாஷ்!"

"நீ உன் வாயால் என் பெயரைச் சொல்லும்போது மட்டும் தான் இனிக்குது ப்ரியா!"

"என் மத்தவங்க சொல்லும்போது கசக்குதா என்ன?"

"எய் வாலு...! சரி பரிட்சை எல்லாம் நல்லா எழுதியிருக்காயா?"

"ம்ம்..."

பிரகாஷிற்கு ப்ரியாவின் மேல் காதல். அவளை அவனுக்கு ரொம்பப் பிடிக்கும். அதனால் தன் காதலை ப்ரியாவிடமோ... அரவிந்தனிடமோ சொன்னது இல்லை. அதற்கென்று நேரம் வரும்போது வெளிப்படுத்தலாம் என்று இருந்தான்.

கார் மருத்துவமனை முன்பு நிற்க...

"யாருக்கு? என்ன? என்ன?" என்று பதறி விட்டாள்.

"ஒன்றுமில்லே! ரூம் நம்பர் பத்துக்கு போ! நான் டாக்டரை பார்த்துவிட்டு வருகிறேன்" அரவிந்தனைப் பற்றி இங்கேயே சொல்லிவிட்டால் கத்தி ஆர்ப்பாட்டம் செய்வாள் என்று நினைத்து... அவளை அனுப்பினான்.

"இவ்வளவு நாளும் சொல்லாமல் மறைத்து விட்டீங்களே! என்று சட்டையைப் பிடித்துக் கொண்டாள். அவளுக்கு எவ்வாறு பதில் சொல்வது... என்று பயந்து தான் டாக்டர் இருந்த அறைக்கு நழுவினான்.

தலை, கை, கால் எனக் கட்டுப்போட்டு இருப்பதைக் கண்டு அவள் திடுக்கிடவில்லை. ஏனென்றால்



அவன் ஒவ்வொரு முறை வரும்போதும் ஏதாவது நாடகம் செய்வான். வாயில் சிவப்பு இங்கை ஊற்றிக் கொண்டு இருமி காமிப்பான். நொண்டி நொண்டி வருவான். அது போல் இதுவும் ஒரு வாலுத்தனமாய் பட்டது.

"அண்ணா... நீ இப்படியெல்லாம் வேஷம் போட்டுட்டு, ஆஸ்பத்திரியில படுத்திருந்தா, ஏமாந்துடுவேன்னு நினைப்பா? என் நெத்தியில ஏமாளின்னு எழுதியிருக்கா என்ன? வாலு பையா! அவன் வயிற்றில் குத்தினாள். தலையில் இருந்த கட்டைப் பிய்த்து எறியப் போனாள்.

"ஐய்யோ... ஐய்யோ... அம்மா...!" அவன் அலறியதைக் கண்டு அதிர்ச்சியடைந்தாள். பாத்ரூம் சென்று திரும்பிய சாரதா அலறினாள்.

"ஏய்... ஏய்... என்னடி செய்யறே? என்ன காரியம் பண்ணயிருந்தே! அவன் பிழைத்து எழு... நாங்க பட்டப் பாட்டையெல்லாம் ஒரு நொடியில கலைச்சிடப் பார்த்தியே! பிரகாஷ் ஓடுப்பா... டாக்டரை சீக்கிரம் கூட்டிட்டு வா."

"ஐயோ... அண்ணாவுக்கு என்னம்மா?"

சாரதா அழுகையோடு மகளுக்கு அனைத்தையும் கூறினாள். ப்ரியா அழுதாள். கதறிக் கதறி அழுதாள்.

"எல்லாத்துக்கும் காரணம் இவதான்...!" கௌசல்யாவை சுட்டிக் காட்டினாள். ப்ரியா முன்பே கௌசல்யாவை அரவிந்தனின் தாய் திட்டித் தீர்த்தாள். பிரகாஷ் அடக்கினான்.

கௌசல்யாவின் மேல் பரிதாபமாய் இருந்தது ப்ரியா விற்கு.

"எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் ஆன்ட்டி கேட்கவேயில்லை! ப்ரியா நீயாவது எடுத்துச் சொல்லு!" பிரகாஷ் கூற...

'எந்த அளவு இதற்கு விளக்கம் தர முடியுமோ, அவ்வளவு கூறினாள். சாரதா மகள் கூறுவதில் உண்மை இருப்பதைக் கண்டாள்.

"கௌசல்யா இங்கே வாம்மா!" அருகே அழைத்து அணைத்துக் கொண்டாள்.

"ஸாரிம்மா... என்னை மன்னிச்சிடு. அரவிந்தன் பொண்டாட்டி நீதான்! இதை யாராலும் மாற்றவே முடியாது. அரவிந்தனுக்கும் உடம்பு நலமானதும் கெட்டி மேளம்தான்... இதை மாற்ற அந்த பிரம்மனே வந்தாலும் முடியாது! உன்னை நான் ரொம்பவே வருத்திட்டேன். இல்லடா செல்லம்... ஸாரி ஸாரிடா" சாரதா இவ்வாறு கூற ஆனந்தத்தோடு அழுகையும் வந்தது கௌசல்யாவிற்கு.

'என் வாழ்க்கையில் அடித்த புயல் கரையைக் கடந்து விட்டது' என்று நிம்மதி கொண்டாள்.

பின்பு... பெரிய சூறாவளியே வீசப் போவது தெரியாமல்!



# 11



அருணா எட்டாம் வகுப்பில் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக' என்ற பாடத்தை சுவாரஸ்யமாய் விளக்க, மாணவர்கள் அமைதியாய் கேட்டுக் கொண்டிருந்தனர்.

வாசலில் நிழலாடியது. திரும்பிப் பார்த்தாள். அட்டெண்டர் நின்று கொண்டிருந்தான்.

"என்னப்பா...?" கேட்டாள்.

"அருணாம்மா... உங்களுக்கு போன்! உங்கம்மாவுக்கு மயக்கம் வந்து கீழே விழுந்துட்டாங்களாம். ஸ்ரீராம் மருத்துவமனையில் அட்மிட் செய்திருப்பதாய் பக்கத்து வீட்டுக்காரர் சொன்னார். உங்களை உடனே ஹாஸ்பிடல் வரச் சொன்னாராம். நம்ம மேடம் விஷயத்தைச் சொல்லி... உங்களை அனுப்பி வைக்கச் சொன்னாங்க" அவன் போய் விட்டான்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. தலையில் கை வைத்து... அலறிக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். அழுகை சத்தம் பக்கத்து க்ளாஸ் மிஸ் தீபாவிற்கு கேட்டு, ஓடி வந்து விபரம் அறிந்து, அமைதிப்படுத்தி... தைரிய மூட்டி அனுப்பி வைத்தாள்.

மருத்துவமனை வராண்டாவில் பக்கத்து வீட்டுக்காரும், அவரது மனைவியும் நின்றிருந்தனர்.

"மாமா... மாமா... அம்மாவுக்கு எப்படி இருக்கு? எங்கே இருக்காங்க?" அழுது கொண்டே கேட்டாள்.

"அழாதே அருணா... டாக்டர் ஊசிப் போட்டிருக்கார். உன் அம்மா நிம்மதியா தூங்கறா! சத்தம் கேட்டு எழுந்துடப் போறா! பயப்படும்படியா ஒன்றுமே இருக்காது.

"மாமி... எனக்கு அம்மாவைத் தவிர யார் இருக்கா?" தேம்பித் தேம்பி அழுதாள் அருணா.

"மண்டு... என்ன இது சின்னக் குழந்தையாட்டம்? ஏதேதோ டெஸ்ட் எடுத்திருக்காங்க... பயப்படும்படியா ஒன்றுமே இருக்காது. நீ ஏன் ஏதேதோ கற்பனைப் பண்ணி உன்னை வருத்திக்கறே?"

எங்களுக்கு நேரமாகுதும்மா... கலங்காதே நாங்க அப்புறம் வந்து பார்க்கிறோம்... வரேம்மா...!" பக்கத்து வீட்டு மாமா சில நூறு ரூபாய் நோட்டுக்களை கொடுத்து விட்டுச் சென்றார்.

சிறிது நேரத்தில் வயதான டாக்டர் வந்தார். அவரை வணங்கினாள்.

"நீதான் இந்தம்மா மகளா?"

"ஆமாங்க சார்."

"நீ மனசை தைரியப்படுத்திக்கோம்மா...

நான் சொல்வதைக் கேட்டு அதிர்ச்சி அடையக்கூடாது. அப்படின்னா சொல்லுவேன். என்ன புரியுதா?"

அவள் இதயம் வேகமாய் அடித்துக் கொண்டது. பேயறைந்தது போலானாள். டாக்டரின் வாயசைவுக்காகக் காத்திருந்தாள்.



"இவ்வளவு நாள் என்ன செய்துட்டு இருந்தீங்க? ரொம்ப மோசமா இருக்கு. இதயத்துல ஒரு வால்வு பழுதாயிட்டது. வாரமோ... பத்து நாளோ... இல்ல ஒரு மாதம் மாத்திரை மருந்துக்கு உன் அம்மாவின் உடம்பு தாங்கும். பின்னாடி பாதிக்கப்பட்ட வால்வை அகற்றிட்டு புது வால்வு பொருத்தணும்.

இந்த அறுவை சிகிச்சை நல்லபடியா நடந்து முடிந்தால் உன் அம்மா, உன்னுடன் பத்து இருபது வருடங்களுக்கு தீர்க்காயுசா இருப்பாங்க."

அருணா கண்கள்... கண்ணீரை ஆறாய் கொட்டியது. பித்துப் பிடித்தவள் போலானாள்.

"டா... டாக்டர் எ... எவ்ளோ செலவாகும்?"

"ரொம்ப சிக்கலானதும்மா... உன் அம்மா வேற வீக்கா இருக்கா... நிறைய ரத்தம் தேவை. குறைந்த பட்சம் இரண்டு லட்சம் வரை வேணும்மா!"

"அய்யோ... அவ்ளோ பணத்துக்கு எங்கே போவேன்? நாங்க ஏழைங்க சார்!"

"நோய் எல்லாம் ஏழைப் பணக்காரன் பார்த்து வராதும்மா! இன்னும் ஒரு மாதத்திற்குள் ஏற்பாடு செய்யும்மா. உன்னைப் பார்க்க பாவமா இருக்கு. சிகிச்சை செய்யும் வரை ஆகும் ஆஸ்பத்திரி, மருந்து செலவு வேணா நீ கொடுக்க வேண்டாம். அதை நானே என் சொந்த பணத்தில் செய்கிறேன். இதுக்கு மேல என்னால முடியாதும்மா."

இந்த மருத்துவமனை நான்கு டாக்டர்கள் கூடி வைத்திருக்கிறார்கள். இந்த மட்டும் கருணை காட்டினாரே என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

"காலதாமதம் கூடாதும்மா! அது உன் அம்மாவின் உயிருக்கு ஆபத்துதான்!"

அவள் வெடித்து அழுதாள்.

"உன் தாமதம், உன் அம்மாவின் ஆயுளைக் குறைச்சிடும். கவனம்மா... கடவுள் துணையிருப்பார்! ஏதாவது உருவில் வந்து உன்னை இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றுவார். கவலைக் கொள்ளாதே மகளே!" அந்த வயதான டாக்டர் அவளின் தோளில் இதமாய் தட்டிக் கொடுத்து விட்டுச் சென்றார்.

அருணாவின் மனதில் பெரிய பாராங்கல்லை ஏற்றி வைத்து விட்டு அகன்றார்.

'என்னை நம்பி அவ்வளவு பணம் யார் கொடுப்பார்கள்? நல்ல வேலையிருக்கிறதா? அல்லது சொத்து பத்து என்று...

செல்வமிருக்கிறதா? எவரிடம் போய் கையேந்துவது? யார் தருவார்கள்? என்னால்... என்னைப் பெற்ற தாயைக் காப்பாற்ற முடியாதா? அவள் கருவறையில் என்னை சுமக்க எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாள்? என்னை வளர்த்து இந்த நிலைமைக்குக் கொண்டு வர எவ்வளவு தியாகங்கள் செய்திருப்பாள்? மழையென்றும், வெயிலென்றும் பாராமல் எனக்காக உழைத்தவளுக்கு நான் செய்யப் போகும் கைமாறு தான் என்ன?

நடுக்கடலில் தள்ளி விட்டது போலத் தவித்தாள்.

தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் கேட்டு வாங்கி... அம்மாவைக் காப்பாற்றிவிட்டு... காலம் முழுக்க அந்த கடனை அடைக்க பாடுபட வேண்டும். அம்மா கொடுத்த



இந்த உயிர் அவளுக்காகவே உழைத்தும் சாக வேண்டும். தெரிந்தவர்கள் அத்தனை பேரிடமும் கையேந்தி பார்ப்போம். கடவுள் விட்ட வழி. முடிந்தவரை முயற்சி செய்வோம்.

முதலில் தாய் வேலை பார்த்த வீட்டிற்குச் சென்றாள்.

"வாடிம்மா... எங்கடி உன் ஆத்தா? ரெண்டு நாளாச்சி...! ரொம்பவே திண்டாடுறேன். அவளுக்கு முடியலேன்னா நீ வருவது தானே! மாசமானா சம்பளம் வாங்கிக்கத் தெரியுதில்லே!"

அருணா மௌனமாய் கண் கலங்கினாள். சுருக்கமாய் சொல்லி முடித்தாள்.

"என்ன கேடு வந்துச்சி? நல்லாத்தானே குத்துக் கல்லாட்டம் இருந்தா? அந்த ஆஸ்பத்திரிக்கு பீஸ் கட்டற அளவு உனக்கு வசதியிருக்கா என்ன? கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியில சேர்த்து வைத்தியம் பார்ப்பது தானே! உனக்கு என்ன பைத்தியமா?"

"நீங்க கொஞ்சம் உதவி பண்ணுங்கம்மா!"

"உனக்கு எவ்வளவு திமிர்டி? என்ன தைரியம் இருந்தா பணம் கேட்பே...? ம்ம்... உன் அம்மா இருந்து மட்டும் என்னத்தை சாதிக்கப் போறா? அவ மண்டையைப் போட்டா சொல்லிவிடு. இங்கே உழைச்சாங்கற ஒரே காரணத்துக்காக கர்ம காரியம் பண்ண வரேன்!"

'ச்சே... என்ன மனுஷி இவள்' அவளைக் கழுத்தை நெரித்துக் கொல்லும் அளவுக்கு ஆத்திரம் வந்தது. தன் இயலாமையை நொந்து கொண்டு... கண்களில் நீர் மின்ன வெளியே வரவும்... அவளுடைய மகன் மோகன் எதிர் கொண்டான்.

அவன் அவளை வெறித்து வெறித்துப் பார்ப்பதே அருணாவிற்கு பிடிக்காது. தேவையில்லாமல் பேச வருவான். அம்மாவைக் காண அங்கு செல்லும் போதெல்லாமும்... அம்மாவிற்கு உடல்நிலைச் சரியில்லையென்றால்... அதுவும் லீவு நாளாய் இருந்தால் வேலைக்குச் செல்வாள். அப்போதெல்லாம் அவன் விரசமான பார்வையும்... வழிசலும் சகித்துக் கொள்ளவே முடியாது.

"அருணா... நீ அம்மாவிடம் கூறியதெல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். உன்னைப் பார்க்க பாவமா இருக்கு... நான் எவ்வளவு வேணாலும் தரேன்" சொல்லி விட்டு அவள் முகத்தை ஆராய்ந்து விட்டு தொடர்ந்தான்.

"அதுக்கு ஈடா நீ எனக்கு ஒரு மாசத்துக்கு டேட்டிங் தானும்... சம்மதமா?" சட்டென தீயை மிதித்தவள் போலத் துடித்தாள். "த்தூ...!" காறி துப்பினாள். வெளியேறினாள்.

"பெரிய கண்ணகிப் பரம்பரைதான்" அவன் கூறியது காதில் விழுந்தது.

## 12



அரவிந்தன் உடல்நிலை நன்கு தேறிவிட்டது. பிரகாஷ்தான் அதிகமான உழைப்பால் திண்டாடி விட்டான். கௌசல்யா தலைகீழாய் மாறி விட்டாள்.



சுடிதாரெல்லாம் அணிந்து அடக்கமான பெண்ணாய் காட்சியளித்தாள். அவளைப் பார்க்கப் பார்க்க அரவிந்தனுக்கு ஆச்சரியமாக இருந்தது. புயலின் வேகத்துடன் இருந்தவள்... தென்றலாய் மாறி விட்டாள். அவள் மேல் முன்பு போல் கோபம் வரவில்லை. மாறாய் லேசாய் பாசம் எட்டிப் பார்த்தது. தன் கற்பனை தேவதை போல் இல்லையென்றாலும், ஒரு பெண்ணின் லட்சணத்துடன் இருப்பது போல் தோன்றியது. இனியும் அவளைக் காக்க வைக்கக்கூடாது. வீட்டிற்குச் சென்றதும் திருமண நாள் குறிக்க சொல்ல வேண்டும்.

பிரகாஷ் வந்தான்.

"காயமெல்லாம் ஆறிடிச்சிடா அர்விந்த். வலி ஏதுனா இருக்கா?"

"வலியே இல்லேடா..."

"வயத்துல வலி இருந்துச்சே... எப்படி இருக்கு?"

"இப்போ சுத்தமா இல்லே. வீட்டுக்குப் போகலாண்டா.

எனக்கு வெளிக்காற்றை சுவாசிக்கணும்! கடற்கரையில கால் புதைய புதைய நடக்கணும்!"

"கௌசல்யா கை கோர்த்துட்டா?"

"போடா... உனக்கு எப்போதும் கிண்டல்தான். நான் சீரியஸா சொல்றேன். என்னால இங்கே இருக்கவே முடியலை!"

டாக்டரிடம் சென்றனர்.

"வாட் ப்ராப்ளம்?"

"ப்ராப்ளம் ஒன்றுமில்லீங்க சார் வீட்டுக்குப் போகணும்னு பறக்கறான்."

"இதுக்கு மேல கௌசல்யாவை காக்க வைப்பது சரியா இருக்காது டாக்டர் சூர்யா! வீட்டுக்குப் போனதும் நல்ல நாள் பார்த்து மேரேஜ்தான்! இன்விடேஷன் தருவேன். நீங்க கட்டாயம் வரணும்" அரவிந்தன் சொல்வதைக் கேட்டு...

டாக்டரின் முகம் ஒரு மாதிரி கறுத்தது. ஏதோ சொல்ல தவித்தார்.

"என்ன சூர்யா... ஒரு மாதிரியாயிட்டீங்க?"

பிரகாஷைப் பார்த்துத் தயங்க...

"டாக்டர் எங்களுக்குள் எந்த ரகசியமும் கிடையாது. எதுவானாலும் தயங்காமல் சொல்லுங்க..."

"மனசைத் திடப்படுத்திக்கோங்க... நான் சொல்லப் போற செய்தியால் அதிர்ச்சி அடையக் கூடாது! ஸாரி.... வெரி ஸாரி..." என டாக்டர் பீடிகை போட...

அரவிந்தன் தவிக்க... பிரகாஷ் கையைப் பிசைந்து கொண்டான்.

"உங்க வயிற்றில் நன்கு அடிபட்ட காரணத்தால்... ஸாரி மிஸ்டர் அரவிந்த்! அந்த ஆக்ஸிடெண்ட்ல உங்க ஆண்மையை இழந்துட்டீங்க... உங்களால் ஒரு பெண்ணை திருப்தி பண்ண முடியும். ஆனால் அவளைத் தாயாக்க முடியாது! உங்களுக்கு மேரேஜ் அவசியமா?..." டாக்டரின் சட்டையைக் கொத்தாய் பிடித்துக் கொண்டான்.

"யேய்... என்னடா சொன்னே?"



சூழ்நிலையின் விபரீதம் புரிந்து பிரகாஷ் இருவரையும் பிரித்து விட்டான்.

"ஐயோ...!" தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டான். உடம்பில் நெருப்பையள்ளி கொட்டியது போலத் துடித்தான். உடல் நடுங்கியது. வேர்வை ஆறாய் ஓடியது.

கண்களிரண்டும் மங்கி விட்டது. பிரகாஷை கெட்டியாய் பிடித்துக் கொண்டான்.

## 13



"அரவிந்த் பதற்றப்படாதீங்க... இயல்பா இருங்க!"

"எப்படி? எப்படி டாக்டர்? பொய் சொல்றீங்க தானே? நான் நல்லா இருக்கேன். திடமா இருக்கேன்."

"மனசு என்னைக்கும் தனக்கு சாதகமாத்தான் நினைக்கும். மனசு பொய் சொல்லும். ஆனால், எங்கள் அறிவியல் பொய் சொல்லாது! இதைப் புரிஞ்சிக்குங்க. வேணும்னா... வேற பேமஸ் டாக்டர்கிட்ட காட்டிப் பாருங்க...! எனக்கு ஆட்சேபனை இல்லை! ஒன்று யோசியுங்கள்... இப்படிப்பட்டவர் கௌசல்யா வாழ்க்கையை வீணாக்க வேண்டுமா?" இயல்பாய் சொல்லி விட்டு டாக்டர் சூர்யா சென்று விட்டார்.

'அடியிலிருந்து வேரறுந்த மரமாய்... நொந்துபோன இதயத்துடன் நடமாடினான். யாரோடும் ஒட்டாமல்... தனிமையை நாடினான். இவன் அறையிலேயே முடங்கிக் கிடப்பதை யாரும் வித்தியாசமாய் பார்க்கவில்லை. 'பிள்ளைக்கு உடம்பு முடியவில்லைபோல' என்று அவனுடைய அப்பாவும் கம்பெனிக்கு பிரகாஷோடு சென்றார்.

பிரகாஷ் வேறு டாக்டரிடம் போகலாம் என்று கெஞ்சிப் பார்த்தான்... அன்பாய் சொல்லிப் பார்த்தான்... முடிவாய் அதட்டியும் பார்த்தான்.

அரவிந்தன் அசங்கவில்லை. 'வேறு டாக்டரிடம் காட்டி நான் இன்னும் அவமானப்பட வேண்டுமா?' மறுத்து விட்டான்.

கௌசல்யாவின் அப்பா வேறு திருமணத்திற்கு அவசரப்படுத்தினார். ஆனால், அரவிந்தனுக்கோ கௌசல்யாவைப் பார்க்கவோ... பேசவோ பிடிக்கவில்லை. அவளைக் கண்டாலே பயமாக இருந்தது.

அரவிந்தன் வேதனையை மறக்க குடிக்கவும் செய்தான். எப்போதாவது சிகரெட் பிடித்தவன் கையில்... நாள் முழுக்க சிகரெட்டாய் இருந்தது. பிரகாஷ் வசிக்கும் இவர்களுடைய பங்களாவிற்கு சென்று விடுவான். நாள் முழுக்க இருந்து விட்டுத் திரும்புவான்.

ஒருநாள்... இருட்டியும் லைட் போடாமல் படுத்திருந்த அவனுடைய அறைக்கு ப்ரியா சென்றாள்.

"லைட் கூட போட்டுக்காம இருட்டில அப்படி என்ன செய்யறீங்க? நான் கேட்பது காதில் விழவில்லையா?" லைட்டைப் போட்டாள்.



"நிச்சயமாகி குறைந்து மூன்று மாதத்திற்கு மேலே ஆகிவிட்டது.. அவங்க வேற எப்போ மேரேஜ் வச்சிக்கலாம்னு கேட்கறாங்க... உடம்பு நல்லாயிடுச்சில்லே...!"

"வேணாம்... எனக்கு மேரேஜ் வேணாம்..."

"அண்ணா என்ன பேசறேன்னு தெரிஞ்சிதான் பேசறியா?"

"என்னைக் கொஞ்சம் தனியா விடு! ப்ரியா... நீ வெளியே போறியா... இல்லையா?" சத்தம் போட்டான்.

"சரியான பதில் சொல்லும் வரை போக மாட்டேன். நான் உங்க தங்கை... உன் பிடிவாதம்... கோபம்... வீம்பு... எல்லாமே என்கிட்டேயும் குறையல... கௌசல்யாவைப் பார்த்தால் பாவமாக இல்லையா?"

"ப்ரியா..." சத்தமாய் கூறும்போது பிரகாஷ் உள்ளே நுழைந்தான்.

"அரவிந்த்... நீ செய்யறது எதுவுமே எனக்குப் பிடிக்கல! ஏன் இப்படி உணர்ச்சி வசப்பட்டு கத்தறே?"

"என்னால முடியல பிரகாஷ்... சத்தியமா என்னால நிம்மதியா இருக்க முடியலேடா! செத்துப் போகணும் போல இருக்கு."

"ஐயோ..." அவன் வாயைப் பொத்தினான்.

"நிஜம்டா... எனக்கு நிம்மதின்னா அது சாவில்தான்! இப்படி ஒரு குறையோடு இருப்பதைவிட.. செத்துப்போ... செத்துப்போ...ன்னு மனசில ஒரு குரல் சதா ஒலிச்சிட்டே இருக்கு. நான் இருக்கக் கூடாது. சாகணும்" அரற்றினான் அரவிந்தன்.

நண்பனின் நிலை கண்டு கவலை கொண்டான். அவனை தேற்ற வழி தெரியாமல் உட்கார்ந்து விட்டான்.

"நான் சாகணும்... பிரகாஷ் நான் சாகணும்!" மீண்டும் மீண்டும் அரவிந்தன் கூற... ஆத்திரப்பட்டான்.

"நீயே அப்பா... அம்மாவுக்கு தெரிவிச்சிடுவபோல இருக்கே!" சீறினான்.

"நான் ஆண்மையற்றவன்னு நீ நம்பறியா? என்னால அப்படி சும்மா கூட நினைச்சிப் பார்க்க முடியலேடா..."

"இதே மனநிலையோட கௌசல்யாவை மேரேஜ் பண்ணிக்க!"

"எப்படி? எப்படிடா? எனக்கு பயமா இருக்கு. உண்மையிலேயே எனக்கு குறையிருந்து... தேரா... என்னால ஒரு பெண்ணுக்குத் தெரிஞ்சே துரோகம் செய்ய முடியாது! கௌசல்யாவுக்கு குழந்தைன்னா ரொம்பவே பிடிக்கும்ன்னு சொல்லியிருக்கா... அவளை ஏமாற்ற என்னால் முடியாதுடா."

"ஏன்டா இப்படிப்போட்டு குழப்பிக்கிறே? நீ குழம்பறது இல்லாம... எல்லாத்தையும் குழப்பறே! இங்கே வேண்டாம்... மும்பை... இல்ல அமெரிக்கான்னு போகலாம்... டாக்டர்கிட்ட காட்டலாம். உறுதிப்படுத்திக்கலாம்... என்னடா?"

"பிரகாஷ் என்னைப் புரிஞ்சிக்கோடா?"

"ச்சே... படித்தவன் போலவா இருக்கே? படிக்காதவனெல்லாம் பரவாயில்லை போலத் தெரியுதே!



நீ நிறையவே குடிக்கறே! நிறுத்துடா... இது சரியில்லை! நீ மோசமான பாதையை நோக்கி பயணம் செய்யறே... ப்ளீஸ்டா..."

"நான் நிம்மதியா இருப்பது பிடிக்கலையா?" அரவிந்தன் கூற பிரகாஷ் வாயடைத்துப் போய் விட்டான்.

பிரகாஷ் வீட்டிற்கு வந்து துணிமாற்றிக் கொண்டு... ஷோபாவில் அலுப்புடன் சாய... அழைப்பு மணி விடாமல் அடித்தது.

பிரகாஷ் வந்து கதவைத் திறக்க... அருணா நின்றிருந்தாள். தன்னுடைய கிராமத்திற்கு அடுத்த கிராமம். படித்தது எல்லாம் அருகில் உள்ள டவுன் பள்ளியில். பிரகாஷ் சீனியர்... அருணா ரொம்பவே ஜூனியர். அவன் அவளோடு எத்தனையோ முறை பேச முயற்சி செய்தும்... அவள் நின்று பேசியதில்லை. ஒரு பார்வையோடு... இலேசான புன்னகையோடு சென்று விடுவாள். அப்படிப்பட்டவள் அவனைத் தேடி வருவதென்றால்... ஆச்சரியமே! இவன் இருப்பிடத்திலிருந்து பத்து வீடு தள்ளி குடியிருக்கிறாள்.

அவளை அழைத்து உட்கார வைத்தான்.

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லை..." என்று தொடங்கி அனைத்தையும் சொல்லி முடித்தாள்.

"டாக்டர் சொன்ன கெடு முடியப் போகிறது. என் தோழி மட்டும் ஐம்பது ஆயிரம் கொடுத்தாள்... எங்கள் கையிருப்பு பத்து என்று அறுபது ஆயிரமே உள்ளது! கடைசியாகத்தான் உங்களிடம் வந்தேன். உங்களால் உதவ முடியுமா அண்ணா?" பரிதாபமாய்க் கேட்டாள்.

"ஸாரிங்க... உங்களுக்கு உதவ முடியாத நிலையில் உள்ளேன். இப்போதான் என் தங்கைக்குப் பெரிய இடத்தில் என் கையிருப்பையெல்லாம் போட்டு மேரேஜ் பண்ணிக் கொடுத்தேன். அவ்ளோ பணம் என்னிடம் இல்லையே!"

"எங்கெங்கோ அலைந்து... திரிந்து... எல்லோரும் கை விரித்துவிட.... என் மனதில் சின்னதாய் நம்பிக்கை! நீங்கள் உதவுவீர்கள் என்று! மலையாய் நம்பியிருந்தேன் அண்ணா! நீங்களும்... நீங்களும்..." அருணா தேம்பியழுதாள்.

"முதலில் அழுவதை நிறுத்தும்மா... பெரிய கோழையாய் இருப்பே போல தெரியுது! என்கிட்டே இல்லேன்னேன்... முயற்சி செய்கிறேன் யாரிடமாவது..." சட்டென்று பொறி தட்டியது.

"அரவிந்தன் இருக்கான்... அட அவனை மறந்துட்டேனே! அவன் கம்பெனியில்தான் வேலை பார்க்கிறேன். அவங்க அம்மா பேரில், பெரிய ட்ரஸ்ட் நிறுவி, நிறையப் பேருக்கு உதவிட்டு வரான். உங்கம்மாவுக்கு கேட்டா... இல்லேன்னா சொல்லப் போறான்."

"அண்ணா..."

"பயப்படாதே அருணா! அம்மாவோட ஆஸ்பத்திரி செலவு அத்தனைக்கும் நான் ஏற்பாடு பண்றேன்... என்னை நம்பு அருணா!"

"அவர் தரும் பணத்திற்கு எப்படியாவது காலம் முழுக்க உழைச்சாவது கடனை அடைச்சிடறேன் அண்ணா!"



"எதாவது உளறாதே! அவன் உதவி செய்வது திரும்ப பெறுவதற்காக அல்ல! நிம்மதியாப் போம்மா அருணா. நான் சீக்கிரம் ஏற்பாடு செய்றேன்."

அருணா நிம்மதியாகப் போனாள். அவள் நிம்மதியில் மண் விழப் போவது தெரியாமல்!

## 14



மறுநாள்...

காலை 9.00 மணி.

அருணா கண்களில் நீர் மல்க ஓடி வந்தாள்.

"என்ன அருணா?"

"பிரகாஷண்ணா நான் எப்படிச் சொல்வேன்? அம்மாவுக்கு ரொம்ப சீரியஸா இருக்கு. நேரா ஆஸ்பத்திரியில் இருந்து தான் வரேன். இன்னைக்குள்ளே ஆபரேஷன் செய்யணும்னு சொல்றாங்க" விம்மினாள்.

"நீ பயப்படாதே போ அருணா! நான் சீக்கிரமே வரேன். நேரா அரவிந்தன் கிட்ட போயிட்டு... செக் வாங்கி பேங்கல கேஷாக்கிட்டு வரேன்."

"நிச்சயமா ஹாஸ்பிடலுக்கு பணத்தோட வருவீங்களாண்ணா?"

"என் தங்கை மாதிரிங்க நீங்க! ஏமாத்துவேனா? பயப்படாதீங்க..." அவளை அனுப்பி விட்டு... அரவிந் தனிடம் போனான்.

ப்ரியா தான் சந்தோசமாய் சொன்னாள்.

"அண்ணா ஆபீசுக்கு போயிட்டார் பிரகாஷ். அதைப் பார்க்க எவ்வளவு சந்தோசமாய் இருக்கு தெரியுமா?"

"சரி நான் வரேன்."

பிரகாசுக்குக் கூட அரவிந்தன் ஆபீசுக்கு போனது ரொம்ப ரொம்ப சந்தோசமாய் இருந்தது.

அரவிந்தன் பைல்களைப் புரட்டிக் கொண்டிருந்தான். அருணா அம்மாவின் நிலைமையைக் கூறினான்.

"உன்னிஷ்டம்! ஏதாவது செய். பிளாங்க் செக் எடுத்து. எவ்வளவு வேணா நிரப்பிக் கொடு. கையெழுத்துப் போடறேன். ஆளை விடு!" என்று விட்டேத்தியாய் கூறினான்.

"நீயும் வாடா அரவிந்த்! பேங்கல கேஷாக்கிட்டு அப்படியே ஹாஸ்பிடல் போயிட்டு வந்துடலாம்." பிரகாஷ் கெஞ்ச...

"சரி வரேன்!"

மேனேஜரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுச் சென்றனர்.

ஒரு வினாடிகூட வீணாக்கவில்லை. காலில் சக்கரங்கள் கட்டிய வினாடிகள் நிறைய! வங்கியிலிருந்து பணப் பெட்டியோடு ஹாஸ்பிடலை நோக்கிச் செல்லும்போது அரவிந்தன் பாரைப் பார்த்து விட்டான்.



"பிரகாஷ்... என்னை இங்கே இறக்கி விட்டுட்டு... நீ மட்டும் போடா...! நான் டாக்ஸி பிடிச்சிப் போயிடறேன்."

"என்னடா இது? அந்தம்மா சீரியஸா இருக்குன்னு சொல்றேன்! இந்த நேரத்துல நீ... என்ன விளையாட றியா?"

"எனக்கு குடிக்கணும்... நிம்மதியா இருக்கணும்!"

"அப்போ நல்லப்பிள்ளையா ஆபீஸ் வந்தது."

"சும்மா... ஒரு ஸ்மால் விசிட்!"

"நீ முட்டாளாடா? ஏண்டா இப்படி உன்னையே அழிச்சிக்கிறே? நீ கல்யாணம் பண்ணிக்குவேன்னு கௌசல்யாவும்.. அண்ணா தான் எல்லாம் நமக்கு செய்வான்னு ப்ரியாவும்... மகனைத் தவிர வேற உலகம் இல்லேன்னு வயசான அம்மா... அப்பா, இவங்களையெல்லாம் ஏமாத்தறே பாரு! இது எவ்வளவு பாவம் தெரியுமா? இது சரியில்லை!

"எது சரி? எது தவறு?ன்னு எனக்குத் தெரியும்! என் நிலைமையில் இருந்தா நீ செத்தே போயிருப்பே தெரியுமா?" கார் கதவை அறைந்து சாத்திவிட்டுச் சென்றான். அரவிந்தனை அம்போ என்று விட்டு விட்டுப் போக மனம் வரவில்லை. அவன் பாட்டிலை வாங்கி ஒன்று... இரண்டு... மூன்று... என ரவுண்ட் ஏற்றிக் கொண்டு மயங்க... இழுத்து வந்து காரின் பின் சீட்டில் படுக்க வைத்தான்.

டாக்டரிடம் சென்று பணம் கட்டினான். டாக்டர் பிரகாஷைப் பார்த்துச் சொன்னார்.

"இந்த அருணாப் பொண்ணு சாப்பிடாம... அழுது அழுது தன்னையே வருத்திக்கிறா! அவ அம்மாவுக்கு

ஆபரேசன் செய்யும் போது இவ இங்கே இருக்க வேண்டாம். நல்லா சாப்பிட வைத்து... அவளை வீட்டில் விட்டு விட்டு... நீங்க வந்தாப் போதும். உங்களால் முடிந்தால் வாங்க... பயப்பட வேண்டாம் அருணா. நாங்க பாத்துக்கிறோம்.

சாரோட போய் ஆண்டவனைப் பிரார்த்தனை செய்திட்டு வீட்ல போய் படும்மா..." அருணாவைப் பார்த்துச் சொல்லி... பிரகாஷோடு அனுப்பி வைத்தார். அவளுக்கு அம்மாவை விட்டு விட்டுப் போகவே மனமில்லை. ஆனாலும் ஆஸ்பத்திரியில் இருக்க பயமாய் இருந்தது.

"அண்ணா... நான் அந்த தெய்வத்தைப் பார்க்கணும்!"

"யாரு அரவிந்தையா சொல்றே! அயோக்கியன்!"

"என்னண்ணா சொல்றீங்க?"

"நான் சொல்லச் சொல்ல கேட்காம குடிச்சிருக்கான்."

"குடிகாரனாகத்தானே இருக்கார்! பொம்பளை கையையா அத்து மீறி பிடிச்சி இழுத்துட்டார்! அயோக்கியன்னு சொல்றீங்க! போங்கண்ணா..." பிரகாஷ் மேல் கோபப்பட்டாள்.

காரில் ஏறி உட்கார்ந்தாள். திரும்பி... திரும்பி பின் சீட்டையே பார்த்துக் கொண்டு வந்தாள்.

"ரொம்ப ரொம்ப நல்லவன். பார்ட்டியில கூட டிரிங்ஸ் குடிக்க மாட்டான். எல்லாம் இப்போ சமீபத்தில வந்த கெட்ட பழக்கம்தான். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சுத்தமா



மாறிட்டான். திருத்த எவ்வளவோ ட்ரைப் பண்றேன். மாற்ற முடியவில்லை!"

அருணா இருந்த மனநிலையில் எந்த நிகழ்ச்சிக்குப் பிறகு என தோன்றி... துருவவில்லை.

பின் சீட்டில் படுத்திருந்தான் அரவிந்தன் திடீர் திடீரென பின் சீட்டைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

"என் தெய்வம்... என் தெய்வம்! டாக்டர் கூட சொன்னார். கடவுள் ஏதாவது ரூபத்துல உன்னை வந்து காப்பாற்றுவாரம்மான்னு... அது... அது... இப்படி ஒரு மனித ரூபத்தில் வரும் என கனவிலும் நினைக்கவில்லையண்ணா! என்னை இப்படி அலைய விட்டு... என் வாழ்க்கையில் இப்படி ஒரு உருவமாய்... உயிராய் வந்து உதவி செய்துவிட்டாரே கடவுள்!"

அரவிந்தனை தன் கடவுளாகவே கண் மூடி பிரார்த்தனை செய்து கொண்டு வந்தாள்.

"அருணா... கொஞ்ச நேரம் சும்மா வரியா? அழுதழுது ஏன் உடம்பை கெடுத்துக்கறே! இந்தா கர்சீப் கண்ணைத் துடைச்சிக்கோ!"

பிரகாஷின் வீட்டின் முன் காரை நிறுத்தினான். அரவிந்தனைத் தூக்கிக் கொண்டு வந்து கட்டிலில் போட்டான்.

"சரி அருணா... இவன் இங்கேயே இருக்கட்டும். நீ உன் வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுத்துக்கோ! ஆபரேசன் முடிஞ்ச உடனே நான் வந்து அழைத்துப் போறேன்! சரியா?"

"ம்... சாவியை என்னிடம் கொடுத்து விட்டுப் போங்களேன்."

"இந்தா வச்சிக்கோ! இவனைப் பற்றி கவலைப்படாதே! அவன் இப்போதைக்கு எழ மாட்டான். காரில் வருகிறாயா?

"இதோ பத்து வீடு தள்ளித்தானே இருக்கு.. ஒரு நிமிச நடை நான் போய் கொள்கிறேன்."

அவன் செல்ல... இவளும் வீடு வந்தாள். அவளால் நிம்மதியாய் இருக்க முடியவில்லை.

"அம்மாவின் நெஞ்சைபறுத்து கூறுபோடப் போகிறார்களே! அம்மாவின் ஆபரேஷன் நல்லபடியாய் முடிய வேண்டும்... அம்மா... என் செல்ல அம்மா... எனக்கு மறு பிறவியாய் மீண்டும் கிடைக்க வேண்டும்..."

இந்த நேரத்தில் அரவிந்தனை நினைத்து வேதனையடைந்தாள். நல்லவர் என்கிறார்கள். பிறகு ஏன் இப்படி சீரழிய வேண்டும்? ஐய்யோ... அவர் முழித்திருந்தால்... அல்லது கட்டிலில் இருந்து கீழே விழுந்திருப்பாரோ... திரும்ப ஓடினாள்.

அருணா நினைத்தது போலவே கட்டிலில் இருந்து கீழே விழுந்து கிடந்தான்.

அரவிந்தன் நெற்றியில் பொடிப் பொடியாய் வியர்வை. ஓடிப்போய் துண்டு எடுத்து வந்து மெதுவாய் ஒற்றி எடுத்தாள். பேனை அதிகப்படுத்தினாள். அவனுடைய சட்டையில் இரண்டு பட்டனை கழற்றி



விட்டாள்... அவனுடைய காலில் இருந்த சாக்ஸை கழற்றினாள்.

அவன் அருகில் போனாலே மதுவின் நெடியும்... சிகரெட் வாடையும் கோரமாய் நாசியைத் தாக்கியது. அவனுக்கு பணிவிடை செய்வதில் ஆர்வம் கொண்டாள். தெய்வத்திற்கு செய்யும் பயபக்தியுடன் செய்தாள்.

முன்பின் தெரியாத அவனுக்கு அவள் உதவும் போது... அவளால் எப்படி கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்க முடியும்?

முதல் பார்வையிலேயே... இதயத்தில் குடிகொள்ளும் அரவிந்தனின் அழகு முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தாள். அவனையே எண்ணி எண்ணி வியந்தாள். இப்படி திருட்டுத்தனம் செய்யும் கள்ள மனதிற்கு ஒரு கொட்டு வைத்தாள்.

"என் நிம்மதி போச்சே! என் நிம்மதி போச்சே!" உளறினான். அவன் தரையில் கிடப்பது அவளுக்கு கஷ்டமாய் இருந்தது.

ஆடவர்களையே ஏறெடுத்துப் பார்க்காதவள்... சட்டென்று ஒரு முடிவுக்கு வந்து அவனை அள்ளி எடுத்தாள். ஒரு பூங்கொடி கொழு கொம்பைத் தாங்க முடியாமல் வளைவது போல் வளைந்தாள். அவன் பின்புறமாக கட்டி... அணைத்தவாறு... தூக்கி... உட்கார வைத்து... பின் படுக்க வைத்தாள்.

அந்த அணைப்பு... அவன் முதுகில் மெத்தென்று மோதிய மார்பு... அவனைத் தட்டி எழுப்பியது. கௌஷியோடு ஸ்ப்லெண்டரில் சென்றபோது ஏற்பட்ட

அவள்தை... கட்டுப்படுத்த முடியாமல்... அவளை கட்டியணைத்துக் கொண்டான். அவள் இப்படியெல்லாம் நடக்கும் என எதிர்பார்க்கவில்லை.

'பிடியா அது? உடும்பு பிடி!'

அவள் திமிறினாள். முடியவில்லை. அறை வேறு இருட்டாய் தெரிந்தது.

"கோஷி... கோஷி..." உளறினான்.

"ஐயோ... என்னை விடுங்க! நான்... நான் அவன் மார்பில் குத்தினாள்... நகத்தால் பிராண்டினாள்... பல னேதுமில்லை...

"விடுங்க... என்னை விடுங்க..." அதற்கு மேல் அவன் அவளைப் பேச விடவில்லை. அவனை எதிர்த்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எடுத்த முயற்சிகள் அத்தனையும் வீணாகியது. அவள் உடல் நடுங்கியது. அவள் முற்றிலும் தன்னை இழந்து... அவனுடையவள் ஆனாள்.

'அங்கே தாயின் இதயம் அறுக்கப்பட்டது.'

'இங்கே மகளின் கற்பு பறிக்கப்பட்டது.'

'அங்கு தாயிற்கு ஜனனம்.'

'இங்கு மகளுக்கு மரணம்.'

தோல்வியைக் கூட வெற்றியாக்கலாம்...

சோதனையைக்கூட சாதனையாக்கலாம்...

ஆனால், இந்த வேதனையை...?

ஆண்டவன், அவள் கண்களைப் பறித்துப் போயிருந்தாலும் இந்த அளவு கவலை கொள்ள மாட்டாள். ஆனால் பறித்தது கற்பையல்லவா?



முடமாகிப் போனது காலாய் இருந்தால் கவலை கொள்ள மாட்டாள். ஆனால் கற்பல்லவா?

அவளின் கருவறை கல்லறையாகிவிட்டது!

அரவிந்தன் அந்த சுகத்திலும்... மீதியிருந்த போதையிலும் மீண்டும் உறங்கிவிட்டான்.

காதலோடு கூடிய காமம்... நேசிக்கப்பட வேண்டியது... பூஜிக்கப்பட வேண்டியது! ஆனால், இங்கு காதலேது?

தீயிலிட்ட வண்ணத்துப் பூச்சியாய் துடிதுடித்து விட்டாள். எரிமலையில் சிக்கியது போல உடலெல்லாம் எரிந்தது. கண்களிரண்டும் அருவியாய் கண்ணீரைக் கொட்டின. இப்படி ஒரு சுனாமி... தன் வாழ்க்கையில் ஏற்படும் என்று கனவில்கூட.... எதிர்பாராதவள்! இந்த அவலத்தைக் கண்டு... தாங்கிக் கொள்ள முடியாமல் நெஞ்சே வெடித்து விடும் அளவுக்கு குமுறிக் குமுறி அழுதாள்.

15



அருணாவின் நெஞ்சு விம்மியது. அவள் தன் மார்பில் அறைந்து கொண்டு அழுதாள். அங்கே அம்மாவின் நிலை கண்டு பயந்து போகாமல் இருக்க எண்ணியதன் பலனா? இல்லை, இந்த அரவிந்தன் மேல் கொண்ட பாவத்தின்

பலனா? இவனைத் தொட்டு... துடைச்சி... தூக்காம இருந்தால் இப்படியெல்லாம் நேர்ந்திருக்காதே! அரவிந்தன் என்னை இப்படி பாழ்படுத்த நானே காரணமா? என்னை நாசப்படுத்திக்கொள்ள நானே உடந்தையாகிப் போனேனே! என் கற்பு பறிபோக நானே எமனாக இருந்து விட்டேனே! நானே போய் விட்டில் பூச்சியாய் விளக்கில் விழுந்து விட்டேனே!

'அரவிந்தன் எழுந்தால் நம்புவானா? எனக்கு என்ன தான் வழி? தெய்வமே!'

அருணா வயிற்றிலும்... வாயிலும் அறைந்து கொண்டு அழுது அழுது ஓய்ந்து எப்பொழுது தூங்கினாள் என்றே தெரியாது. பிரகாஷ் வந்தான். அவன் முகத்தில் மலர்ச்சி!

"அருணா... அருணா" தட்டியெழுப்பினான்.

"என்ன இது இருட்டிப் போயிடிச்சி... லைட்டக்கூட போடாம அப்படி என்ன தூக்கம்?"

அருணா எழுந்தவள் பேந்த பேந்த முழித்தாள்.

"அருணா ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சது. எந்த பாதிப்பும் இல்லை... சந்தோஷமா? ஏன் நீ ஒரு மாதிரி இருக்கே? எப்போ இங்கே வந்தே? அந்த நடியன் இன்னும் எழுந்தபாடில்லை? படுக்கையறையை எட்டிப் பார்த்தான். இவள் இருந்தது வரவேற்பு அறை. மீண்டும் அருணாவின் அருகில் வந்தான். அவளின் கலைந்த தலையும்... வீங்கிய உதடுகளும்... சிவந்த கண்களும்... கசங்கிய ஆடைகளும்... அவனுக்கு ஏதோ விபரீத செய்தியை வெளியிட்டது. பதறினான்.



சட்டென இதயமே வெடித்து விடும் அளவு அவள் அழுதாள்.

"என்னம்மா...? என்ன?... அருணா... என்னம்மா நடந்தது? ஏன்... ஏன் அழறே?"

"அ... அண்ணா நா... நா... நான் எப்படிச் சொல்வேன்? என்னை அ... அவர்?" கதறினாள்.

"ஐய்யோ... என்னம்மா...? என்னம்மா என்ன சொல்றே? அவனா? அவனா?"

'உங்க ஆண்மை நரம்புகள் எல்லாம் சேதப்பட்டிருக்கு... ஒரு பெண்ணை முழுமையா திருப்தி செய்ய முடியும்... ஆனால் தாயாக்க முடியாது' டாக்டர் சொன்னது நினைவுக்கு வந்தது.

"அருணாம்மா... அவன் அப்படிப்பட்டவன் இல்லையே! எப்படிம்மா?"

"அண்ணா... என்னை நீங்க நம்பலையா?" அப்பாவியாய் கேட்டாள்.

"என்ன அருணா...? நான் உன்னை நம்பறேன். நீ எவ்வளவு நல்லவளோ?... அதைப் போலவே அவனும் நல்லவன்! இதுவரைக்கும் இது போல கெட்டப் பழக்கம் எல்லாம் இல்லம்மா...! முன்கோபி! ஆனால் முரடன் இல்லே! ஏதோ குடி போதையில உன்னை இப்படி பாழ்படுத்திட்டான். இருக்கற பிரச்சினையில இது வேற பெரும் பிரச்சனையா?"

"நான்... நான் இந்த அவமானத்தோடு எப்படி வாழ்வேன்?"

"அருணாம்மா... அரவிந்தனுக்கும் கௌசல்யாவுக்கும் நிச்சயமாகி... ஒரு ஆக்ஸிடெண்டால ஏற்பட்ட பிரச்சனையால கல்யாணம் நிக்குது. இந்த நேரத்துல இப்படியா பிடிச்சே!"

உயிர் போவது போல அலறினாள் அருணா.

"நிச்சயமா... வேறு பெண்ணோடையா? என் தலையில் கல்லைத் தூக்கிப் போடுகிறீர்களே! என் வாழ்க்கை?"

"அருணா நான் எப்படி புரிய வைக்கறதுன்னே தெரியலம்மா? ஏற்கனவே... அங்கே ஒருத்தி காத்துட்டு இருக்கா... பெரிய பத்ரகாளி மாதிரி இருந்தவ... இவன் பாசத்துக்கு ஏங்கி... ஆஸ்பத்திரியில அவ அனுபவிச்ச வேதனையை கண்ணால் கண்டவன் நான். கௌசிக்கு இதெல்லாம் தெரிஞ்சா... அவ திருமணம் நின்னு போயிட்டா தாங்கிக்க மாட்டாம்மா...! ஒரு பொண்ணோட வாழ்க்கையே உன் கையிலதாம்மா இருக்கு!..."

"ஏற்கனவே. இந்த அளவு அழிவுப் பாதையை நோக்கிப் போனவன்... இந்த தப்பை நினைச்சி நினைச்சே எதிர்கொள்ற மனப்பக்குவம்... இப்போ இல்லேம்மா! நொந்து போயிருக்கான். மேலும் நீ நோகடிச்சிடாதே! நீ... நீ அவனை வாழ விடணும்... இதை உன்கிட்ட பிச்சையாக் கேட்கிறேன்... ப்ளீஸ்... ப்ளீஸ்... செய்வியாம்மா? அரவிந்தன் உன் தாயின் உயிரை மீட்டுத் தந்தவன். அதுக்காகவாவது நீ அவனை வாழ விடணும்."

இயல்புக்கு வந்தாள். அவளுக்கும் அவனுக்கும்... மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடாய்த் தோன்றியது. அவன் போய் தன்னை மணந்து கொள்வான்... என்று நினைப்பது எவ்வளவு பெரிய முட்டாள் தனம்? சரியான



பொருத்தம்தான் வருமா? குப்பை மேட்டில் கிடப்பவள் கோபுர உச்சிக்கு ஆசைப்படலாமா? ஏற்கனவே நிச்சயமான திருமண ஒப்பந்தத்தில் நாகரீகம் இல்லாமல் நுழையலாமா?

"நான் என்ன செய்ய?" அருணாவின் முகத்தில் தெளிவு பிறந்தது. திடீர்ன்னு தவறி சாக்கடையில கால விட்டுடறோம். அதுக்காக காலை வெட்டி வீசிடவா முடியும்? அது போல உனக்கு நேர்ந்த விபத்தை மறந்து பழைய அருணாவா மாறணும்!

"....."

"இவன் செய்த தப்புக்காக எந்த ஒரு குற்ற உணர்ச்சியும் வராமல் நீ ஒரு பொய் சொல்லணும்... இப்படியெல்லாம் செய்யச் சொல்ல நான் வெட்கப்படறேன்... வேதனைப் படறேன்... என்னைப் புரிஞ்சுக்கோ அருணா...!" அவன் மேலே சொல்லிக் கொண்டு போனான். அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தாள்.

பின் யோசித்தாள். ஆர்ப்பரித்த கடலின் அமைதி அவள் முகத்தில்... ஆனால் உள்ளத்திலோ உணர்ச்சிகளின் கொந்தளிப்பு.

'தன் தாயைக் காப்பாற்றியவனுக்கு இதுகூட செய்யவில்லையென்றால்... நன்றியே இல்லாதவளாய்ப் போய்விடுவேன். என்னுடைய இந்த கதிக்கு நானும் தானே காரணம்! பேசாமல் வீட்டில் இருந்திருந்தால் இப்படியொரு பூகம்பம் ஏற்பட்டிருக்குமா? பாவம் பார்த்த பாழாய்ப் போன இதயத்திற்கு இதுவும் வேண்டும்...! இன்னும் வேண்டும்! விடை தெரியாத எத்தனையோ

கேள்விகள்... அவள் நெஞ்சில் நெருஞ்சியாய் குத்தியது.

அருணாவிற்கு செய்யும் பச்சை துரோகமாய் நினைத்தான். ஒரு பெண்ணின் பொல்லாத பாவத்தைச் சுமக்கப் போகிறோம்! ஒரு பெண்ணின் சாபக் கேட்டிற்கு பலியாகப் போகிறோம்... 'இறைவா!' பிரகாஷ் நொந்து போனான்.

## 16



அரவிந்தனுக்கு போதை தெளிந்து விட்டது. எழுந்தான். மாற்றத்தை உணர்ந்தான். கௌஷியோடு கொண்ட உறவு திகைத்தது. வெளியே ஹாலுக்கு வந்தவன் பிரகாஷைக் கண்டான்.

"டேய் மடையா... எங்கேடா போயிட்ட? கௌஷி இங்க வந்தா... என்னைத் தொட்டுத் தூக்கினதுனால என்னைக் கட்டுப்படுத்த முடியலடா! அவ தடுக்க... தடுக்க... திருமணமே வேண்டாம்னு இருந்த நான்... இப்ப என்னடா செய்ய?" பரிதாபமாய் கேட்டுக் கொண்டே வந்தவன்... அங்கே வர்ணம் இழந்த சித்திரமாய்... தன் கற்பனை தேவதையை ஒத்த ஒருத்தி அழுது கொண்டிருப்பதைக் கண்டான். இவ்வளவு நாள் தேடிய என் தேவதை போன்ற ஒருத்தி இங்கே... இப்போது எப்படி? ஆச்சரியப்பட்டான். இது... இது... ஏன் அழறாங்க? அவனுக்கு லேசாய் புரிந்தும்... புரியாமலும் இருந்தது.



பிரகாஷ் வெடித்தான்.

"இது அருணா... ஆபரேஷன் பண்ண பணம் கொடுத்தியே அந்தம்மா பொண்ணு... நீ கெடுத்தது இவளைத் தான்!"

இடியெனக் கேட்ட இந்த சொற்களால் வாடிப்போய் அமர்ந்து விட்டான். அவன் உடம்பு நடுங்கியது.

"பி... பிரகாஷ்... பிரகாஷ் என்னடா சொல்றே?"

"எல்லாத்துக்கும் காரணம் உன் குடிதான். உங்களுக்கெல்லாம் குடிச்சிருந்தா பக்கத்துல இருக்கறது அம்மாவா? தங்கையா? யார்?ன்னு பிரிக்கப் பார்க்கத் தெரியாதா? எல்லாத்தையும் பெண்டாள நினைப்பீங்களா?"

"ரெண்டு அடி அடிச்சிருடா? இப்படி பச்சையா பேசாதே! டாக்டர் சொன்ன செய்தியால பாதி உயிரை விட்டேன்... இப்போ நான் செய்த தப்பை நினைக்கும் போது மீதி உயிரும் போயிடுச்சு... உன் கற்பு பறி போக நான் காரணமாயிட்டேன்... நீ என்ன சொல்றியோ அதுப்படி கேக்கறேன்... நான் இப்போ என்ன செய்யணும்?" அருணாவைப் பார்த்துக் கேட்டான் அரவிந்தன்.

அருணா தன்னை அடக்கி... ஒருநிலைப்படுத்தி... முடிவுக்கு வந்தவளாய் எழுந்தாள். தெளிவாய் பேசினாள்.

"சார்... உங்க சுயநினைவோடவா இதை செய்தீங்க? இல்லையே! வேணும்னு செய்திருந்தா வருத்தப்படலாம்.

கலங்காதீங்க...'' அவள் கண்களில் கண்ணீர் அருவியாய் வழிந்தது. பின் இதை சொல்லும்போது நா கூசியது.

"நீ ஆம் ஏ கால்கேர்ள்! ஆனால், தொழிலை விட்டு வருசம் ஒண்ணாச்சி!'' இப்படிச் சொல்லும்போது குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

அரவிந்தன் அவளை அற்ப புழுவைப் பார்ப்பது போலப் பார்த்தான். அவளால் தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்தாள்.

"என் அம்மாவை காப்பாற்றியதற்கு ரொம்ப... ரொம்ப நன்றிங்க. இந்த நிகழ்ச்சிக்காக உங்களுக்கு வருத்தமோ... குற்ற உணர்ச்சியோ தேவையில்லை... நான் வரேங்க'' பிரகாஷ் சொன்னதை ஒப்புவித்து விட்டு வேகமாய் வெளியேறினாள். பிரகாஷ் பின்னாடியே வந்தான்.

"அம்மா அருணா..., என் தாயீ... என் தெய்வமே... என்னை மன்னிச்சிடும்மா...! உனக்கு உதவ முடியாத நிலையை எண்ணி வெட்கப்படறேன்! வேதனைப் படறேன்! உனக்கு செய்த பச்ச துரோகத்திற்கு கடவுள் எனக்கு ஏழேழு ஜென்மத்துக்கும் தண்டனை கொடுத்து விட்டு இருப்பான்!'' பின் நிறுத்திச் சொன்னான்.

"அருணா உனக்கு எவ்வளவு பணம் வேணுமோ... நகை வேணுமோ... சொத்து வேணுமோ... அவ்வளவையும் அரவிந்தன்கிட்ட இருந்து நான் வாங்கி தரேம்மா!''

அவள் கண்களிலிருந்து நெருப்புக்கனல் வீசியது.

"இப்படியெல்லாம் பேசி என்னை நிஜமாகவே விபச்சாரியாக்கறீங்களே பிரகாஷண்ணா!'' சொல்லிவிட்டு தெருவில் இறங்கி தனது வீட்டை நோக்கிச் சென்றாள்.



அவன் அடிபட்ட வேதனையில் அரவிந்தனிடம் வந்தான்.

அரவிந்தனாலோ அருணாவின் வார்த்தையை ஜீரணிக்க முடியவில்லை. நிஜமாகவே சந்தேகம் பாதி... ஆச்சர்யம் பாதி. போயும் போயும் முதன் முதலில் நான் தொட்ட பெண் விபச்சாரியா? நெஞ்சமே எரிந்தது. கம்பளிப்புழு ஊறிய வேதனை.

பிரகாஷ் ஏதாவது சூழ்ச்சி செய்திருப்பானோ! அப்படி அவளைச் சொல்லச் சொல்லி கேட்டிருப்பானோ பிரகாஷ் மேல் சந்தேகம் வலுத்தது.

''பிரகாஷ் இதை நான் நம்ப மாட்டேன். நீ அவளை அப்படிச் சொல்லச் சொன்னே!''

''போடா முட்டாள்... அப்படி அவளை சொல்லச் செய்தா எனக்கென்ன லாபம்... ம்ம்?''

''ஏற்கனவே நொந்து போனவளை மேலும் நோகடிக்கக் கூடாதுன்னு... நீ செய்த முன்னேற்பாடு தான் இது! அந்த தேவதை போன்ற உருவம்... அந்த கண்... அந்த முகம்... நோ... அவ அப்படிப்பட்டவ இல்லன்னு சொல்லுதே!''

''இந்தக் காலத்தில் யாரைத்தான் நம்புவது?''

''அப்போ அந்த அருணா அழுத அழுகை... பொய்யா? கண்ணீரெல்லாம் நடிப்பா?''

அரவிந்தன் இந்த அளவு கேட்கும்போது உண்மையைச் சொல்லிடலாமா? ஒரு புறம் நினைக்க... பின் மனதை மாற்றிக் கொண்டான்.

''அவ அழறது ஆனா உண்மை தான்! ஒரு தெருநாய் கூட தன்னோட துணையின் சம்மதத்தோடத்தான்...

அப்படி ஐந்தறிவு ஜீவனே இருக்கும்போது... ஆறறிவு படைச்ச நீ குடிச்சிட்டு... அவள் அனுமதியில்லாமல்... கசக்கி முகர்ந்தால் யாருக்கு தான் அழுகை... ஆத்திரம் வராது? சொல்லுடா?"

அரவிந்தன் யோசித்தான். லேசாய் புரிந்தது.

"இல்லடா... இதை எப்படிடா மறக்க? ஏற்கனவே அம்மாவை நினைச்சி நொந்து இருந்தவளை நோகடிச்சிட்டேனே! பணம் கொடுக்கறாப்பல கொடுத்து... புண்ணியத்துக்கு பதிலா பாவத்தை தேடிகிட்டேனே! ஏற்கனவே நிச்சயித்த ஒருத்தியை கல்யாணம் செய்துக்க முடியாததை எண்ணி வருந்தவா? இல்ல இவளைத் தொட்டு என்னை கறையாக்கிட்டதை நினைத்து வேதனைப்படவா? முதல்ல கௌசல்யாவிற்கு வேற நல்ல வரனா பார்க்கச் சொல்லுடா. எனக்கு இந்த பிறவியில கல்யாணமே வேண்டாம்! அப்பா, அம்மா கிட்ட சொல்ல வேண்டியது உன் பொறுப்பு!" கத்தினான்.

பிரகாஷ் என்ன சொல்வதென்றே புரியாமல் சிலை போல நின்று விட்டான்.

## 17



அருணா பராமரிக்கப்படாத சிற்பம் போல் ஆனாள். தனக்கு நேர்ந்த கதியை எண்ணி எண்ணி புழுங்கினாள்.



கற்பு பறிபோனபோது இருந்த அவமானத்தை விட தன்னை விபச்சாரி என்று அறிமுகப்படுத்திக் கொண்டதை எண்ணியே தினம் தினம் தீக்குளித்தாள். மனம் ரணமாய் வலித்தது.

தனக்கு நேர்ந்த கொடுமையை வேதனையை தாயிடம் கூடச் சொல்ல முடியாததைக் கண்டு நெஞ்சு விண்டு போனது. தன் சோகத்தை ஒதுக்கி விட்டு அம்மவை கவனிப்பதில் கொஞ்சம் பொழுதுபோனது.

அரவிந்தனும், பிரகாசம் ஆஸ்பத்திரிக்கு வந்தால் அந்த இடத்தை விட்டு அகன்று விடுவாள். அல்லது அவர்களின் கார் கேட்டருகே வருவதை சன்னலில் இருந்து கண்டு விட்டால் தலை தெறிக்க எங்காவது ஓடி பதுங்கிக் கொள்வாள்.

அவளுடைய தாய்க்குக் கூட ஆச்சரியம். எப்படிப்பட்ட பெண்...? ஏன் இவ்வாறு மரியாதைக் குறைவாய் நடந்து கொள்கிறாள்? எனச் சந்தேகம். அருணாவிடம் கேட்டாலோ மழுப்பி விடுவாள்... அல்லது பொய்யாய் ஏதாவது காரணம் சொல்வாள்.

அம்மா ஓரளவு குணமாகி வீட்டுக்கு வந்து விட்டாள். அம்மாவே உயிர் பிழைத்த சந்தோசத்தில் நடமாடினாள்.

அருணாவிற்கு எந்த நேரமும் அரவிந்தனின் நினைப்பாகவே இருந்தது. அவன் நினைவுகளும்... அவன் முகமும் மாறி மாறி கண்ணெதிரே தோன்றி இம்சித்தது. பாதி தூக்கம்... பாதி இம்சை என நாட்களைக் கடத்தினாள். அறையை விட்டு வெளியே வரவில்லை.

ஆனாலும்... ஆனாலும் அரவிந்தனை நினைக்கும் போது ஒரு கோடி பட்டாம்பூச்சிகள் இதயத்தில் பறந்தது. அவன் கொடுத்த முதல் முத்தத்திலேயே அவனுடைய இதய வாசலை திறந்து அவனைப் பத்திரமாய் உள்ளே வைத்துப் பூட்டி விட்டாள் கன்னி!

எங்கே அரவிந்தனைக் கண்டால் தன் கட்டுப்பாட்டை மீறி விடுவோமோ... இழந்து விடுவோமோ என்று அஞ்சித்தான் வீட்டிற்கு வந்தவர்களையும் பார்க்காமல் அவமதித்தாள். அம்மாவிடம் திட்டு வாங்கினாள்.

மனக்காயம் கொஞ்சம் ஆறிய பிறகு கான்வென்டிற்கு சென்றாள். இவளிடத்தில் வேறொரு பெண் வந்து விட்டாள். நாளிதழ் பார்த்து வேலைக்கான விண்ணப்பத்தை அனுப்பி... அனுப்பி, இண்டர்வியூ அட்டன் பண்ணியது தான் மிச்சம் வேலை கிடைத்த பாடில்லை.

அரவிந்தனின் கடனை அடைக்க வேண்டும். அம்மாவைக் காப்பாற்ற வேண்டும். செய்வது அறியாமல் திணறினாள். முதலில் தன் வயிறும்... அம்மாவின் வயிறுமாவது நிரம்ப வேண்டுமே... என்ற நோக்கில் அம்மா வேலை செய்த மாமி வீட்டிற்கு செல்ல பஸ் நிறுத்தத்தில் நின்றாள்.

கார் ஒன்று அவளருகில் வந்து நின்றது. கண்ணாடி மெதுவாய் இறங்கியது. அதில் தெரிந்த முகம்...! அவளால் மறக்க முடியுமா? உயிர் இருக்கும் வரை மறக்க முடியுமா? அப்படியே அவளுடைய உடலில் கலந்து விட்ட உயிரின் முகமல்லவா?



'அருணாதானா இவள்?' என்று அரவிந்தனுக்கே சந்தேகம். அவளை எங்கோ நன்றாகப் பார்த்திருக்கிறான். அது தான் ஓடி ஓடி ஒளிவாளே!

''யூ... யூ... மிஸ் அருணா?'' கேட்டான்.

அருணாவிற்கு சுய நினைவு வந்தது.

''நோ... நோ ஐ ஆம் திவ்யா!''

''ஸாரிங்க... என் தொந்தரவுக்கு மன்னிக்கணும். அருணா தான் நீங்க! இன்னைக்கு உங்களை விடறதா இல்லை. ஏறுங்க வண்டியில.''

கார் கதவை திறந்து விட்டான்.

''ஏன் சார் நடு ரோட்ல அநியாயமா வம்பு பண்றீங்க? நான் தான் அருணா இல்லேங்கிறேனே... வழியைப் பார்த்துட்டுப் போவீங்களா?''

அவள் மனது அவனிடம் நாடுவது கண்டு அவள் மீதே கோபம் வந்தது. அந்த கோபத்தை... இயலாமையை மறைக்க அவனிடம் காட்டினாள்.

''அருணா ப்ளீஸ்... நான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்கணும்'' அப்பாவியாய் கெஞ்சினான்.

''மன்னிச்சுட்டேன். போங்க!'' சீறினாள்.

''புருஷன் பொண்டாட்டின்னா சண்டை வரத்தான் செய்யும்! புருஷன் ஒண்ணு சொன்னா பொண்டாட்டி கேட்கணும். பொண்டாட்டி ஒண்ணு சொன்னா புருஷன் விட்டுக் கொடுக்கணும். அதை விட்டுட்டு இப்படி கோபிச்சிட்டு பஸ் ஸ்டாண்ட் வந்துட்டா ஆச்சா? பொழப்பு என்னாவறது? பாவம் அவர்! எவ்வளவு கெஞ்ச

"நான் போவியாம்மா...!" ஒரு பெரிசு வந்து புத்திமதி கூற... அங்கே இருந்த சிலரும் இவர்கள் பக்கம் வர... இதற்கு மேல் இவனிடம் வீம்பு பண்ணினால் இன்னும் யார் யார் என்ன புதுக்கதை கட்டுவார்களோ! அவனோடு புறப்பட்டு விட்டாள்.

ஏழேழு ஜென்மத்திற்கும்... இனி தவம் செய்தாலும் அவன் இவளுக்குக் கிடைக்கமாட்டான். எவ்வளவு எளிதாய் அந்த பெரியவர் சொல்லி விட்டார். 'புருஷன் பொண்டாட்டி' என்று...

அங்கே மவுனம் நிலவியது. முதலில் பேசியது அரவிந்தன்தான்.

"நான் அன்னைக்கு போதையில எப்படியெல்லாமோ தீங்கிழைச்சிட்டேன். சத்தியமா எனக்குத் தெரியாதுங்க? நான் அப்படிப்பட்ட மிருகமும் இல்லே! இதை நீங்க புரிஞ்சுக்கணும். அருணா நான் ஒன்று கேட்டால் தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நீங்க ஏன் அந்த சாக்கடையில் விழுந்தீங்க?"

எதைப்பற்றி அரவிந்தன் கேட்கிறான் என்று புரிந்து என்ன சொல்வதென்றே தெரியாமல் தவித்தாள்.

"சந்தர்ப்ப சூழ்நிலை... எங்க வறுமை எல்லாம் ஒன்னு கூடி... விடுங்க... இந்த டாப்பிக் வேண்டாமே!" அவள் முகம் அவமானத்தில் கறுத்தது.

"நான் தப்பு செய்தேன். ஆனால் பிரகாஷ் என்னங்க செய்தான்? அவன் கிட்ட கூட முகம் கொடுத்துப் பேசல... என் மேல் கோபம் இல்லாதவங்க... என்கிட்ட வேலை



செய்யலாமில்ல? பிரகாஷ் கிட்ட எத்தனை முறை சொல்லிவிட்டேன். அலட்சியப்படுத்திட்டீங்களே!

எதுக்கு இப்படி வேலைக்காக அலையணும். என்கிட்ட ஆயிரக்கணக்கில் ஆட்கள் வேலை செய்யறாங்க. என் கம்பெனியில இல்லாத வேலையா? எனக்கு உங்க நட்பு வேணும்! உங்க கூட இருக்கும்போது கோவில்ல இருக்குற ஒரு உணர்வு... அன்னைக்கி குடியை விட்டவன் இன்னும் அந்த கருமத்தை தொடல...! நம்பாம பார்க்கறீங்களே.... உங்க மேல சத்தியமா..." அருணாவின் தலையில் தொட்டு சத்தியம் செய்தான்.

அவன் கைப்பட்ட இடம் குளிர்ந்து போயிற்று. அவன் கையை எடுத்து நெஞ்சில் வைத்துக் கொள்ள வேண்டும் போலத் தோன்றியது.

"உதாரணமா இதுவரை ரெண்டு சிகரெட் பிடித்திருப்பேன்... ஏனோ தானோன்னு கார் ஓட்டி இருப்பேன்... இப்போ அப்படித் தோணலையே! ஒழுங்கா வேலைக்குப் போறேன். கம்பெனிகளுடைய நிர்வாகம் தங்கு தடையில்லாம நடக்குது.

பழைய அரவிந்த் இல்லீங்க நான்? ப்ளீஸ்... என்னை நீங்க நம்பணும்."

"......"

"நீங்க எங்கேயும் அலையக்கூடாது. என்கிட்டதான் வேலை செய்யணும்!" அரவிந்தன் அழுத்தமாய் சொன்னான்.

அருணாவின் தற்போதைய குடும்ப சூழலுக்கு உடனடியா ஒரு வேலை தேவை. பின்பு அரவிந்தனின்

கடனை அடைக்க வேண்டுமல்லவா? அவன் கடனை அடைக்க, அவனிடமே வேலை செய்து அடைத்தால் என்ன? தான் நேசிக்கும் இவனிடம் இருந்து, திரும்ப நேசம் கிடைக்கவில்லையென்றாலும் இவன் பக்கத்தில் இருந்து.. இவனுடைய வாழ்க்கை நல்லபடியாய் இருக்க வேண்டும் என்று கடவுளை பிரார்த்தித்துக் கொண்டு.. காலத்தை தள்ளி விடுவது என முடிவெடுத்தாள்.

## 18



'அருணா..'

அவளை நினைத்து பெருமைப்படாதவர்களே இல்லை! வந்த சொற்ப நாட்களிலேயே எவ்வளவு பிரபலமாகிவிட்டாள். எவ்வளவு அழகாய் திட்டமிட்டு... அதனை செயல்படுத்துகிறாள் என்று அரவிந்தனுக்கே அவளை நினைத்தால் பெருமையாய் இருந்தது. தேங்கி கிடந்த பைல்கள் அனைத்தும் பார்க்கப்பட்டு.. அதில் குறை செய்தவர்களுக்கு குட்டிட்டு.. திருடியவர்களை டிஸ்மிஸ் செய்து திருப்தியாய் செய்தவர்களைப் பாராட்டி.. ஊக்குவித்து எத்தனை அருமையாய் அனைவரையும் வேலை வாங்குகிறாள். அடுத்ததாக, தொழிலாளர் சங்கடங்கள்... ஊதியப்பற்றாக்குறை அனைத்தையும்



ந்தனின் கவனத்திற்கு கொண்டு சென்று சக யர்களின் நன்மதிப்பைப் பெற்றாள். இந்த குறுகிய தினத்தில் எத்தனை லாபங்கள் அரவிந்தனால் பார்க்க முடிந்தது.

அரவிந்தனோ எத்தனை துள்ளலாய்.. சுறுசுறுப்பாய்.. பழைய கவலைகளே இல்லாமல் இயக்குகிறான். அதனைப் பார்க்கப் பார்க்க பிரகாஷிற்கே நம்பமுடியவில்லை.

அரவிந்தனோ 'இப்படி ஒரு திறமை வாய்ந்த பெண்ணா இந்த அருணா. இத்தனை நாட்கள் ஏன் என் கண்ணில் படாமல் போனாள்? எவ்வளவு நாட்கள் பிரகாஷைப் பார்க்க அங்கே சென்றிருப்பேன்? ஒருநாளும் இவளைப் பார்க்கவில்லையே! கௌசல்யாவை பார்க்கும் முன்பே இவளைக் கண்டிருந்தால்.. இந்த அருணா நல்லவளாய் இருந்திருந்தால்... இவளையே திருமணம் செய்து கொண்டு எத்தனை நிறைவான வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம்! என் வாழ்க்கையில் புயல் வீசியபின் எங்கிருந்து வந்தாள் தேவதை கணக்காய்.. சேற்றில் விழுந்த செந்தாமரையும்.. அலட்டல் இல்லாத அமைதியான அந்த ஓவியத்தின் முகத்தில்தான் எத்தனை பிரகாசம்! எந்த நேரமும் எப்படி மலர்ச்சியாய்.. பனியில் விழுந்த ரோஜாவாய்.. குளிர்ச்சியாய் இருக்க முடிகிறது.

அரவிந்தனுக்கு எங்கே தெரியப்போகிறது. அவளின் அழுகின்ற இதயம். அவள் கண்ணீரில் தத்தளிக்கும் தலையணைக்குத்தான் தெரியும்.

. அருணா இல்லையென்றால் அரவிந்தனால் ஒரு வேலையும் செய்ய முடியாது. இதைப்போல் கௌசல்யாவிடம் ஒருநாளும் ஈர்ப்பு வந்ததில்லையே அவன் நெஞ்சுக்கு!

அரவிந்தன் இப்பொழுதெல்லாம் பழையபடி கம்பெனி பார்ட்டிகளில் கலந்து கொண்டான். ப்ரியா, அம்மா அப்பாவிற்கே இவன் நடத்தையில் உள்ள மாற்றத்தால் அகம் மகிழ்ந்து விட்டனர்.

அருணா தனக்கு இதுபோல் பார்ட்டிகளில் கலந்தெல்லாம் பழக்கம் இல்லையென்று மறுத்தாலும் வற்புறுத்தி அழைத்துச் செல்வான்.

அருணாவின் காட்டன் புடவை மொடமொடப்பும்.. பொட்டுத்தங்கமுமாய்... அலங்காரமே இல்லாமல்... இயல்பாய் வந்தாலும் அங்குள்ள அனைவரின் கண்களும் அவளையே வைத்தக்கண் வாங்காமல் திரும்பி திரும்பி பார்ப்பார்கள். பெண்களின் கண்களிலோ பொறாமை ஒளி சுட்டெரிக்கும்.

அப்படித்தான் ஒரு நாள்...

பாட்டில் மோதும் சப்தமும்.. சிரிப்பு சப்தமும் மேற்கத்திய இசையின் சப்தமுமாய் என கலவையாய் அந்த பார்ட்டி நடந்து கொண்டிருந்தது. கம்பெனிதாரர்களிடையே வர்த்தகம் பற்றிய கருத்தரங்கு முடிந்து.. அவரவர்களும் ஒவ்வொரு மேஜையில் ஆக்கிரமித்து ஹாட் ட்ரிங்ஸ்.. கூல் ட்ரிங்ஸ் அருந்திக் கொண்டிருந்தனர். அருணா - அரவிந்தன் இருவரும் ஒரு மூலையில் உட்கார்ந்து குளிர்பானம் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அரவிந்தன்



பேச பேச.. சிறு புன்னகையாலும்.. விழியசைவாலும்.. தலையாட்டலாலும் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அரவிந்தனுடைய போட்டிக் கம்பெனிக்காரன் அருகில் வர.. மதுவின் நெடியால் மூக்கைப் பொத்திக் கொண்டாள்.

''ஹாய் அரவிந்த்! கல்யாணம் எப்போ? யார் இது? குட்டி ஜோரா இருக்கா! கௌசல்யா என்ன அறுத்து விட்டாளா? உனக்கு மட்டும் என்ன மச்சம்டா? சூப்பர் சூப்பரான பிகரா மாட்டுது! உன் பி.ஏ.வா? செம உடம்புப்பா! சந்தனத்துல இழைச்சது போல! உனக்கு அலுத்துட்டா என்கிட்ட அனுப்பி வைடா! கண்ணு வர்றியா?'' கண்ணடித்தான் அசிங்கமாய்.

அருணாவிற்கு அழுகை வந்தது. அரவிந்தனுக்கோ கண்மண் தெரியாமல் ஆத்திரம் வந்தது.

''யூ.. யூ.. ராஸ்கல்...'' அறைந்து கீழே தள்ளினான். ஓங்கி மிதித்தான். ''நாயே... உன்னை கொல்லாம விடமாட்டேன்...'' ஓங்கி ஓங்கி மிதிக்க கூடியிருந்தவர்கள் சமாதானப்படுத்த...

''இவன் பொண்டாட்டிய சொல்லிட்டா போல கோபம் வருதே!'' கீழே கிடந்தவன் குரல் கொடுக்க..

''விடுங்க... விடுங்க.. இந்த நாயை ரெண்டாக்கிழிச்சா தான் என் ஆத்திரம் அடங்கும்'' அரவிந்தன் ஒரு பக்கம் கத்த... அங்கு இருந்த.. அமளி துமளி மெதுவாய் அடங்கியது.

அரவிந்தனுக்கு சீற்றம் குறையவில்லை. குடித்தால் தேவலாம் போல இருந்தது. அருணாவிடம் ஏதோ

காரணம் சொல்லிக் கொண்டு நகர்ந்தான். அவன் ரொம்ப நேரமாய் வராதது கண்டு.. தேடிக் கொண்டு செல்ல... அங்கே பாட்டிலும் கையுமாய் குடித்துக் கொண்டிருந்தான்.

அருணாவிற்கு எங்கிருந்து தான் அவ்வளவு கோபம் வந்ததோ தெரியவில்லை! பத்ரகாளியாய் மாறி அவன் முன்பு இருந்த பாட்டிலையும்.. டம்ளரையும் உடைத்தாள்.

"அரவிந்த்..." கத்தினாள்.

"நீங்க திருந்தவே மாட்டீங்க.. ச்சே..."

வயிற்றிற்கு போன சரக்கிற்கு கூட அருணாவை கண்டுபயமோ... என்னவோ தெரியவில்லை! குமட்டி 'ஓவ்...' என வாமிட் செய்ய.. அருணா கையிலேந்திக் கொண்டாள். வாஷ்பேஷனில் கொட்டிவிட்டு.. அவன் வாயைக் கழுவி...முகத்தை முந்தானையால் துடைத்து.. கையைப் பிடித்து தரதரவென இழுத்து வந்தாள், காரின் அருகில்...

"ஸாரி.. ஸாரி.. நீ அப்படி முறைக்காதே! என்னால் தாங்க முடியல. இந்த ஒருவாட்டி மன்னிச்சிடு... இனி இப்படியெல்லாம் செய்யமாட்டேன்.. ப்ளீஸ்மா..."

"உங்க வார்த்தையை தண்ணில எழுதிவைக்க..."

"வெரி ஸாரிம்மா... அவன் அப்படி பேசலைன்னா நான் குடிச்சிருக்கவே மாட்டேன்... எல்லாம்.. எல்லாம் அவனால!"



"என்னை அவன் எதுனா பேசினா உங்களுக்கு எதுக்கு கோபம் வரணும்? ம்ம்..." அவள் கேட்க... அவன் வாயடைத்துப் போய்விட்டான்.

## 19



கடற்கரை.

அருணாவும் அரவிந்தும் உட்கார்ந்திருந்தனர்.

"அருணா உனக்குன்னு ஒரு ஆசையிருக்கும்... உன் எதிர்காலத்துக்குன்னு ஒரு கனவு இருக்கும் சொல்லேன். கேக்கறேன்."

"வேண்டாம் சார்!"

"ஏன்?"

"கேட்டா நக்கலடிப்பீங்க! முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டாப்பல என் ஆசை பெரிசு."

"அதான் சொல்லேன்..."

"வருங்காலத்துல பெரிசா.. ஒரு ஸ்கூல் ஆரம்பிக்கணும். ஏழைகளுக்கு கான்வென்ட் கல்வி இன்னமும் கனவாத்தான் இருக்கு. அந்த ஏழைக்குழந்தைகளுக்கு இலவசமாகவே ஆங்கிலக்கல்வி கிடைக்கணும். அது

கூடவே இலவசமா தங்கும் வசதியும் செய்துக் கொடுத்து, அவர்கள் முன்னேறுவதற்கு ஏணிப்படியா இருக்கணும். பணம், காசு தானம் செய்யறதெல்லாம் ஒரு தானமே இல்லை. கல்வியை இலவசமா தானம் செய்யணும். அது எல்லா தானத்தையும் விடப் பெரியது. நிறைய புண்ணியம்.. இது தான் சார் என் ஆசை...! என்ன என் ஆசைக்கு அளவே இல்லைன்னு யோசனையா?''

''உண்மையாவே உன் ஆசையைப் பாராட்டறேன். இவ்வளவு வசதியிருந்தும்.. எனக்கு இது போல எல்லாம் தோணலையே! உன் ஆசைகள் என் மூலமே நிறைவேற்றப்படும் பெரிய ஸ்கூல், இலவச கல்வி, இலவச தங்கும் விடுதி, எல்லாமே சீக்கிரம் நிறைவேறும். அந்த பள்ளி நிர்வாகி யார் தெரியுமா? இந்த கிரேட் அருணா தான்.''

''சா...சார்.. நீங்க நிஜமாவா சொல்றீங்க? இது கனவில்லையே!''

அரவிந்தன், அவள் கையைப் பிடித்துக் கிள்ளினான்.

''ஐயோ...'' அவள் அலற.

''வலிக்குதில்ல.. அப்போ நிஜம் தானே?''

இப்பவாவது நம்புறியா? பிரகாஷ்கிட்ட சொல்லி கவர்ன்மெண்ட்கிட்ட பர்மிஷன் வாங்கறது.. கட்டிடம் கட்ட இஞ்சினியரைப் பார்க்கறதுன்னு சீக்கிரமா வேலை நடக்கும். இந்த அரவிந்தன் ஒன்னை நினைச்சி முடிக்காதது இல்லவே இல்லை. தெரியுமே?

அவள் சந்தோசத்தில் பேச நாக்கு வராமல் மௌனமாய் இருந்தாள்.



''சரி அருணா. உனக்கு என்னெல்லாம் பிடிக்கும்?''

''எதைப் பற்றி கேக்கறீங்க?''

''உனக்கு பிடிச்சதா சொல்லேன்!''

''கவிதை பிடிக்கும். படிக்கவும் பிடிக்கும். எழுதவும் பிடிக்கும்.''

''நீ எழுதின கவிதை ஏதாவது சொல்லேன்!''

''ஐய்யோ.. திடீர்ன்னு கேட்டா எப்படி? வீட்ல எழுதி வச்சிருக்கேன். அந்த நோட்டை நாளை எடுத்து வந்து வாசிச்சி காட்றேன்.''

''ஆமா சார்.. என்னை கேக்கறீங்களே.. உங்களுக்கு என்னவெல்லாம் பிடிக்கும்? சொல்லக்கூடாதா?''

''பாட்டுப்பிடிக்கும். அதுவும் பாட்டு கேட்டுட்டே அம்மா மடில தலைவச்சி தூங்கப் பிடிக்கும். நீ பாடுவியா அருணா?''

''சுமாரா...''

''ஒரு பாட்டு பாடேன்... அவன் கேட்க..''

''ப்ளீஸ்.. அருணாம்மா. பிரகாஷ் சொன்னான்.

குட்டிபொண்ணா இருக்கறப்போ ஸ்கூல் டேய்ஸ்ல ரொம்ப நல்லா பாடுவியாமே...! இந்த வாண்டு என்னடா இப்படி பாடுதுன்னு அவனே ஆச்சரியப்பட்டிருக்கானாமே! பாடும்மா...'' அவன் கெஞ்ச.. அவள் பாடினாள்.

**''உன்னைக்காணாத கண்ணும் கண்ணல்ல...**

**உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல...**

நீ சொல்லாத சொல்லும் சொல்லல்ல...

நீயில்லாமல் நாளும் நாளல்ல.."

_____ பாடி முடித்தாள்.

"வாவ்.. வொண்டர்புல்! பெரிய பெரிய சிங்கர்ஸையே உன் குரல் தோற்கடிச்சிடும். என்ன இனிமை! என்ன நளினம்! என்ன ஒரு குழைவு! நீயா அருணா? எவ்வளவு பெரிய திறமையை ஒளிச்சி வச்சிருக்கே! ம்..." அவனுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. அவளுக்கு ஏதாவது செய்ய வேண்டும் போலத் தோன்றியது. கழுத்தில் இருந்த செயினைக் கழற்றி அவள் கழுத்தில் போட்டு விட்டான். அருணா இதை எதிர்பார்க்கவில்லை.

"ஐயோ.. இதெல்லாம் வேண்டாம்! கழற்றப்போனாள். அவன் தடுத்தான். அவன் தொடுகையால் சிலிர்த்துப் போனாள். அவன் நெஞ்சில் சாயப்போனவள் சுதாரித்து எழுந்துவிட்டாள்.

அந்த செயினின் கனம் தாங்காமல் கழுத்தும் கனத்தது. மனமும் கனத்தது.

"என்ன அருணா எழுந்துட்டே?"

"வாங்க போகலாம்!"

"சரி.. வா.. வா... உன்னை ஒட்டலுக்கு அழைச்சிப்போய் ட்ரீட் கொடுக்கனும். நல்லதா நாலு சேலை வாங்கனும். அப்படி முறைக்காதே! சம்பளத்துல இதெல்லாம் பிடிச்சிக்கலாம்! மாத்தி மாத்தி நாலு சேலையே கட்டிட்டு வரது கஷ்டமா இருக்கு அருணா! தப்பா எடுத்துக்காதே!"



துணிக்கடையில் விலை உயர்ந்த சேலைகளை கொண்டு வரச் சொல்லி அவள்மேல் போட்டு.. போட்டு பார்த்து 'இது நல்லாயிருக்கு.. இதை உடுத்திகிட்டா தேவதையாட்டம் இருக்கும். அருணா.. இது உனக்காகவே நெய்தது போல இருக்கு. இது உன் நிறத்துக்கு பெட்டரா இருக்கும்" என்றான். அவன் விரல் நுனிபடும் போதெல்லாம் செத்துவிட்டாள். கண்களில் துளிர்த்த நீரை கர்ச்சீப் கொண்டு அவனுக்கு தெரியாமல் ஒற்றி எடுத்தாள்.

மனதை நடுநிலைப்படுத்த முடியாமல் தவித்தாள். "மனமே... மனமே அரவிந்தனை மற! இவன் உனக்கு இல்லை. இன்னும் கொஞ்ச நாளில் வேறொருத்தியின் கணவனாகப் போகிறவன்" மனதிற்கு கடிவாளம் போட்டாள்.

'இறைவா அடுத்த பிறவியாவது அரவிந்தன் எனக்கு கிடைப்பானா?'

'அடுத்த பிறவி வரை உன்னால் காத்திருக்க முடியுமா?" மனம் கேட்டது.

'ஏன் முடியாது.. இப்பொழுதும்.. எப்பொழுதும்.. ஏழேழு பிறவிக்கும் என் கணவன் அரவிந்தன் தான். கடற்கரையில் இன்று அணிவித்த செயினே எனக்கு போதும்! என் தாலி இது தான்! அம்மி மிதிக்காமல்.. அருந்ததி பார்க்காமல்.. அன்றொரு நாள் நடந்ததே சாந்தி கல்யாணம்! அது போதும்! அந்த முதல் முத்தம்.. முதல் அணைப்பு.. இந்த உயிர் உள்ளவரை மறக்க முடியுமா? என் முதல் ஆணும்.. என் கடைசி ஆணும் இந்த அரவிந்தன் மட்டுமே!

'மனமே.. நீ மாற மாட்டாயா?'

'மாற மாட்டேன்.'

'கடைசி வரை உன் ஆம்பளை?'

'அரவிந்தன்!'

'உன் உடம்பு கேக்குமா?'

'கேட்கவில்லையென்றால்... சுட்டெரித்து விடுவேன்!'

'உன் தாரக மந்திரம்?'

'அரவிந்த் ஐ லவ் யூ! ஐ லவ் யூ!' மனம் இதையே படித்தது.

பட்டென்று தோளில் யாரோ தட்ட திரும்பினாள். கோபமாய் ஒரு பெண். கௌசல்யா என்று அவளுக்கு தெரியாது. அரவிந்தன் கூட கௌசல்யாவை இப்பொழுது எதிர்பார்க்கவில்லை. ப்ரியாவும் கூட இருந்தாள்.

அருணாவைப் பார்த்து முறைத்து.. பின் கத்தினாள்.

"ஏய்.. யாரோ சொன்னப்ப நான் நம்பல! அரவிந்த் அப்படிப்பட்டவரா இருக்க மாட்டார்ன்னு நினைச்சேன்! ஆனா... கண் முன்னால பார்த்ததும் தெரிஞ்சிகிட்டேன். நீ அவரை எவ்வளவு முந்தானையில முடிஞ்சி வச்சிருக்கேன்னு. என் கல்யாணம் நடக்காம இருக்க நீ தான் காரணமா? ஆமா, உங்க உறவு நகை, புடவைக்கடை வரைக்கும் தானா? இல்லே ஓட்டல் படுக்கையறைக்கும் போயிருக்கா?"

அரவிந்தன் கௌசல்யாவின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். கன்னத்தைப் பிடித்துக் கொண்டு கத்தினாள்.



"என்கிட்ட இல்லாத ஒன்னு அப்படியென்ன அவகிட்ட ஸ்பெஷலா இருக்கு? என்கிட்ட சொல்லியிருந்தா அவ கொடுத்த அத்தனை சுகத்தையும் கொடுத்திருப்பேனே! ஏன் இப்படி திருட்டுத்தனம்?"

"ஏய்.. ஏய்.. நீ அதிகமா பேசறே!" அரவிந்தன் கையை ஓங்கிக் கொண்டு அருகில் சென்றான். ப்ரியா தடுத்தாள். அருணா அழுதுக் கொண்டு ஓடினாள்.

## 20



அந்த சம்பவத்திற்கு பின் அருணா அரவிந்தனிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை. ஏதாவது தேவையென்றாலும் வேறு பக்கம் பார்த்தோ.. தரையைப் பார்த்தோ பேசினாள்.

அருணாவின் இந்த ஒதுக்கம் அரவிந்தனின் இதயத்தை சுக்கு நூறாய் கிழித்துப் போட்டது. அவன் அவளிடம் வலியச் சென்று பேசினாலும்.. ஒன்று இரண்டு வார்த்தைகளைத் தவிரப் பேசவில்லை. கிட்டத்தட்ட கௌசல்யாவையே அரவிந்தன் மறந்து இருந்த தருணம். புயலாய் வந்து.. பூகம்பமாய் தாக்கி விட்டு போய்விட்டாள்.

ப்ரியா அருணாவை தனியே கம்பெனிக்கு தேடி வந்து கேட்டுக் கொண்டாள்.

"அருணா.. நீங்க கௌசல்யா நிலைமைல இருந்து சிந்திச்சுப் பாருங்க.. நிச்சயமான கல்யாணம் தள்ளிப் போனா எப்படி இருக்கும்? அதான் அப்படி கௌசல்யா நடந்துகிட்டா! சியலி.. வெரி ஸாரி...! நீங்களும் ஒரு பெண்! ஒரு பெண்ணோட வேதனை இன்னொரு பெண்ணான உங்களுக்குத் தெரியணும்.

அண்ணாவுக்கு நீங்க நல்ல நண்பரா இருந்தா.. உங்க உறவு கள்ளத்தனம் இல்லாததா இருந்தா.. நீங்க நிரூபியுங்க.. அவரைக் கல்யாணத்துக்கு சம்மதிக்கச் சொல்லுங்க.. உங்களை நாங்க கடைசி வரை மறக்க மாட்டோம். என்றென்றும் நன்றி உள்ளவங்களாய் இருப்போம்!"

அவள் போய்விட்டாள். அருணா பாத்ரூம் சென்று அழுது ஓய்ந்து.. அரவிந்தனிடம் போனாள். "நான் உங்க கூட தனியா பேசணும்."

"பேசலாமே! எனக்கு பயங்கர பசி. ஓட்டலுக்குப் போய் சாப்பிட்டுட்டே பேசலாம்."

"இல்ல. கோவிலுக்கு போகலாம்."

"ம்.. ஓ.கே..!"

கோவிலில் தனியான இடத்தைத் தேடி அமர்ந்தனர்.

"அரவிந்த் சார்.. நீங்க என்கிட்ட நிறைய பேச வேண்டும். உண்மையை மறைக்காம சொல்லணும்! கௌசிய உங்களுக்கு பிடிக்கலையா?"



"கௌசல்யாவும், நீயும் என் பேரை உச்சரிக்கறதுல எவ்வளவு வித்தியாசம். அவ என்னைன்னா 'அர்விந்த்'ன்னு அழுத்தி கூப்பிடுவா. அந்த அதிகார தோரணையைப் பார்க்கும் போது அறையணும் போலத் தோன்றும். ஆனால் என் பேருக்கே வலிக்குன்னு நினைச்சோ.. என்னவோ... மென்மையா... 'அரவிந்த்'ன்னு சொல்வே. எனக்கு இது தான் பிடிச்சிருக்கு. அந்த சார்.. மோர் தான் எனக்கு பிடிக்கல!"

"நான் என்ன கேட்டேன்? நீங்க என்ன பேசறீங்க?"

"கௌசல்யா டாபிக்னா எனக்கு பிடிக்கல. வேற பேசறதா இருந்தா சொல்லு?" அலட்சியமாய் சொன்னான்.

"ஏன் கல்யாணம் வேண்டாம்னு பிடிவாதம்?"

அவனுக்கு கோபம் வந்து விட்டது.

"ஏய்.. யார் நீ? என் கல்யாண விஷயம் பேச! யார் நீன்னு கேட்டேன்? நீ என்னோட செகரட்டரி. அந்த மட்டும் இரு. சொந்த விஷயத்துல மூக்கை நுழைக்காதே!"

அவளுக்கு உயிரே போய் விட்டது. கண்களில் கண்ணீர் மினுமினுத்தது.

"மன்னிச்சிடுங்க... வரேன்! பட்டென்று கும்பிட்டு விட்டு எழப்போனவளை.. கையைப் பிடித்து அமர்த்தினான்."

"கோபித்துக் கொள்ளாதே அருணா.. கோபத்துல என்னென்னவோ பேசிட்டேன். நீ என்ன கேட்டே? கல்யாணம் ஏன் வேண்டாம்னா? அருணா.. அருணாம்மா அதை எப்படி சொல்வேன்? எனக்கு சொல்லவே வெட்-

கமா இருக்கே.. நான்.. நான் முடியலையே!'' அவளைப் பார்க்க பாவமாய் போய்விட்டது.

''கொட்டிருங்கப்பா.. உங்க மனசுல உள்ளதை மறைக்க.. மறைக்கத்தான் மன பாரம் அதிகமாகும்.''

''நான்.. நான் ஐந்து மாதத்திற்கு முன்னாடி நடந்த ஆக்ஸிடெண்ட்ல....'' அனைத்தையும் சொல்லி முடித்தான்.

''அவளுக்கு குழந்தைன்னா எவ்வளவு ஆசை! எப்படி அவளை தெரிஞ்சே ஏமாத்தறது? நீயே சொல்லு? நான் அன்னைக்கே செத்துட்டேன் அருணா. எனக்கு மேரேஜ் தேவையா?

'ப்பூ... இவ்வளவு தானா? இதுக்குப் போயா இப்படி உங்களையே கஷ்டப்படுத்திகிட்டீங்க? அந்த டாக்டர் சொன்னது தப்பா இருக்கலாம்.. இல்லாட்டி வேற யாருடைய ரிப்போர்ட்டாவது மாறி வந்திருக்கலாம்ல.. படிச்சவர்... நீங்களே இப்படி இருக்கலாமா? அப்படியே குறையே இருந்தாலும் தூக்கி கடாசிட்டு வெளியே வாங்க. எத்தனை அநாதை ஆசிரமம்.. எத்தனை அநாதை குழந்தைகள் தவிக்கறாங்க... அதுல ரெண்டை எடுத்து வளர்த்தாப்போச்சு!''

அவன் யோசித்தான்.

அவள் மெதுமெதுவாய் பேசி பேசி.. சிந்திக்க வைத்தாள்.

''ஓ.கே.. நாளைக்கு வேற டாக்டர்கிட்ட போகலாம்.''

இவ்வாறு அரவிந்தனையே கூற வைத்த நிமிர்வில் சந்தோசமாய் எழுந்தவளுக்கு கண்ணை இருட்டிக்



கொண்டு வர... 'அரவிந்த்' என்று கூறிக் கொண்டே அவன் கையை கெட்டியாய் பிடித்துக் கொண்டாள்.

''அருணா.. அருணா.. என்னம்மா பண்ணுது?'' பதறினான்.

''ஒரே மயக்கமா இருக்கு.. கண்ணே தெரியல...'' கூறிக் கொண்டே விழப்போனவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான். காரில் அருகில் இருந்த மருத்துவமனைக்கு கொண்டு சென்றான். பிரகாஷுக்கு தகவல் போய் அவனும் வந்து சேர்ந்தான்.

அரை மணி நேரம் தவிப்பாய் கரைய.. டாக்டர் ஜெயா புன்னகையோடு வெளியே வந்தாள்.

''மிஸ்டர் அரவிந்த்.. நீங்க அப்பாவாகப் போறீங்க! சந்தோசம் தானே! அருணா பாடி கொஞ்சம் வீக்கா இருக்கு. நல்ல சத்துள்ள உணவா சாப்பிட சொல்லுங்க. கொஞ்சம் கடுமையா வேலை செய்ய வேண்டாம். வெயிட் தூக்க வேண்டாம். முக்கியமா நீங்க அவளை முரட்டுத்தனமா கையாள வேண்டாம்! பார்த்து நடந்துக்கங்க.. இந்தாங்க சாக்லெட்.... வாயைத் திறங்க. பைவ் ஸ்டார் சாக்லெட்டை வாயில் திணித்தாள்.

அந்த சாக்லெட் வில்லை இனிப்பதற்கு பதிலாய்... அரவிந்தனுக்கு கசந்தது.

அருணா.. தீப்பிடித்தவள் போல துடிக்க...

அரவிந்தன் அருவெறுக்க...

பிரகாஷ் மட்டும் பூவாய் மலர்ந்தான்.

# 21



'அருணாவை தொட்ட முதல் ஆண் அரவிந்தன் தான். இது அரவிந்தனின் குழந்தை இனியும் அருணாவிற்கு துரோகம் இழைக்கக்கூடாது. அரவிந்தனிடம் இவளுடைய புனிதத்தைக் கூறி.. இருவரையும் இணைத்து வைக்க வேண்டும். அருணாவிடம் உண்மையைக் கூற அனுமதி பெற வேண்டும்' பிரகாஷ் மவுனமாய் இருக்க.. அரவிந்தன் தான் வெடித்தான்.

"பிரகாஷ் என்னடா இது? அவள் வயிற்றில் வளரும் குழந்தை யாருடையது? அவள் தொழிலை விட்டு வருஷம் ஒன்னாச்சின்னானே! இதெல்லாம் பொய்யா?"

அருணா அழுதுக் கொண்டே ஓடி வந்து.. இவர்கள் அருகில் உட்கார்ந்து.. மடியில் முகம் புதைத்து அழுதாள்.

"ஏய்.. ஏய் அருணா.. உன்னைத்தான்! நான் கூப்பிடறது காதில விழல? என்னடி நடிக்கறே! இந்த உலகத்துல யாரைத்தான் நம்பறதுன்னே தெரியல! அருணா.. நீ சாக்கடையா இருந்துட்டு அடுத்தவங்களை ஏன் புனிதப் படுத்தனும்? உனக்கு என்ன பணத்தேவை வந்ததுன்னு இப்படி செய்தே? நான் குடுக்கற சம்பளம் போதலையா? உனக்கு வெக்கம், மானம், சூடு, சொரணை எதுவுமே இல்லையா? தொழிலை விட்டு வருசம் ஒன்னாச்சின்னு சொன்னியே! இது எப்படி? இதுக்கு யார் காரணம்? எந்த



திருட்டு பயல்! பணத்துக்காக செய்தாயா? அல்லது உடல்.." மேலே அசிங்கமாய் பேச போனவனை...

"போதும் அரவிந்த்! நிறுத்துங்க" கத்தினாள்.

"ஏன்? ஏன் நிறுத்தனும்? என்கிட்ட இனியும் பத்தினி வேஷம் போடாதே! அதை நம்ப பழைய அரவிந்தன் இல்ல. தெரிஞ்சிக்கோ!"

"டேய் அரவிந்த்.. இது ஆஸ்பத்திரி! சத்தம் போடாதே! எல்லோரும் நம்மையே பார்க்கறாங்க... எதுவானாலும் வெளியேப் போய் பேசிக்கலாம்" பிரகாஷ் அடக்கினான்.

"நீ சும்மா இருடா ராஸ்கல்! இப்படி ஒரு இயற்கையா.. தத்ருபமா நடிச்சவளைப் பார்த்ததே இல்லை. நீயெல்லாம் சினிமாவுல நடிக்கப் போயிருந்தா ஜோதிகா.. த்ரிஷாவெல்லாம் உன்கிட்ட பிச்சை வாங்கனும். ச்சே! உன் முகத்துல விழிக்கவே பிடிக்கல.. போ போடி..."

இதற்கு மேல் அவளால் பொறுமையாய் இருக்க முடியவில்லை.

"நிறுத்துங்க அரவிந்த்! இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசாதீங்க... அதுக்கான அருகதையும் உங்களுக்கில்லே! என் வயித்துல இருக்கும் குழந்தை உங்களுடையது!" அவள் கூற அதிர்ச்சியில் உறைந்து.. பின் சீறினான். "என் குழந்தையா? என்னால எப்படி? ஓ.. நோ! இல்லை.. இதை நான் நம்பத்தான் வேண்டுமா? என்னால எப்படி ஒரு குழந்தையை.. எவனோ காலி பய உன் வயித்தை ரொப்பினா.. அதுக்கு நான் தகப்பனா? என்னை என்ன இளிச்ச வாயன்னு நினைச்சியா? ஊரான் பிள்ளைக்கெல்லாம் தகப்பனாக! மரியாதையா.. உண்மையைச் சொல்லு? சொல்லமாட்டே...." கையை ஓங்கினான்.

"ஐயோ.. என்னை நம்புங்க! சத்தியமா இதுக்கு காரணம் நீங்க தான். உங்க மேல.. என் தாய் மேல் ஆணையா... இது உங்க குழந்தை.. உங்களுக்கு எந்த குறையும் இல்லே! போய் நல்ல டாக்டர்கிட்ட செக் பண்ணிக்கங்க.

அப்புறமா வந்து என் வயிற்றில் வளருவது உங்க உயிருவான்னு செக் பண்ணிட்டு.. என்னை நம்புங்க அரவிந்த்.. நான் வரேன்" அவள் ஆஸ்பத்திரியை விட்டு வெளியே ஓடினாள்.

அரவிந்தன் தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டான். இது எப்படி சாத்தியம்...? டாக்டர் என்னை ஒரு குழந்தைக்கு தகப்பனாக முடியாது என்று சர்ட்டிபிகேட் கொடுத்தும்.. அதுவும் நகரிலே புகழ்பெற்ற மருத்துவமனை.. புகழ்பெற்ற டாக்டர்... எப்படி பொய்யாகும்? ஆனால் அருணாவின் அழுகையிலும் பொய் இருப்பதாய் தெரியவில்லை. யாரை நம்புவது? மூளையைப் போட்டு குழப்பிக் கொள்ள.. பிரகாஷ் பக்குவமாய் பேசி டாக்டர் ராமச்சந்திரனிடம் அழைத்துச் சென்றான்.

அரவிந்தனுக்கு அனைத்துவித பரிசோதனையும் முடிந்தது.

அரவிந்தன் தான் தணலில் விழுந்தவன் போலத் துடித்துக் கொண்டிருந்தான். டாக்டர் இவர்கள் இருவரையும் உள்ளே அழைத்தார்.

"உட்காருங்க.. மிஸ்டர் அரவிந்தன் உங்களுக்கு எந்தக் குறையுமில்லே! ஏன் அப்படி ஒரு பொய்யான சர்ட்டிபிகேட் கொடுத்தார்" டாக்டர் சொல்ல அரவிந்தனுக்கு ஒரு கூடை பூவை தலையில் கொட்டியது போல உணர்ந்தான்.



"ரொம்ப தாங்க்ஸ் டாக்டர்... அவரை நான் விட மாட்டேன்.. என் மன நிம்மதி.. மன உளைச்சலுக்கு அவர் பதில் சொல்லியே ஆகணும். இந்த அரவிந்தனை என்னன்னு நினைச்சி இப்படி செய்தார்? விட மாட்டேன் டாக்டர்..." வெளியேறினர் இருவரும் சுனாமியாய்...

பிரகாஷை கட்டிக் கொண்டான்.

"அரவிந்த்.. உணர்ச்சிவசப்படாதே! டேக் இட் ஈஸிடா! டாக்டர் சூர்யாவை விடக்கூடாது. ஒரு கை பார்த்து விட வேண்டும்... முதல்ல வாடா..." ஆவேசமாய் கிளம்பினர்.

புயலாய்.. பூகம்பமாய்.. வரும் அரவிந்தனைக் கண்டு டாக்டர் சூர்யா மிரண்டு விட்டான்.

"டேய் பாவி... நான் உனக்கு என்னடா துரோகம் செய்தேன்? ஏன்டா இப்படி பொய்யான சர்டிபிகேட் கொடுத்தே? எதுக்குடா இப்படி அலைக்கழிச்சே? என்னை மிருகமா மாற்றி வதைச்சிட்டேயே! நீ நல்லாயிருப்பியா? ஏன்டா அப்படி செய்தே?" சூர்யாவின் சட்டையை கெட்டியாய் பிடித்து உலுக்கினான்.

என்றாவது குட்டு உடைந்து இப்படியெல்லாம் விபரீதம் வரும் என்று எதிர்பார்த்தவன் தான். ஆனால் அரவிந்தனின் ஆவேசம் கண்டு ரொம்பவே மிரண்டு விட்டான்.

"சட்டையை விடுங்க. நான் அப்படி சொல்ல.. செய்ய கௌசல்யா தான் காரணம்."

புரியாமல் விழித்து.. பின்னர் கேட்டான். "அவ.. அவ உன்னை என்னடா செய்தா? காதலிச்சாளா?"

"என்னை இல்லை. என் தம்பியை. என் தம்பியை சாகடிச்ச கொலைகாரி. என் உயிராய் நினைத்த தம்பியை சாகடிச்ச பாதகி."

அழுதான். "அவன் எம்.எஸ்ஸி கடைசி வருடம். இவ அப்போது தான் பி.எஸ்ஸி சேர்ந்திருக்கா. அவன் உண்டு.. அவன் வேலையுண்டுன்னு இருந்தவனை.. காலேஜ்ல சுத்தி.. சுத்தி வந்து.. பேசி.. சிரிச்சி இவ வலையில் விழ வச்சிட்டா.

கடைசியில எல்லா பணக்கார பொண்ணுங்களும் டைம் பாஸ் பண்ண விளையாடுவது போல விளையாடியிருக்கா. நான் எங்கே காதலிச்சேன்? நட்புன்னா என்ன? காதல்னா என்னன்னு வித்யாசம் கூடவா தெரியாது? என்னை காதலிக்க உனக்கு என்ன தகுதியிருக்கு? கவர்ன்மெண்ட் ஸ்காலர்ஷிப் உதவில, படிக்கறவன்...! ச்சே...! உன் மூஞ்சிய கண்ணாடியில பார்த்ததே இல்லையோ?.. இந்த மூஞ்சிக்கு காதல் ஒரு கேடா?ன்னு சொல்லி கோபப்படுத்த... அதுல மனம் உடைஞ்சி தூக்குல தொங்கிட்டான்... என் தம்பி டைரியை பார்த்து நான் இதையெல்லாம் தெரிஞ்சுக்கிட்டேன்... பழிவாங்க காத்திட்டு இருந்தேன்... அப்போது தான் நீங்க ஆஸ்பிட்டல்ல அட்மிட்டானீங்க. என் தம்பியை சாகடிச்சவளுக்கு இப்படி ஒரு நல்ல மனிதனா?ன்னு பொறாமையா இருந்தது. என்ன செய்யலாம்ன்னு யோசித்தப்போதான்.. கல்யாணம் நின்னு ஒரு நிமிஷமாவது கலங்கனும்னு நினைச்சேன்... செய்தேன். குறிப்பிட்ட தேதியில கல்யாணம் நின்னு கலங்கி நின்னாளே அது போதும்.. இந்த இடைப்பட்ட ...



கலங்கியிருப்பா? அதுக்குத்தான்... அதுக்குத்தான் செய்தேன்.... என்னை மன்னிச்சிக்கங்க..."

உண்மை தெரிஞ்சா என் பேர் கெட்டுப்போகும்..! என்னை சும்மா விடமாட்டீங்கன்னும் தெரியும் அரவிந்தன்! என் தம்பி.. உயிருக்கு உயிராய் நேசித்த என் உடன்பிறப்பின் ஆத்மா சாந்தியடைய நான் செய்த கைமாறு..." டாக்டர் சூர்யா பெண் பிள்ளைப்போல குலுங்கி குலுங்கி அழுதான்.

"என் தம்பிக்கும் எனக்கும் ஒரு வயசு தான் வித்தியாசம். கொஞ்சம் ஏழ்மையான குடும்பம். அப்பா ஆட்டோ டிரைவர். எனக்கு மெரிட்ல டாக்டர் சீட் கிடைச்சது. படிச்சேன். அவனுக்கும் மெடிக்கல் காலேஜ்ல சீட் கிடைச்சது. வேண்டாம்னு சொல்லிட்டு டிகிரி படிச்சான். அவன் இஷ்டப்படி தான் என் வீடே இயங்கும். சிட்டு மாதிரி சுற்றித்திரிஞ்சுட்டு இருந்தவனை சாகடிச்சிட்டா.. அவன் இறந்த அதிர்ச்சியில் அம்மா இறந்துட்டா. எங்க கூடு கலைஞ்சி எவ்வளவு வேதனைப்பட்டேன்...? எவ்வளவு அழுதேன்? அதில் கால்பங்காவது அனுபவிக்க வேண்டாமான்னு நினைச்சேன். நீங்க.. அடிக்கடி வயிற்றுல வலி வர்றதா சொன்னீங்க. அதை வைத்து இப்படி ஒரு பொய்யை சொன்னா நம்புவீங்கன்னு செய்தேன். ஸாரி.. வெரி ஸாரிங்க!" கையெடுத்து கும்பிட்டான்.

டாக்டர் சூர்யாவைப் பார்க்க பாவமாய் இருந்தது. இன்னும் அழுதுக் கொண்டே இருந்தான். எதுவும் சொல்லாமல் வெளியே வந்தனர்.

நினைப்பேன். பெண்ணா அவள் பேய்.. கொலை காரி!"

"நிறுத்து அரவிந்த்.. உண்மை என்னன்னு கவுசல்யாவைக் கேட்டு தெரிஞ்சிக்கலாம்."

அவள் கிட்ட கேட்டா என்? எதுக்குன்னு கேட்டா.. டாக்டர் பொய் சர்டிபிகேட் கொடுத்ததெல்லாம் சொல்லணும். வேண்டாம்டா... விட்டுடலாம். கவுசல்யாவைப் பற்றிய ஆராய்ச்சி வேண்டாம். அருணாவைப் பார்க்க வேண்டும். அந்த பூ முகத்தை கைகளில் ஏந்தி.. காலடியில் மண்டியிட்டு மன்னிப்பு கேட்க வேண்டும். நான் அவளை என்னவெல்லாம் சொல்லி நோகடிச்சிட்டேன். என்னுடைய இப்போதைய சந்தோசத்துக்கு அவள் தானே காரணம்! கட்ட வண்டி ஓட்டறியா? இல்லை கார் ஓட்டறியா? என் அவஸ்தை புரியாமல்! வேகமா போடா மச்சான்!"

"மச்சானா?"

"ம்.. உன் தங்கச்சியை கட்டிட்டா... மச்சான் தானே!"

"ஏய்.. அரவிந்தா.. என்னடா சொல்றே?"

"என் பிள்ளையை சுமக்கும் உன் தங்கச்சியை கட்டிக்க பரிபூரண விருப்பம்." கன்னத்தில் குழிவிழ அழகாய் சிரித்தான்.

"கவுசல்யா.. அம்மாவுக்கு என்ன பதில் சொல்வே?"

"போடா முட்டாள். அவங்க எல்லாம் எனக்கு ரெண்டாம்பட்சம். இனியும் அம்மா.. தந்தொலை.. செண்டிமெண்டுக்கெல்லாம் பயப்பட மாட்டேன்."



"இதுக்கு அருணா ஒத்துப்பாளா?"

"ஏன் ஒத்துக்காம போவா? மறுத்தா.. மறுத்தா பலவந்தமா தூக்கிட்டு போய் கட்டிக்குவேன்."

"உனக்கு தான் பலவந்தம் கைவந்த கலையாச்சே!"

"ஏய்.. ஏய்... என் காலை வார்றே பார்த்தியா?"

அதற்குள் வீடு வந்துவிட்டது. அருணாவின் அம்மா இல்லாதது வசதியாய் போய் விட்டது. அழுது அழுது வீங்கிய முகத்துடன் சோபாவில் அமர்ந்திருந்தாள். எதிரில் உள்ள நாற்காலியில் பிரகாஷ் அமர... அரவிந்தன் அவளின் காலடியில் மண்டியிட்டு கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டான்.

அவனுடைய செய்கைக்கு அர்த்தம் புரியாமல் பார்த்தாள்.

"அருணா.. அருணாம்மா.. நான் ரொம்ப சந்தோசமா இருக்கேன். இந்த சந்தோசத்தை கொடுத்தவள் நீ! எனக்கு நீ வேண்டும்...! காலம் முழுக்க வேண்டும்... அருணாம்மா நீ என்னை ஏத்துக்கணும்..! என்னை கல்யாணம் பண்ணிக்கணும்! என்னை வழிநடத்தணும்!"

எரிமலையாய் சீறியவன்... இப்போது வந்து அப்படியெல்லாம் பேசினால் அவளுக்கு அதிசயமாய் இருக்காதா? கண்களை அகல விரித்து அவனைப் பார்த்தாள்.

"நான் ஒரு மடையன்டா அருணா.. என்னன்னு சொல்லாம... உன்னை குழப்பறேனா? டாக்டர் ராமச்சந்திரன் கிட்ட போனேன். செக் பண்ணிகிட்டேன். எனக்கு

எந்த குறையும் இல்லைன்னு சொன்னார். அப்படியே டாக்டர் சூர்யாவை வந்து ஒரு பிடிபிடிச்சிட்டு நேரா இங்கே தாண்டா செல்லம் வரேன்."

அவளுக்கு இருந்த வேதனையிலும் முகம் மலர்ந்தது.

"என்னை நீ திருமணம் செய்து கொள்ளணும். நீ இல்லாமல் இனி ஒரு நிமிடமும் இருக்க முடியாது போலத் தோணுதுடா. கண்ணம்மா... கண்ணம்மா... மறுக்க மாட்டயே?"

அருணா எரிமலையாய் சீறினாள்.

"இப்படி கேட்க உங்களால் எப்படி முடியுது?"

"என்ன சொல்றே அருணா?"

"எனக்கு உங்களைப் பிடிக்கலே!"

"நிஜம்மா..."

"ஆமாம்."

"என்னைப் பார்த்து சொல்லு! எனக்கு என்ன குறை?"

"பிடிக்கலைன்னா.. பிடிக்கலே!"

"ஏன்.. அப்போ உன் வயிற்றில் வளரும் குழந்தைக்கு வழி?"

"அது விபத்து..."

"அதனோட எதிர்காலம்!"

"இருந்தா தானே! அபார்ஷன் பண்ணிக்கப் போறேன்."

"ஐயோ அருணா.. இப்படியெல்லாம் பேச எப்படி முடியுது? என் குழந்தை.. என் வாரிசு முழுசா வேண்டும்!"



"முடியாது.. அபார்ஷன் பண்ணிக்கத்தான் போறேன். உங்களால முடிஞ்சதைப் பாருங்க."

அவள் அருகில் எழுந்து அமர்ந்து கைகளைப் பற்றிக் கொண்டு கெஞ்சினான்.

"உன் பழைய வாழ்க்கையை நான் ஒரு பொருட்டாவே நினைக்கல..."

இதுவரை அமைதியாய் இருந்த பிரகாஷ் கூறினான்.

"அரவிந்தை கல்யாணம் பண்ணிக்கோ அருணா. நீ எவ்வளவு நல்லவ.. புனி.. பிரகாஷ் பேச இடையில் கத்தினாள்."

"நிறுத்துங்க. இதுக்கு மேல எதுவும் பேசாதீங்க. ப்ளீஸ்..." கையெடுத்து கும்பிட்டாள்.

"அருணாம்மா. எனக்கு நீ.. அப்புறம் உன் உயிரில் கலந்து உருவாகும் என் ஜீவன். அது போதும் அருணா. இந்த உலகத்தில் எனக்கு எதுவும் வேண்டாம். ப்ளீஸ்.. ப்ளீஸ்டா..."

"நிச்சயித்த கவுசல்யாவை என்ன செய்யப் போறீங்க?" கேட்டாள்.

"அவ மேல ஒரு நாளும் எனக்கு ஈர்ப்பு வந்ததில்லே! எப்படி சொல்றதுன்னே தெரியல. ஆரம்பத்துல இருந்தே உன் மேல ஒரு அன்பு. ஆசை. ஈர்ப்பு என் மனம் எத்தனையோ முறை உனக்காக ஏங்கி தவித்திருக்கிறது. அப்போ எல்லாம் நீ சொன்ன..." சொன்னால் கஷ்டப் படுவாள் என்று நிறுத்தினான்.

"எனக்கு டைம் வேணும். பத்து நாள்... யோசிக்கணும். அதுக்கு இடையில் யாருமே வந்துப் பார்க்கக்கூடாது. கண்டிப்புடன் சொன்னாள்.

பிரகாஷ் சொன்னான். நான் கம்பெனி விஷயமா பதினைந்து நாள் ஊர் போறேன். அரவிந்தன் கிட்ட நல்ல பதிலா சொல்லுமா அருணா!"

அருணா எந்தவித முடிவும் கூறாததால் தான், அருணா 'களங்கமில்லாதவள்' எனக்கூற முடியவில்லை. ஊர் போய் வந்த பிறகு அருணாவைப் பற்றி கூறி, அரவிந்தனுக்கு இன்ப அதிர்ச்சியைக் கொடுக்க வேண்டும் என நினைத்து அருணாவைப் பற்றிய உண்மையைக் கூறவில்லை. ஒரு வேளை அரவிந்தனை மணக்க மறுத்தால் அரவிந்தன் குற்ற உணர்ச்சியில் குன்றி விடுவானோ என நினைத்தும் வாயைத் திறக்கவில்லை. உண்மையைக் கூறலாம் என நினைக்கும் போதெல்லாம் ஏதாவது சந்தர்ப்பம் வந்து தடுத்து விடும். இதை நினைத்து பிரகாஷ் வேதனைக் குள்ளானான்.

## 22



அரவிந்தன் தவிப்புடன் நாட்களைக் கடத்தினான். ஆபீஸிற்குப் போனால் அங்கும் ஒரு வேலையும் செய்ய முடியாமல் திண்டாடினான். வீட்டிற்கு வந்தாலும்



தாய், தந்தை, தங்கையுடன் பேசுவதைத் தவிர்த்து அறைக்குள் அடைந்து கிடப்பான். மாலையானால் காரை எடுத்துக் கொண்டு.. கண்மண் தெரியாமல் ஓட்டிக் கொண்டு போய் கடற்கரையில் நிறுத்திவிட்டு.. ஆட்கள் நடமாட்டம் இல்லாத பகுதிக்கு சென்று.. தலைக்கு கைகளை தலையணையாய்க் கொண்டு வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பான். திரும்புவதற்கு நடு இரவிற்கு மேல் ஆகி விடும்.

அரவிந்தனின் தந்தையோ மகனிடம் எதையும் கேட்டுக் கொள்ளாமல்.. அவனுடைய வேலையையும் அதிகப்படியாய் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தார்.

பிரகாஷ் வேறு ஊரில் இல்லாதது கஷ்டமாய் இருந்தது. அருணா சொன்ன கெடு முடிய இன்னும் இரண்டு நாட்கள் இருக்க... தன்னால் தனியாய் இருக்க முடியாது. அப்படியே இருந்தாலும் பைத்தியம் பிடித்து விடும் போலத் தோன்றவே பிரகாஷிற்கு போன் போட்டான்.

"பிரகாஷ் வாடா.. என்னால முடியலடா. நான் தனியா இருந்தேன்... பைத்தியமே பிடிச்சி.. தெருவெல்லாம் அலைய ஆரம்பிச்சிடுவேன்..."

"என்னடா பேசறே? பெரிய பிசினஸ் ஒப்பந்தம் முடியப் போற டைம்ல கிளம்பி வாடான்னா எப்படி முடியும்? கொஞ்சம் யோசிச்சிப்பாருடா. இதனால நம்ம கம்பெனிக்கு எத்தனை கோடிகள் லாபம்ன்னு.. இதை விடுத்து வாடான்னா எப்படி?"

"லாபமும் வேண்டாம்.. ஒரு மண்ணும் வேண்டாம். மனுசன் இங்கே வெந்து.. நொந்துபோய் கிடக்கிறேன். உனக்கு என் மனசை விட கோடிகள் தான் பெரிசா?"

"அரவிந்தா.. நான் இப்படி நடுவிலே வந்தா... அப்பா என்னடா நினைப்பார்? என்னை நம்பி இவ்வளவு பெரிய பொறுப்பை ஒப்படைச்சவருக்கு துரோகம் செய்யச் சொல்றியா? இது நல்லதாடா?"

"எது நல்லது? எது கெட்டதுன்னு எனக்கு தெரியும் அப்பாகிட்ட நான் பேசிக்கிறேன்!"

"டேய்.. டேய்.. இன்னும் நாலு நாள்னே முடிச்சிட்டு வந்துடறேன்டா."

"இன்னும் ரெண்டு நாள்ல அருணாவைப் பார்க்கணும். அவ என்ன சொல்வாளோன்னு நினைச்சி.. நினைச்சி எனக்கு மண்டையே வெடிக்குது.. நான் அணுவணுவா சித்ரவதைப்படறேன். அருணா பிடிவாதக்காரி. நீயில்லாமல் நான் தனியே போக மாட்டேன்... உடனே ப்ளைட் பிடிச்சி வந்து சேர்" கட்டளையிட்டான்.

எதிர்முனையில "அரவிந்தா.. ஏய்... ஏய்" என அவன் கெஞ்சுவதை சட்டை செய்யாமல் செல்லை ஆப் செய்தான்.

அடுத்த நாளே பிரகாஷ் வந்து சேர்ந்தான். அரவிந்தனின் தந்தைக்கோ அதிர்ச்சி.

"அவன் சொன்னான்னு வருவதா... என்னப்பா நீ! உங்களால முடியலன்னு சொல்லியிருந்தா நானாவது போயிருப்பேன். அரவிந்தா.. வரவர உன் போக்கே சரியில்லை... உன் மனசுல என்ன தான் நினைச்சிட்டு இருக்கே? இது போல இருந்தா மத்தவனெல்லாம் நம்மை பின்னுக்கு தள்ளிட்டு முன்னே போயிட்டே இருப்பான். போ..போ.. இனிமே இது மாதிரி எதாவது தப்பு நடந்தது...



நான் பொல்லாதவனாயிடுவேன். பிரகாஷ் உனக்கும் தாம்பா..." எச்சரித்து விட்டு சென்று விட்டார்.

"ஏன்டா இடியட்.. இப்போ உனக்கு திருப்தியா?"

"அவர் கிடக்கிறார்டா... வாடா போகலாம்."

"எங்கே?"

"அருணா வீட்டுக்குத்தான்!"

"அவள் நாளைக்கு தானே வரச் சொன்னா."

"என்னால முடியாதுடா சாமி...! இதுக்கு மேலே அவளைப் பார்க்காம.. பதிலை கேட்காம இருக்க முடியாது. புரிஞ்சிக்கோ பிரகாஷ்."

"சரி வா போகலாம்."

"அருணா என்னை கட்டிக்க சம்மதிப்பா இல்லடா?"

"சம்மதிக்காம எங்கே போயிடுவா! அவள் உன்னை பார்க்கும் போதெல்லாம் ஒரு கூடுதல் ஒளி முகத்தில் தெரியுமே.. கவனிச்சியிருக்கியா? உன்னை கண்டவுடன் அவள் முகம் அந்தி வானமா சிவந்துடும். நீ ஏதாவது வேலைன்னு பாதியிலேயே கிளம்பிப் போயிட்டா அவ முகத்துல ஒரே இருட்டு தான். இதெல்லாம் நீ கவனிக்கவே இல்லையா?"

பிரகாஷ் கேட்க அரவிந்தன் அப்பாவியாய் தலையாட்டினான்.

"ஏய் பிரகாஷ்.. அவ ஆசைப்படி சீக்கிரமே ஸ்கூல் கட்ட அஸ்திவாரம் போடணும். அரசாங்க அனுமதி.. என்ஜினியர்.. காண்ட்ராக்டர் எல்லாம் சீக்கிரமே நடக்

கனும். என் கண்ணம்மாவின் கனவை சீக்கிரமே நனவாக்கனும். புரியுதாடா? காலதாமதம் நடந்துச்சோ.. கொலை... கொலை விழும்" பொய்யாய் மிரட்டி.. சிரித்தான் அரவிந்தன்.

அருணாவின் வீட்டைக் கண்டவர்களுக்கு அதிர்ச்சி. ஏமாற்றம் ஏனென்றால் கதவில் பெரிய பூட்டு தொங்கியது.

பக்கத்து வீட்டுக்கு ஓடினர்.

"பிரகாஷ்... வாப்பா... இந்த அருணா பொண்ணுக்கு கிறுக்கு பிடிச்சிடுச்சா... என்னன்னு தெரியல... அவ அம்மா மறுக்க மறுக்க.. எதையுமே காதுல வாங்கிக்காம காலிப்பண்ணிட்டு போயிடுச்சி.. இருடி என்ன அவசரம்? பிரகாஷும், அரவிந்தனும் வரட்டும். சொல்லிட்டு கிளம்பலாம்ன்னு கெஞ்சிப் பார்த்தாங்க. கேக்கவே இல்லை. ஆபரேஷனுக்கு பிறகு அந்தம்மா இப்பத்தான் நல்லா தேறி வந்தாங்க. இந்த நேரத்துல எங்கே போறோம்ன்னு சொல்லாம போயிடுச்சி.

அழுதுக்கிட்டே ஒரு லெட்டரை நீட்டி 'இதை அரவிந்தன் சாரும், பிரகாஷ் அண்ணாவும் வந்தா கொடுத்துடுங்க. மறக்காம கொடுங்க ஆன்ட்டி'ன்னு கொடுத்தது. அந்த அம்மா உள்ளே ஓடிப்போய் ஒரு கவரை எடுத்து வந்து நீட்டினார்.

பிரகாஷிற்கு அரவிந்தனைப் பார்க்க கஷ்டமாய் போய்விட்டது. ஆயிரம் கனவுகளை கண்களில் தேக்கிக் கொண்டு வந்தவனின்... கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது விட்டால் அந்த அம்மா முன்னாடியே



அழுதுவிடுபவன் போல ஆக தோளை அணைத்து அருகில் இருந்த பிரகாஷ் வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

அரவிந்தன் அவசரமாய் பிரித்துப் படித்தான்.

"அன்புள்ள அரவிந்த்,

இந்த கடிதம் உங்களுக்கு கிடைக்கும்போது.. நான் உங்களையெல்லாம் விட்டு தூரப்போய் இருப்பேன். நீங்கள் கௌசல்யாவிற்கு சொந்தமானவர்... பெரியவர்கள் பார்த்து இருவரையும் இணைத்து நிச்சயமெல்லாம் நடந்து முடிந்தபின்.. இடையில் வந்த நான் தட்டிப்பறிப்பது எந்த விதத்தில் நியாயம்?

அந்தப் பெண்ணின் சாபத்திலும்.. வயிற்றெரிச்சலிலும் நம்மால் வாழ முடியுமா? அப்படியே வாழ்ந்தாலும் என்னால் நிம்மதியாய் வாழ முடியாது. என் மனமே என்னைக் கொன்றுபோட்டு விடும். எனக்கு நேர்ந்தது விபத்து.. என்று எத்தனை முறை சொன்னாலும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறீர்கள். அதனால் நான் இப்படி சொல்லாமல்.. கொள்ளாமல் போகிறேன். என்னை நினைத்து எந்த குற்ற உணர்ச்சியுமே தேவையில்லை. நான் உங்களுக்கு பொருத்தமானவள் அல்ல! என்னை மணந்து கொண்டால் சமூகத்தில் அவமானப்படுவீர்கள். டாக்டர் ஜெயாவிடம் சென்று என்னைச் சுத்தப் படுத்திக் கொண்டேன். நிஜம்! வேண்டுமானால் அவரிடம் ஒருமுறை சென்று உண்மையை அறிந்து கொள்ளுங்களேன்.

என்மேல் உங்களுக்கு உண்மையான அன்பிருந்தால்.. கௌசல்யாவை மணந்து கொள்ள வேண்டும். என் ஆசையை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் யாசிக்கிறேன். செய்வீர்கள் தானே!

உங்கள் குழந்தையை அழித்துவிட்டதற்காக.. உங்களுக்கு என்மேல் கோபம்தானே! அதனால் எவ்வளவு பிரச்சனை? எனக்கு வேறு வழி தெரியவில்லை! என்னை மன்னிக்க வேண்டுகிறேன்!

பிரகாஷ் அண்ணாவை என்னை நினைத்து வருத்தப்படவேண்டாம் என்று சொல்லுங்கள். என்னை நீங்கள் தேடுவதாய்.. தெரிந்த மறுவினாடி பிணமாகிவிடுவேன். இது நிஜம்!

டாக்டர் சொன்ன பொய்யான தகவலால் அவதிப்பட்டதையோ.. என்னிடம் நடந்து கொண்டதையோ.. அதனால்.. ஏற்பட்ட விளைவுகளையோ கௌசல்யாவிடம் சொல்லவேண்டாம். இதெல்லாம் மறக்கப் பட வேண்டிய விஷயங்கள். இயல்பாய் இருங்கள். வருத்தப்பட வேண்டாம். நான் திரும்பவும் கூறுகிறேன். நான் உங்களுக்கு பொருத்தமானவள் அல்ல! நான் வருகிறேன்! ஒரே ஒரு மனவருத்தம். நீங்கள் என் அம்மாவுக்கு செய்த செலவை.. அடைக்கமுடியாத கடன் காரியாய் போகிறேன்.

அரவிந்தன் சார்.. எனக்கு ஒரு சின்ன ஆசை. உங்கள் அழுல்பேபி பட்டுக் கன்னத்தில் ஒரே ஒரு



முத்தம் மட்டும் கொடுத்துக் கொள்ளவா? கற்பனையில்தான்! அனுமதி உண்டா?

இப்படிக்கு

உங்களுக்கு பொருத்தமேயில்லாத

அருணா''

அருணா.. அழுதுகொண்டே எழுதியிருப்பாள் போல.

அங்கங்கே கண்ணீர் துளிகள் பட்டு காய்ந்து இருந்தது. அரவிந்தனுக்கு பாறையில் மோதிக்கொண்டது போல் வலித்தது.

''பாவி.. பாவி.. என்னை ஏமாத்திட்டு போயிட்டாளேடா...' என் மனசை சாகடிச்சிட்டு போயிட்டாளே..! என் குழந்தையையும் அழிச்சிட்டு போயிட்டாளே...! இப்படி செய்வதற்கு பதிலாய் என் கழுத்தை நெரிச்சி கொன்னு போட்டு இருக்கலாம். புயலாய் இருந்த வாழ்க்கையை பூவாய் மலரச் செய்து.. இப்போ ஒரே அடியாய் என்னை.. என்னை பெட்ரோல் ஊற்றி பொசுக்கிய கணக்காய்.. தவிக்கவிட்டுட்டு போயிட்டாளே...'' தலையில் அடித்துக் கொண்டான்.

'அருணா.. நல்ல நடத்தை உள்ளவள். அவள் கால் கேர்ள்னு சொன்னதெல்லாம் பொய்டான்னு சொல்லி சந்தோஷப்படுத்த நினைத்த பிரகாஷ் ஆடிப்போய் விட்டான். ச்சே! சொல்லவே சந்தர்ப்பம் இல்லாமல் போய் விட்டதே. சொன்னால் அரவிந்தனுக்கு இன்னும் வேதனை தான்.

# 23



அரவிந்தன் ரகசியமாய் அருணாவை எங்கு தேடியும் கிடைக்கவில்லை. டி.வி.யிலோ, பத்திரிகையிலோ விளம்பரம் கொடுக்கவும் பயம். அருணா ஒரு கோபக்காரி. விளம்பரத்தைக் கண்டு ஏதாவது செய்து கொண்டால்...

பிரகாஷ் மன்றாடினான். "அருணாவின் ஆசையை நீ நிறைவேத்தனும். அவள் மேல் உனக்கு அன்பிருந்தால்.." எறும்பு ஊற கல்தேயும் என்பது போல... மெதுவாய் அவன் மனதை கரைத்தான்.

அரவிந்தனும் இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு திருமணத்திற்கு சம்மதித்தான்.

அரவிந்தன் பெற்றோர் இந்த முறை நிதானித்தனர். குடும்ப ஜோதிடரிடம் சென்றனர்.

"அரவிந்தனுக்கு இப்போ கிரகங்கள் சரியில்லை... தள்ளிப்போடறது நல்லது. அவசரப்படாதீர்கள்!"

ஐந்து மாதத்திற்கு மேல் முடிந்தது.

பத்திரிகை அடிக்கப்பட்டது.

அரவிந்தனுக்கு திருமணத்தின் மீது வெறுப்பு வந்தது. அவன் உள்ளம் தெரியாமல் பெற்றோர்கள் வேறு தலைகால் புரியாமல் சந்தோசத்தில் மிதந்தனர். அடுத்ததாக



பிரகாஷ் - ப்ரியாவிற்கு திருமணத்தை நடத்திவிட்டால் என்ன என்று கூட யோசித்தனர்.

பள்ளியின் கட்டிடம் ஊரிற்கு ஒதுக்குப்புறமாய் பெரிதாய் வளர்ந்து கொண்டு இருந்தது.

அரவிந்தனுடைய பாழாய்ப்போன மனது 'அருணா.. அருணா' எனப் புலம்புவதை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

'ஏன் இப்படி மாயமாய் மறைந்தாய்? நீ இல்லாத ஆபீஸ் பிடிக்கல.. நீ இல்லாத இந்த உலகமே.. இல்லையில்லை! உயிரோடு வாழவே பிடிக்கவில்லை. என் புலம்பல்கள் உனக்கு கேட்கிறதா அருணா? திருமணம் நெருங்க.. நெருங்க உனது ஞாபகம் அதிகமாகிறதே! இது நல்லதிற்கா? கெட்டதிற்கா? இவ்வளவு நாள் அமைதியாய் இருந்த மனக்கடல் பொங்கி எழுகிறதே!'

'அருணா.. நீ என்னை புரிஞ்சிக்கவே இல்லையே! நீ எப்படிப்பட்டவளாய் இருந்தாலும் ஏற்றுக்கொள்கிறேன் என்று என்னை ஏமாற்றி விட்டாயே! என் மனமெல்லாம் உன்னிடம் இருக்க.. நான் எப்படி கௌசல்யாவுடன் வாழ்வேன்?' அருணா.. நீ ஆசைப்பட்டபடி பள்ளி எவ்வளவு விரைவாய்.. கம்பீரமாய் எழுகிறது தெரியுமா கண்ணே? நான் உன் ஆசைகளையெல்லாம் நிறைவேற்ற... நீ மட்டும் என் ஆசையை காலடியில் போட்டு மிதித்து விட்டாயேடி!'

அரவிந்தனும், அவனுடைய தந்தையும் பத்திரிகையைக் கொடுக்க முதல் முதலாய் கிளம்பும் போது.. பிரகாஷ் மூச்சிரைக்க ஓடிவந்தான்.

"அரவிந்த.. என் தங்கையை டாக்டர் ஜெயாவிடம் சேர்த்திருக்கிறாராம் மாப்பிள்ளை. பேபி நார்மலா பிறக்க வழியில்லையாம். போன் வந்ததுடா.

எனக்கு பயமா இருக்குடா. நீயும் என்னோட வரியா?"

"இந்த வேலையெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். நீ போ அரவிந்தா..." அப்பா அனுப்பி வைத்தார்.

"டாக்டர் ஜெயா ஞாபமிருக்கா?"

"எப்படிடா பிரகாஷ் மறக்க முடியும். என் குழந்தையை அபார்ஷன் பண்ணின பாவி!" வேதனைப்பட்டான்.

"ஹலோ... வாங்க. எந்த சிரமமும் இல்லாம நார்மலா பிடிச்சி.. நானே இதை நினைச்சி பார்க்கலே! ஹாய்.. நீங்க அரவிந்த் தானே? என்ன இது சர்ப்ரைஸ் மேல சர்ப்ரைஸா! உங்க மனைவி வந்துட்டு.. இப்போதானே போனாங்க. நீங்க வெளிநாடு இல்ல போயிருக்கறதா சொன்னாங்க!"

"டாக்டர் நீங்க...? புரியாமல் பதறினான் அரவிந்தன்.

"நீங்க.. அவங்க வயிற்றில் வளரும் குழந்தைக்காக மன்னிச்சுட்டதா கூட சந்தோசமா சொன்னாங்களே!"

டாக்டர் கொஞ்சம் விபரமா சொல்லுங்களேன்." அவசரப்படுத்தினான். டாக்டர் ஜெயாவிற்கு ஆச்சரியம். அவர் சொல்ல ஆரம்பித்தார்.

"உங்க மனைவியை பரிசோதித்துவிட்டு அப்பாவாகப் போறீங்கன்னு சொன்னதற்கு அடுத்த நாள் அருணா இங்க வந்தாங்க."

"டாக்டர் எனக்கு ஒரு உதவி செய்யணும்!"



"சொல்லும்மா.. செய்துடலாம்."

"இந்த குழந்தை தரிச்ச நேரத்தால வீட்ல பிரச்சனைகள் ஏற்படும்ன்னு ஜோசியர் சொன்னதை நம்பி மாமனார், மாமியார், இதை கலைச்சிடச் சொல்றாங்க. இவராலயும் மறுக்க முடியல. அவரும் இது வேண்டாம் என்கிறார். எனக்கு இந்த குழந்தை வேணும்மா. அவங்க மூட நம்பிக்கைக்கு அநியாயமா என் குழந்தை பலி ஆகக்கூடாது. அதனால இதை நீங்க அவங்க வந்து கேட்டா கலைச்சிட்டதா சொல்லணும்."

"வாட்.. வாட்?"

"உங்க பொய்யால என் வயிற்றில் வளரும் ஜீவனுக்கு உயிர் கொடுக்கறீங்க. தயவு பண்ணுங்கம்மா..."

"எவ்வளவு நாளைக்கு மறைக்க முடியும்? அப்புறம் உண்மை தெரிய வந்தா?"

"நான் எப்படியாவது சமாளிச்சிடறேன்."

"நாளைக்கு இக்கட்டுல மாட்டிட்டு தவிக்கப்போறது நீதாம்மா. இதுக்கே பொய் சொன்னவ.. இன்னும் என்ன வெல்லாம் சொல்லியிருப்பாளோன்னு பிரச்சனை வரும். அப்புறம் உன் வாழ்க்கையே பிரச்சனையாயிடும்.

"நான் பார்த்துக்கிறேம்மா.. ப்ளீஸ்.. என் கணவர் வந்து கேட்டா அருணாவுக்கு க்ளீன் பண்ணிட்டேன்னு சொல்லணும்.. கொஞ்சம் கருணை காட்டுங்கம்மா.." என அருணா அழுதாள்.

"நீ நல்லவளா தெரியறே.. உன் குழந்தையை அழிக்க மனசு வரல. உனக்கு உதவறேம்மா.. இது நாளை நடந்தது என் ஏதாவது பிரச்சனையா?"

டாக்டர் முழுசா சொன்னதுத்தான் தெரியும். சொல்ல நேரமில்ல. அவ எங்க இருந்து வருவதா சொன்னாங்கன்னு சொல்லுங்க. ப்ளீஸ்..." மாசாமாசம் செக்கப்புக்கு வருவாளா?

"ஆமாம் ஊட்டியிலே யாரோ தூரத்து உறவாம். அவ அம்மா அங்கே இருப்பதால், பிரசவத்துக்கு நீங்க அங்கே அனுப்பினதா சொன்னாங்க. எதுல போகப்போறேன்னு கேட்டேன். ரெயில்லன்னு பதில் சொன்னா. நீங்க ரெயில்வே ஸ்டேஷனுக்கு வேகமா போனா அவளைப் பிடிச்சிடலாம்" இன்னும் ஒன்று. இனிமே ஊட்டியிலே பாலா டாக்டரிடம் காட்டிக்க சொன்னேன். கார் வேகமாய் ஓடியது.

"பிரகாஷ் எனக்கு என் அருணா வேணும். அவ இல்லேன்னா நான் இல்லடா... இந்த முறை அவளை பார்க்கல.. செத்துப் போயிடுவேன்."

"ஏய் அரவிந்தா என்னடா?"

"வேகமா போடா.. ப்ளீஸ்."

"அரவிந்தா.. நீ என்னை மன்னிக்கணும். இதுக்கு மேலேயும் நான் மூடி மறைச்சி வச்சிருந்தேன்னா மிருகத்தை விட கேவலமானவன் நான்!" புதிராய் பேச...

"என்னடா.. என்ன? எல்லோரும் என்னை ஏதாவது ஒரு வகையில் மிரட்டறீங்க...? திக்கு திசை தெரியாம அல்லாட விடறீங்க? ம்..."

"அருணா நல்லவடா.. கற்புக்கரசி... அருணாவை விபச்சாரின்னு சொல்லச் சொன்னது இந்த பாவிதான்டா. உனக்கும் கௌசல்யாவுக்கும் நடக்க இருந்த கல்யாணம்



நிற்கக் கூடாதுன்னுதான் அப்படி சொல்லச் செய்தேன். எவ்வளவு கெஞ்சினா.. கத்தினா.. துடிச்சா.. உனக்கு நன்மை செய்யறதா நினைச்சி.. பாவம்டா.. அருணாவோட காலை என் கண்ணீரால கழுவணும்டா. இந்த உண்மையை அப்பவே சொல்லியிருந்தா இவ்ளோ தூரம் வந்திருக்காது. மட்டிமாதிரி படிச்சிருந்தும் அறிவில்லாமப் போச்சே!"

அரவிந்தன் துடித்தான்... பின் பூவாய் மலர்ந்தான்.

"ஆரம்பத்துல இருந்தே அருணா மேல.. இனம் புரியாத.. என்னன்னே சொல்லமுடியாத ஈடுபாடு வரும். இவ அப்படிபட்டவளா இருக்கமாட்டான்னு நினைப்பேன். பின்னர் பிரகாஷ் பொய் சொல்லமாட்டான்னு என் மனசை சமாதானப்படுத்தினாலும்.. இந்த பாழாய் போன இதயம் அவளையே நினைச்சிக்கும்... ஆபீஸ்ல என் அருகாமையில இருந்தா குளிர்ந்து போயிடுவேன். இதுக்கு பேர்தான் காதலாடா பிரகாஷ்! அவளுக்கும் என் மேல் காதல் இருக்கும்டா... இல்லாமலா என் பிள்ளையை சுமப்பா.. என் கண்மணி என்னென்ன வேதனையை அனுபவிச்சாளோ...! அது தெரியாம நான் இங்கே புது மாப்பிள்ளை வேஷம் போட இருந்தேனே!"

"என்னையும், அருணாவையும் மாத்தி மாத்தி மட்டமா நினைச்சி.. அடிச்சி நாசப்படுத்திட்டீங்களேடா... நான் ஆண்பிள்ளை. என்னாலயே தாங்க முடியலையே.. அவ எவ்வளவு துன்பப்பட்டிருப்பா.. அருணாவிற்கு அடைக்கலம் கொடுத்து காப்பாற்றி வச்சிருந்தவங்களுக்கு நிறைய செய்யணுமடா." அரவிந்தான் வாய் ஓயாமல் புலம்பினான்.

"புலம்பாதே.. கொஞ்சம் அமைதியா இருடா."

"என் தலையெழுத்து.. இப்படியெல்லாம் புயலடிச்சி வதைப்படணும்ன்னு. பிரகாஷ்.. திரும்பவும் சொல்றேன்டா. அவ இல்லேன்னா நான் இல்லை. அவ மடில தலைவச்சி.. நான் பூராவும் பாடச் சொல்லிக் கேட்கணும். நடக்குமாடா?"

சாலையின் இருபுறமும் திரும்பி.. திரும்பிப் பார்த்துக் கொண்டு வந்தான்.

நட்பா...? காதலா...? மொற்றுவித்தையா? எனத்தெரியாமல் உயிர்விட்ட சூர்யாவின் தம்பி குற்றவாளியா?

அவனிடம் டைம் பாஸ் செய்யவும், பணக்காரத் திமிரில் காதல் நாடகம் போட்ட கௌசல்யா குற்றவாளியா?

தம்பியின் மரணத்திற்கு சம்பந்தமே இல்லாத அரவிந்தனுக்கு பொய் சர்டிபிகேட் கொடுத்த டாக்டர் சூர்யா குற்றவாளியா?

"எது நிஜம்? எது பொய்? எனத் தெரியாமல் படித்திருந்தும்.. பண்பாளனாய் இருந்தும்.. வேறு டாக்டரிடம் செல்லாமல்... தன்னையும் அழித்துக் கொண்டு... அருணா வாழ்க்கையில, குடிபோதையில் தீங்கிழைத்த அரவிந்தன் குற்றவாளியா?

நல்ல பெண்ணை விபச்சாரி எனக்கூற வைத்த பிரகாஷ் குற்றவாளியா?

தன்னைக் கெடுத்தவன்... மணமுவந்து ஏற்றுக் கொள்கிறேன் என்று கெஞ்சியும்.. வேறொரு பெண்ணிற்காக



விட்டுக் கொடுத்து.. வயிற்றுப் பிள்ளையோடு மறைந்த அருணா குற்றவாளியா?

ஆனால் எல்லோரும் ஒவ்வொரு விதத்தில் குற்றம் புரிந்திருக்கிறார்கள். ஆனால் இந்த குற்றங்களுக்கெல்லாம் சிலுவை சுமந்தவர்கள் அருணாவும், அரவிந்தனுமே!

"ஊட்டி எக்ஸ்பிரஸ் போய் பத்து நிமிஷமாகுதே!" அந்த அதிகாரி சொல்ல...

"இந்த முறையும் நான் அருணாவை தவறவிட்டுட்டேன். என் அருணா எனக்கு கிடைக்கவே மாட்டாளா? ஏன் நான் உயிரோடு இருக்கேன்! என்னை விடுடா... தண்டவாளத்தில் தலைவச்சி செத்துப்போயிடறேன்.. அருணா இல்லாத ஒரு வாழ்க்கை எனக்கு வேண்டாம்.." அரவிந்தன் பைத்தியம் பிடித்தவன் போல ஓடினான்.

இந்த முறை சென்னை வந்து அரவிந்தனைப் பார்க்காமல் போக... அருணாவிற்கு மனம் வரவில்லை. அருணாவுக்கு பெத்து பிழைப்போமோ என்று பயம் வந்துவிட்டது. கடைசி முறையாய் கம்பெனி வாசலிலோ.. வீட்டிலிருந்து வெளியே வரும்போதோ.. அரவிந்தனை ஒரே ஒரு முறை கண்ணால் பார்த்துவிட்டுப் போக ஆசைவந்து.. கடைசி நிமிட எண்ணத்தால்.. ரெயிலை விட்டுவிட்டு அங்கிருந்த பெஞ்சில் தலைகுனிந்து கலங்கிக் கொண்டிருந்தவள்.. அரவிந்தனின் குரல் காதில் தேனாய் பாய.. அவனுடைய அலறலையும்.. அவன் ஓடியதையும்.. நிமிர்ந்து பார்த்துவிட்டு கத்தினாள்.

"அரவிந்த்.. அரவிந்த்..."

அந்தக் குரல் அமுதமாய் காதில் ஒலித்து.. இதயத்தில் வழுக்கி நின்றது அரவிந்தனுக்கு.

அருணா தன் மேடிட்ட வயிற்றை தூக்கிக் கொண்டு ஓடிவர... அரவிந்தனும் ஓடி வந்தான்.

அரவிந்தன் அருணாவின் முகத்தை கைகளில் ஏந்திக் கொண்டான்.

"அருணாம்மா... என் உயிரே! வந்துட்டியா? எனக்கு நீ வேணும்! நீயில்லேன்னா செத்துடுவேன் கண்ணம்மா! இந்த முறை என்னை ஏமாத்திட்டு போயிடாதேடா.. நான் உனக்கு செய்த துரோகத்திற்கு மன்னித்து.. என்னை ஏத்துக்கணும்டா.. மாட்டேன்னா நான்.. நான்..."

அவன் வாயினை கைகளால் பொத்தினாள். அவனை அணைத்துக் கொண்டாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அருணா உண்மையாகவே அரவிந்தன் மேல் காதல் கொண்டிருந்தாள்.

'உண்மைக்காதல்' எத்தனை இடர்கள் வந்தாலும் தோற்றதாகவே... சரித்திரமில்லை...!